தொகை நுண்கணிதம்

(பட்டப்படிப்பிற்குரியது)

(திருத்தப்பட்ட பாடத்திட்டத்தின்படி வெளியிடப்படுகிறது)

ஆசிரியர்
இரா. ஆறுமுகம், எம்.ஏ., எல்.டி.,
ஓய்வுபெற்ற முதல்வர்,
அரசினர் பயிற்சிக் கல்லூரி,
புதுக்கோட்டை.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

த.பா.நி. (க.வெ.) வரிசை எண்—322

தொகை நுண்கணிதம்

(பட்டப்படிப்பிற்குரியது)

(திருத்தப்பட்ட பாடத்திட்டத்தின்படி வெளியிடப்படுகிறது)

ஆசிரியர்

இரா. ஆறுமுகம், எம்.ஏ., எல்.டி.,

ஓய்வுபெற்ற முதல்வர்,

அரசினர் பயிற்சிக் கல்லூரி,

புதுக்கோட்டை.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

First Edition—May, 1972

T.N.T.B.S. (C.P.) No. 322

© Tamil Nadu Text Book Society

INTEGRAL CALCULUS

R. Arumugam

Net Price Rs. 9-75
(No discount)

'Published by The Tamil Nadu Text Book Society under the Centrally Sponsored Scheme of Production of books and literature in regional languages at the University level, of Government of India in the Ministry of Education and Social Welfare.'

Printed by
Muthukumaran Press,
Madras-1.

அணிந்துரை

திரு. இரா. நெடுஞ்செழியன்

(தமிழகக் கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர்)

தமிழைக் கல்லூரிக் கல்வி மொழியாக ஆக்கிப் பதினோராண்டுகள் ஆகிவிட்டன. குறிப்பிட்ட சில கல்லூரிகளில் பி.ஏ. வகுப்பு மாணவர்கள் தங்கள் பாடங்கள் அனைத்தையும் தமிழிலேயே கற்று வந்தனர். 1968ஆம் ஆண்டின் தொடக்கத்தில் புகுமுக வகுப்பிலும் (P.U.C.) 1969ஆம் ஆண்டிலிருந்து பட்டப் படிப்பு வகுப்புகளிலும் அறிவியல் பாடங்களையும் தமிழிலேயே கற்பிக்க ஏற்பாடு செய்துள்ளோம். தமிழிலேயே கற்பிப்போம் என முன்வந்துள்ள கல்லூரி ஆசிரியர்களின் ஊக்கம், பிற பல துறைகளிலும் தொண்டு செய்வோர் இதற்கெனத் தந்த உழைப்பு, தங்கள் சிறப்புத் துறைகளில் நூல்கள் எழுதித் தர முன்வந்த நூலாசிரியர்கள் தொண்டுணர்ச்சி இவற்றின் காரணமாக இத் திட்டம் நம்மிடையே மகிழ்ச்சியும் மனநிறைவும் தரத்தக்க வகையில் நடைபெற்று வருகிறது. அவ் வகையில், கல்லூரிப் பேராசிரியர்கள் கலை, அறிவியல் பாடங்களை மாணவர்க்குத் தமிழிலேயே பயிற்றுவிப்பதற்குத் தேவையான பயிற்சியைப் பெறுவதற்கு மதுரைப் பல்கலைக்கழகம் ஆண்டுதோறும் எடுத்துவரும் பெருமுயற்சியைக் குறிப்பிட்டுச் சொல்லவேண்டும்.

பல துறைகளில் பணிபுரியும் பேராசிரியர்கள் எத்தனையோ நெருக்கடிகளுக்கிடையே குறுகிய காலத்தில் அரிய முறையில் நூல்கள் எழுதித் தந்துள்ளனர்.

வரலாறு, அரசியல், உளவியல், பொருளாதாரம், தத்துவம், புவியியல், புவியமைப்பியல், மனையியல், கணிதம், பௌதிகம், வேதியியல், உயிரியல், வானியல், புள்ளியியல், விலங்கியல், தாவரவியல், பொறியியல் ஆகிய எல்லாத் துறைகளிலும் தனி நூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள் என்ற இரு வகையிலும் தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம் வெளியிட்டு வருகிறது.

இவற்றுள் ஒன்றான '**தொகை நுண்கணிதம்**' என்ற இந் நூல் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் **322** ஆவது வெளியீடாகும். இதுவரை **357** நூல்கள் வெளிவந்துள்ளன. இந் நூல் மைய அரசு கல்வி, சமூக நல அமைச்சகத்தின் மாநில மொழியில் பல்கலைக்கழக நூல்கள் வெளியிடும் திட்டத்தின்கீழ் வெளியிடப்படுகிறது.

உழைப்பின் வாரா உறுதிகள் இல்லை ; ஆதலின், உழைத்து வெற்றி காண்போம். தமிழைப் பயிலும் மாணவர்கள் உலக மாணவர்களிடையே சிறந்த இடம் பெறவேண்டும். அதுவே தமிழன்னையின் குறிக்கோளுமாகும். தமிழ்நாட்டுப் பல்கலைக் கழகங்களின் பல்வகை உதவிகளுக்கும் ஒத்துழைப்புக்கும் நம் மனம் கலந்த நன்றி உரியதாகுக.

இரா. நெடுஞ்செழியன்

பொருளடக்கம்

பாகம் I

பக்கம்

1. தொகையிடல்—எளிய முறைகள் ... 1

தொகையிடல் (Integration)—வரையறைக் குட்படாத தொகை (Indefinite Integral)—மாறிலி C-பொது விதிகள்—மாறிலிகளின் மதிப்புக் காணுதல்—அடிப்படைத் தொகை யீடுகள் காணல்—பயிற்சிகள்

2. வடிவ கணிதத்தில் தொகையீட்டின் பயன்கள் ... 17

வடிவ கணிதத்தில் தொகையீட்டின் பயன்கள் (Application in Geometry)—பயிற்சிகள்—இயந்திர இயலில் தொகையீட்டின் பயன்கள் (Application in Mechanics)—பரப்பளவு காணல் (Application to areas) (Definite Integral) பயிற்சிகள் உருளைப் பருமம் காணல் (Finding Volumes of revolution)—பயிற்சிகள்

3. தொகையீடு காணும் முறைகள் .. 26

அடிப்படை அமைப்புகள்-I — தொகையீடு காணும் முறைகள்—பிரதியிட்டுத் தொகை யீடு காணல் (Integration by Substitution) — அடிப்படை அமைப்புகள் —அதிபரவளைவுச் சார்புகள் — பயிற்சிகள் அடிப்படை அமைப்புகளின் தொகுப்பு (Irrational)

4. பகுதிகளாக்கித் தொகை காணும் வாய்பாட்டின் விரிவு ... 42

பகுதிகளாக்கித் தொகை காணும் வாய்பாட்டின் விரிவு (Integration by Parts)—அடிப்படை அமைப்புகள் — பயிற்சிகள்—பலவிதக் கணக்குகள்

பாகம் II

பக்கம்

5. தொகை காணும் முறைகள் ... 59

தொகை காணும் முறைகள் — அடிப்படை அமைப்புகள் — அளவுக்கிணங்கிய இயற்கணிதச் சார்புகளின் தொகை காணல்.

6. அளவுக்கிணங்காச் சார்புகளின் தொகை காணல் ... 91

அளவுக்கிணங்காச் சார்புகளின் தொகை காணல் கோணவிகிதச் சார்புகளும் அதன் படிகளும் (மீள்பார்வை)

7. கோணவிகிதச் சார்புகளை இயற்கணிதச் சார்புகளாக்கித் தொகை காணல் ... 118

8 பகுதிகளாக்கித் தொகை காணும் முறை ... 135

பகுதிகளாக்கித் தொகைகாணும் முறை—கோண கணிதக் குறிப்புகள்

9. வரையறுத்த தொகை ... 160

வரையறுத்த தொகை—ஒரு தொடர்க் கூட்டல் வரையறுத்த தொகைக்கும் வரையறைக் குட்படாத தொகைக்குமுள்ள தொடர்பு—வளை வரைக்குட்பட்ட பரப்பு—சிம்சன் விதி

10. வரையறுத்த தொகைகளின் பண்பாடுகள் ... 210

வரையறுத்த தொகைகளின் பண்பாடுகள்—வரையறைக்குட்பட்ட தொகை காணும் முறையில் விதிவிலக்கு.

11. உருளைப் பருமம் ... 226

உருளைப் பருமம் (Volume of Revolution)—வளைவரையின் நீளம்—உருளைப் பருமத்தின் புறப்பரப்பு

பக்கம்

12 புவிக்கவர்ச்சி மையம் ... 258

புவிக் கவர்ச்சி மையம்—சமதளப்பரப்பு—உருளைப்பருமம் — வளைவரை — புறப்பரப்பு அடர்த்தி மாறியானபோது நிறை மையம்—பாப்பசு தேற்றங்கள் (Theorems of Pappus)

13. நிலை நெம்புத்திறன் ... 290

14. அழுத்தமும் அழுத்த மையமும் ... 311

அழுத்தமும் அழுத்த மையமும்—விசையும் வேலையும் — தொடர் வட்டி விதி

பாகம் III

15. தகாத் தொகையீடுகள் ஒருங்குதல் ... 326

தகாத் தொகையீடுகள் ஒருங்குதல் (Convergence of Improper Integrals) ஒப்புமைத் தொகையீடுகள் (μ—சோதனை)

16. பீட்டா, காமா சார்புகள் ... 353

பீட்டா, காமா சார்புகள் (Beta and Gamma Functions)—பீட்டா சார்புகளின் பண்புகள் காமா சார்பின் பண்புகள்—பீட்டா, காமா சார்புகளையொட்டிய பயிற்சிகள்

17 பன்மாறித் தொகையீடுகள் ... 401

பன்மாறித் தொகையீடுகள் (Multiple Integrals) பன்முறைத் தொகையீடுகள் (Repeated Integrals)—இருமாறித் தொகையீடு—வடிவ கணித விளக்கம்—பரப்பளவு காணல்—பு.க. மையம்—நிலை நெம்புத்திறன் துருவ ஆய எண்களில் பரப்பு (Area in polar Co-ordinates)—பு. க. மையம்—நி. நெ. தி. (C. G. and M. I.) உருளைப் பருமம் காணல் தெக்காட்டின் ஆயத் தொலைவுகள். வளைபரப்பின் கீழ்ப் பருமம் காணல்

பக்கம்

18. வளைவுத் தளங்களின் பரப்பளவுகள் ... 458

வளைவுத்தளங்களின் பரப்பு காணல் (Area of curved surfaces)—உருளை ஆய தூரங்களில் புறப்பரப்பு—மும்மாறித் தொகையீடுகள்—பருமம் காணல்—கோள ஆய எண்களின் பருமம் — பு. க. மையம்—நி.நெ.தி. குத்தாயத் தேற்றம்—இணை ஆயத் தேற்றம்

19. பன்மாறித் தொகையீடுகள் (தொடர்ச்சி) ... 485

பன்மாறித் தொகையீடுகள் (தொடர்ச்சி) எல்லைக் கட்டுப்பாடு — தொகையீட்டு வரிசை மாற்றம் (Change of order of Integration)—பன்மாறித் தொகையீட்டில் அமைப்பு மாற்றம் (Transformation of Multiple Integrals)—சார்புத் துணைக் கோவை (Jacobians) — பன்மாறித் தொகையீட்டில் சார்பு துணைக் கோவையின் பயன்

விடைகள் ... 507

Bibliography ... 541

கலைச்சொற்கள் ... 542

பாகம் I

1. தொகையிடல் – எளிய முறைகள்

§ 1. விளக்கம்

வகைப்படுத்தல் (Differentiation) என்பது x-ன் ஒரு சார்பு மாறும் வீதம் அல்லது வகைக்கெழு காணும் முறையாகும். நுண் கணிதம் பயன்படும் பல துறைகளில் பல இடங்களில் வகைப் படுத்தலுக்கு எதிர் மாறுன முறையைக் கையாள வேண்டியுள்ளது. சார்பு மாறும் வீதம், அல்லது வகைக்கெழு பிறிதொரு சார்பாகக் கொடுக்கப்பட்டு, அதனின்று முதற்சார்பு (Primitive) காண வேண்டி வரும். கொடுக்கப்பட்ட வகைக்கெழுவினின்று அதன் முதற்சார்பு காணும் முறையே தொகையீட்டு முறையாகும் (Integration). **முதற்சார்பும் தொகையீடும் ஒன்றே.** அதன் $\frac{dy}{dx}$ என்ற y என்ற ஒரு தொகையை (Integral) வகைக்கெழுவின் தலைகீழ் மாற்றம் (Inverse) என்றோ, அல்லது கொடுக்கப்பட்ட ஒரு தொடரின் (Series) கூடுதலென்றோ பொருள் கூறலாம். முதலில் கூறிய தலைகீழ் மாற்றம் என்ற பொருள் கூறுவதே சிறந்தது; இதனுல் எளிய முறையில் சார்புகளின் தொகைகள் காண இயலும். எனினும், கூட்டுதல் (Summation) என்ற பொருளே நுண் கணிதம் பயன்படுமிடங்களில் பலனளிக்கிறது. எனவே, இவ்விரு பொருள்களுக்குமுள்ள தொடர்பைக் கண்டறிவது இன்றியமையாத தாகும்.

§ 2. தொகையின் வரையறை (Definition):

x-ஐ ஒட்டிய $f(x)$ என்ற சார்பை வகைக் கெழுவாகப் பெறும் பிறிதொரு சார்பே $f(x)$-ன் தொகையெனப்படும். இத் தொகையை $\int f(x)\, dx$ என்கிறோம்.

$F(x) = \int f(x)\, dx$ என்று சமப்படுத்தி $F(x)$-ஐ தொகைக் குரிய சார்பு (Integral) என்றும் $f(x)$-ஐ தொகுக்கப்படும் சார்பு

(Integrand) என்றும் வழங்குகிரேம். பொதுப்பட, $\frac{d}{dx}F(x)$-ஐ $F'(x)$ எனக் குறித்தால், $\int F'(x)\,dx = F(x)$ எனலாம்.

Sum என்ற சொல்லின் முதலெழுத்தான S மேலும் கீழுமாக நீண்டு $\int$ என்ற வடிவம் பெற்றுத் தொகையீட்டுக் குறியீடாயிற்று. இங்கு dx என்பது $f(x)$ என்ற சார்பு x என்ற மாறியை யொட்டித் தொகுக்கப்படுகிறது என்று பொருள் கொள்ளவேண்டும். வகைக் கெழுவின் தலைகீழ் மாற்றமாகத் தொகை காண எடுத்துக் காட்டு.

x^3-ன் வகைக்கெழு x-ஐ ஒட்டி $= 3x^2$

$$\therefore \int 3x^2 dx = x^3$$

$\tan x$-ன் வகைக்கெழு x-ஐ ஒட்டி $= \sec^2 x$

$$\therefore \int \sec^2 x\,dx = \tan x.$$

தலைகீழ் மாற்ற முறையில் (Inverse) ஒரு சார்பின் தொகையீடு காண ஒரு பொதுப்பட்ட திட்டமில்லை. வகைக்கெழு வாய்பாடு களை (Formulae) நன்கு கற்றுத் தேர்தல் முதன்மையானதாகும். இவ்வாய்பாடுகளைக் கொண்டு தொகையீடு காணும் அடிப்படை அமைப்புகளை (Standard Forms) வகுத்துக் கொள்ளவேண்டும். தொகையீடு காணவேண்டிய கோவைகளை இவ் வடிப்படை அமைப்புகளுக்கு ஏற்றவாறு மாற்றியமைக்கவேண்டும். சரிவர மாற்றியமைக்க-பிரதியிடும் முறைகள், இயல் கணிதம், கோண கணிதம் இவற்றின் வாய்பாடுகள், வெகுவாகப் பயன்படுத்தப் படும்.

இங்குக் கவனிக்கத்தக்கது $\sqrt{1-x^3}$, $\sqrt{\sin x}$, $\frac{\cos x}{x}$ போன்ற பல எளிய சார்புகளுக்குங் கூடத் தொகையிடல் அரிதென்பதே.

§ 3 தொகையிடும்போது தோன்றும் மாறிலி (Arbitrary constant of Integration)

தலைகீழ் மாற்ற (Inverse) முறையில் கிடைக்கும் தொகை தனித் தன்மையுள்ளதல்ல (Not unique). C என்ற மாறிலியின் வகைக் கெழு பூச்சியமாவதால் $f^1(x)$-ன் தொகை $f(x) + C$ எனவும் கூறலாம். இங்கு C என்பது ஏதேனும் ஒரு மாறிலியாகும். $f(x)$ என்பது வரையறைக்கு உட்படாத தொகை (Indefinite Integral) எனப்படும்.

எடுத்துக்காட்டு :

$$\int 3x^2\, dx = x^3 + C;\ \int \sec^2 x \cdot dx = \tan x + C.$$

பயிற்சி : $F_1(x)$, $F_2(x)$ என்ற இரு சார்புகளின் வகைக் கெழுக்கள் $f(x)$ என்ருல், முதலிரு சார்புகளும் ஒரு மாறிலியில் வேறுபடும் என நிறுவுக.

$$F_1(x) - F_2(x) = \phi(x) \text{ என்றும் } \quad \cdots \quad (1)$$

(a, b) இடைவெளியில் $\phi(x)$ தொடர்ச்சியானது என்றும் கொள்வோம்.

இடை மதிப்புத் தேற்றத்தின்படி (Mean Value Theorem),

$$\frac{\phi(a) - \phi(x)}{x - a} = \phi'(x_1), \quad a < x_1 < x \quad \cdots\cdots(2)$$

$$\text{ஆனுல் } \phi'(x) = \frac{d}{dx}[F_1(x) - F_2(x)]$$

$$= \frac{d}{dx}[F_1(x)] - \frac{d}{dx}[F_2(x)]$$

$$= f(x) - f(x) = 0. \text{ கொள்கைப்படி}$$

$$\therefore \quad \phi'(x_1) = 0$$

$$\therefore \quad \phi(x) - \phi(a) = (x - a) \times 0 = 0 \cdots\cdots (2) \text{ லிருந்து}$$

$$\therefore \quad \phi(x) = \phi(a)$$

அதாவது, $F_1(x) - F_2(x) = \phi(a) = C =$ ஒரு மாறிலி (1) லிருந்து

தொகையில் தோன்றும் மாறிலியின் மதிப்பு :

தொகை காணும் போது C என்ற மாறிலி சேர்க்கப்படாமல் தொக்கி நிற்பது மரபு. எனினும் கணக்கீடுகளில் மாறிலி C முதன்மையாக வருவதால் அது மறைந்து நிற்பதை மறவா திருத்தல் வேண்டும்.

ஒரு சார்புக்கும் அதன் தொகைக்கும் குறிப்பிட்ட மதிப்புகள் கொடுக்கப்பட்டிருந்தால் தொகையில் தோன்றும் மாறிலியும் ஒரு குறிப்பிட்டதாகும்.

எடுத்துக்காட்டு :

$\frac{dy}{dx} = 2x - 2$ என்றும், $x = 2$ எனும் மதிப்பிற்கு $y = 3$ ஆகிறது என்றும், கொடுக்கப்பட்டுள்ள போது y-ஐ x-ன் சார்பாகக் காட்டுக.

$$\frac{dy}{dn} = 2x - 2$$

தொகையீடு முறைப்படி

$$y = \int (2x - 2)\, dx$$

$$= x^2 - 2x + C; \quad C\text{-தொகையில் தோன்றும் மாறிலி.}$$

$x = 2, y = 3$ என்று பிரதியிட

$3 = 4 \;\; - 4 + C \quad \therefore \quad C = 3$, குறிப்பிட்ட மாறிலி.

எனவே, $y = x^2 - 2x + 3$ என்பது தொகையின் சார்பாகும்.

தொகையில் தோன்றும் மாறிலியின் வடிவ கணித (Geometric) விளக்கம்.

மேலே கொடுத்த எடுத்துக்காட்டில் வகைக் கெழு $2x - 2$, அதற்குரிய தொகை அல்லது முதற்சார்பு $x^2 - 2x + C$.

இங்கு $2x - 2$ என்பது முதற்சார்பு. $x^2 - 2x + C$-ன் வகைக் கெழு $\frac{dy}{dx}$. அதாவது $y = x^2 - 2x + C$ என்ற பரவளைவின் சாய்வு (slope) ஏதாவதொரு புள்ளியில் $2x - 2$ என்பதாகும்.

மாறிலி C-ன் வெவ்வேறு மதிப்புகளுக்குப் பரவளைவுகள் வரைவோம்.

எடுத்துக்காட்டில் $x = 2$ என இருக்கும்போது பரவளைவுகளின் சரிவு (slope) $\frac{dy}{dx} = 2{\cdot}2 - 2 = 2$; $x = 2$ என்பது Y- அச்சுக்கு இணையான கோடு.

இக்கோடு பரவளைவுகளை வெட்டும் புள்ளிகளில் தொடு கோடுகள் வரைந்தால், அவை $\tan \theta = 2$ என்ற சாய்வுள்ள இணை கோடுகளாகும்.

படத்தில் $x = 2$ எனக்கொண்டு $y = -1, 0, 1, 2, 3, 4$ என்ற மதிப்புகளுக்குப் பரவளைவுகள் வரையப்பட்டுள்ளன.



படம் 1.

$y = x^2 - 2x + C$-ல் $x = 2$ எனப் பிரதியிட்டால்,

$y = 4 - 4 + C, \quad \therefore \quad y = C$ ஆகும்.

ஆதலால் இப்பரவளைவுகள் $C = -1, 0, 1, 2, 3, 4$ என்ற மதிப்புகள் ஏற்றவை.

எனவே, எடுத்துக்காட்டில் கண்ட தொகைச் சார்பு $y = x^2 - 2x + 3$, படத்தில் வரையப்பட்ட பல பரவளைவுகளில் (2, 3) என்ற ஒரு குறிப்பிட்ட புள்ளி வழியாகச் செல்லும் பரவளை வாகும்.

அறிதல் : $x^2 - 2x + C$ என்ற தொகைச் சார்பு கணக்கற்ற, சமமாகவும், ஒன்றுக்கொன்று இணையாகவும் வரைந்த பரவளைவு களைக் காட்டுமென்றும் C-ன் பல்வேறு மதிப்புகளுக்குரிய பரவளைவுகள் ஏதேனுமொரு குத்தாயத்தை வெட்டும் இடை வெளியின் தூரமானது, உரிய மாறிலிகளின் மதிப்புகளின் வித்தியாசமென்றும், எல்லாப் பரவளைவுகளும் நேர் நிலையான புள்ளிகளில் (corresponding points) $2x - 2$ என்ற ஒரே வகைக் கெழு அல்லது சாய்வு (slope) கொண்டதென்றும் அறிகிறோம்.

§ 4. அடிப்படைத் தொகையீடுகள் (Standard Primitives) :

x^n-ன் தொகையீடு காணல் : இது திட்ட அமைப்புகளில் மிக முக்கியமானது. இங்குக் காணவேண்டியது எந்த x-ன் சார்பு, வகையீட்டு முறையில் x^n என்ற வகைக் கெழுவைக் கொடுக்குமென்பதே.

$$\frac{d}{dx}(x^{n+1}) = (n+1)\,x^n$$

$$\frac{d}{dx}\left(\frac{x^{n+1}}{n+1}\right) = \frac{1}{n+1}(n+1)\,x^n = x^n$$

$$\therefore \text{ தலைகீழ் மாற்றப்படி, } \int x^n \cdot dx = \frac{x^{n+1}}{n+1} \quad \text{— (1)}$$

குறிப்பு :

(i) அடிப்படைத் தொகையீடு (1) அளவுக்கிணங்கிய (rational) எல்லா n-ன் மதிப்புகளுக்கும் (— 1 தவிர) பொருந்தும்.

(ii) $n = -1$ எனில் $x^n = x^{-1} = \frac{1}{x}$

ஆனல், $\log_e x$-ன் வகைக் கெழு $\frac{1}{x}$ என அறிவோம்.

$$\therefore \int \frac{1}{x}\, dx = \log_e x$$

எடுத்துக்காட்டுகள் :

1. $\int dx = \int 1 \cdot dx = \int x^0 \cdot dx = \frac{x^{0+1}}{0+1} = x$

2. $\int x^9 \cdot dx = \frac{x^{9+1}}{9+1} = \frac{x^{10}}{10}$

3. $\int \sqrt[3]{x}\; dx = \int x^{\frac{1}{3}}\, dx = \frac{x^{\frac{1}{3}+1}}{\frac{1}{3}+1} = \frac{3}{4}\, x^{\frac{4}{3}}$

4. $\int \frac{1}{x^5}\, dx = \int x^{-5}\, dx = \frac{x^{-5+1}}{-5+1} = \frac{-x^{-4}}{4}$

$$= \frac{-1}{4x^4}$$

5. $\int \frac{1}{x^{\frac{2}{3}}} dx = \int x^{-\frac{2}{3}} dx = \frac{x^{-\frac{2}{3}+1}}{-\frac{2}{3}+1} = \frac{x^{\frac{1}{3}}}{\frac{1}{3}}$

$= 3x$

§ **5.** (*a*) **தொகை காணும்போது கையாளப்படும் பொது விதிகள்:**

விதி 1: குறிப்பிட்ட எண்ணிக்கையுள்ள சார்புகளின் கூடுதலின் வகைக்கெழு, அச்சார்புகளின் வகைக்கெழுக்களின் கூடுதலென்பதறிவோம். இது போலவே

குறிப்பிட்ட எண்ணிக்கையுள்ள சார்புகளின் கூடுதலின் தொகையீடு, அச்சார்புகளின் தொகையீடுகளின் கூடுதலென்பது தெளிவு.

விதி 2: $\frac{d}{dx}[f(x)] = f'(x)$ எனக் குறிப்போம்.

$\frac{d}{dx}[af(x)] = af'(x)$, a ஒரு மாறிலி.

$$\therefore \int a f'(x)\, dx = a f(x) = a \int f'(x) \cdot dx$$

தொகுபடும் சார்பைப் பெருக்கும் ஒரு மாறிலி தொகையீட்டுக் குறிக்கு வெளியிலிருப்பதாகக் கொள்ளலாம்.

எடுத்துக்காட்டுகள்:

1. $\int (5x^4 - 3x^2 + 1)\, dx = 5 \cdot \frac{x^5}{5} - 3\frac{x^3}{3} + x + C$

$= x^5 - x^3 + x + C$

2. $\int (ax^3 + bx^2 + Cx + d)\, dx$

$= a\frac{x^4}{4} + b\frac{x^3}{3} + c\frac{x^2}{2} + dx + C$

3. $\int (2x^2 - 1)^3\, dx = \int (8x^6 - 12x^4 + 6x^2 - 1)\, dx$

$= \frac{8x^7}{7} - \frac{12x^5}{5} + \frac{6x^3}{3} - x + C$

$= \frac{8}{7}x^7 - \frac{12}{5}x^5 + 2x^3 - x + C$

4. $$\int \frac{x^2 - x + 1}{\sqrt{x}} \cdot dx = \int (x^{\frac{3}{2}} - x^{\frac{1}{2}} + n^{-\frac{1}{2}})\, dx$$

$$= \frac{x^{\frac{3}{2}+1}}{\frac{3}{2}+1} - \frac{x^{\frac{1}{2}+1}}{\frac{1}{2}+1} + \frac{x^{-\frac{1}{2}+1}}{-\frac{1}{2}+1} + C$$

$$= \tfrac{2}{5} \cdot x^{\frac{5}{2}} - \tfrac{2}{3}\, x^{\frac{3}{2}} + 2x^{\frac{1}{2}} + C.$$

5. $$\int \frac{(1+x)^3}{x^5}\, dx = \int \left(\frac{1 + 3x + 3x^2 + x^3}{x^5}\right) dx$$

$$= \int (x^{-5} + 3x^{-4} + 3x^{-3} + x^{-2})\, dx$$

$$= \frac{x^{-5+1}}{-5+1} + 3\,\frac{x^{-4+1}}{-4+1} + 3\,\frac{x^{-3+1}}{-3+1} + \frac{x^{-2+1}}{-2+1} + C.$$

$$= -\frac{1}{4x^4} - \frac{1}{x^3} - \frac{3}{2}\,\frac{1}{x^2} - \frac{1}{x} + C.$$

பயிற்சிகள் 1 (*a*)

பின்வருவனவற்றை x-ன் சார்பாகத் தொகையிடுக.

1. x^7, $35x^6$, $\frac{1}{x^8}$, $\frac{15}{x^6}$, $x^{\frac{2}{3}}$, $\frac{1}{x^{\frac{5}{2}}}$

2. $12x^3 - 3x^2 + 6x + 3$

3. $\frac{1}{x^2}$, $\frac{1}{x^{11}}$, $\frac{1}{\sqrt{x}}$, $\frac{1}{\sqrt[3]{x}}$, $\sqrt{x^3}$, $\sqrt[3]{x^2}$, $\sqrt[4]{x^5}$, $\sqrt[5]{x^3}$

4. $x^{\frac{1}{n}}$, $\frac{1}{x^n}$, $\frac{1}{x^{\frac{1}{n}}}$, $x^{\frac{p}{q}}$

5. $14x^6 - 15x^4 + 6x^2 + 1$

6. $x^7 + 5x^5 + 3x^3 + 2x - 5$

7. $(10 - 12x^3 + 3x^4 - x^6) / x^5$

8. $px^4 + qx^3 + rx^2 + sx + t.$

9. $a + bx + cx^2 + dx^3) / x^5$

10. $(2 - 5x)^2$; $(1 - x^3)^2$

11. $(a - x)^3$; $(a + x^2)^3$

12. $\frac{(2x - 3)^2}{x^3}$; $\left(\frac{3x^2 - 2}{x}\right)^2$

13. $\frac{px^2 + qx + r}{x^n}$; $\frac{x^m - x^n}{x^l}$

14. $\left(1 - \frac{2}{x^2}\right)^3$; $\left(3 + \frac{1}{x^3}\right)^3$

15. $\frac{(ax + b)(cx + d)}{\sqrt{x}}$; $\frac{(\sqrt{x} - 2)^2}{\sqrt{x}}$

பயிற்சிகள் 1 (*b*)

1. $\frac{dy}{dx} = 8x^3 - 2x$ என்றும் $x = 2$ எனில் $y = 8$ என்றும் கொண்டு y-ஐ x-ன் சார்பாகக் காட்டுக.

2. $\frac{dy}{dx} = \frac{6}{x^2}$ என்றும் $x = 1$ எனில் $y = 4$ என்றும் கொண்டு y-ஐ x-ன் சார்பாக்குக.

3. $\frac{dy}{dx} = \sin x$, $x = \frac{\pi}{3}$ என்ற மதிப்பிற்கு $y = 2$ ஆனல், y-ஐ x-ன் சார்பாகக் காண்க.

4. ஒரு வளை வரையின் (x, y) என்ற ஏதாவதொரு புள்ளியில் அதன் சாய்வு (Slope) $3x - 4$ என்றுல் அதன் பொதுச் சமன் பாட்டை எழுதுக.

5. (x, y) என்ற ஏதாவதொரு புள்ளியில் சாய்வு (slope) $2 - \frac{3}{x^2}$ கொண்ட வளைவரைகள் யாவை?

6. ஆதி $(0, 0)$ வழியாகச் செல்லும் ஒரு வளை வரையின் சாய்வு அதன் மேலுள்ள (x, y) என்ற ஏதாவதொரு புள்ளியில் $x^2 + x$ என்றுல் அதன் சமன்பாடு காண்க.

7. $x^2 - x$-ஐச் சாய்வாகக் கொண்டு $(3, 1)$ என்னும் புள்ளியின் வழியாகச் செல்லும் வளைவரை யாது ?

8. $(4, 5)$ என்ற புள்ளியின் வழியாகச் செல்லும் ஒரு வளைவரையின் சாய்வு $\frac{1}{\sqrt{x}}$ எனில் அதன் சமன்பாடு என்ன ?

§ 5 (b) பொது விதிகள் (தொடர்ச்சி)

விதி 3. $\int x^n\, dx = \frac{x^{n+1}}{n+1}$, $(n \neq 1)$, இவ்வமைப்பில் x வருமிடத்து $x + b$ (b ஒரு மாறிலி) வந்தால் அமைப்பில் ஏற்படும் மாற்றத்தைக் காண்போம்.

$f(x) = y$ எனக் கொண்டு $f(x)$-ன் வகைக் கெழுவை $\frac{dy}{dx}$ அல்லது $f'(x)$ என்கிறோம்.

அப்போது $\int f'(x)\, dx = f(x)$ ...(1)

இதில் x இருக்குமிடத்தில் $(x + b)$-ஐ இட்டு எழுத

$\int f'(x + b)\ d(x + b) = f(x + b)$ எனவாகும். ...(2)

ஆனால் $\frac{d(x + b)}{dx} = 1$, b ஒரு மாறிலி

இதை $d\,(x + b) = dx$ எனக் கூறலாம்.

(2)-ல் $d\,(x + b)$-ன் இடத்தில் dx-ஐ இட

$\int f'(x + b)\ dx = f(x + b)$ ஆகும். ...(3)

(1), (3) இவற்றின் தொகையீடுகளான $f(x)$, $f(x + b)$ என்ற அமைப்புகள் ஒன்றாக இருப்பதைக் கவனிக்கவும்.

எடுத்துக்காட்டாக :

$$\int x^n\, dx = \frac{x^{n+1}}{n+1} \text{ என்ற அமைப்புப்படி}$$

$$\int (x + 1)^n\ dx = \frac{(x+1)^{n+1}}{n+1}$$

$$\int (x - 2)^n\ dx = \frac{(x-2)^{n+1}}{n+1}$$

$$\int (x + b)^n\ dx = \frac{(x+b)^{n+1}}{n+1} \text{ என அறியலாம்.}$$

x உடன் ஒரு மாறிலியைக் கூட்டியதால் திட்ட அமைப்பு மாருது.

விதி 4. x வருமிடத்து $(ax+b)$ $[a, b$ மாறிலிகள்$]$ வந்தால் அமைப்பில் ஏற்படும் மாற்றத்தைக் காண்போம்.

$$\int f'(x)\, dx = f(x) \qquad \text{— (i)}$$

இதில் x வருமிடத்து $ax+b$-ஐ இடுவோம்.

$$\int f'(ax+b)\, d(ax+b) = f(ax+b) \text{ எனவாகும்.} \qquad \text{— (ii)}$$

ஆனல் $\frac{d}{dx}(ax+b) = a$, a-யும் b-யும் மாறிலிகள்

$$\therefore \quad d(ax+b) = a\,dx \text{ எனலாம்.}$$

இதை (ii) லிட $\int f'(ax+b)\, a\,dx = f(ax+b)$ எனவாகும்.

விதி 2-ன்படி, $a\int f'(ax+b)\, dx = f(ax+b)$

$$\therefore \int f'(ax+b)\, dx = \frac{1}{a} f(ax+b) \text{ எனவாகும்.} \text{—(iii)}$$

(i), (iii) இவற்றில் $f(x)$-ம் $f(ax+b)$-ம் ஒரே அமைப்புள்ளன. ஆனல் (iii)-ல் உள்ள தொகையீடு x-ஐப் பெருக்கும் மாறிலி a யால் வகுக்கப்படுகிறது என்பதைக் கவனிக்க வேண்டும்.

x-ஐ ஒரு மாறிலி பெருக்கினல் தொகையீட்டின் அமைப்பு மாறுவதில்லை. ஆனல் தொகையீடு அம் மாறிலியால் வகுக்கப் படுகிறது.

குறிப்பு : x இருக்குமிடத்து $ax+b$ போன்ற ஒருபடிச் சார்பைத் தவிர வேறுபடியில் $(x^2+1)^n$ அல்லது, $\sin^n x$, $\cos^n x$, $(1+\sin x)^n$ போன்ற சார்புகள் வந்தால், விதிகள் 3, 4 பயனளிக்கா.

எடுத்துக்காட்டுகள் :

(மேற்கண்ட விதிகளையும், கீழே கொடுத்துள்ள அடிப்படை அமைப்புகளையும் பயன்படுத்தித் தொகை காணும் பயிற்சிகள்)

அடிப்படைத் தொகையீடுகள் (Standard Primitives):

1. $\int x^n\, dx = \frac{x^{n+1}}{n+1}$
2. $\int \sin x\, dx = -\cos x$
3. $\int \cos x\, dx = \sin x$
4. $\int \sec^2 x\, dx = \tan x$
5. $\int \operatorname{cosec}^2 x\, dx = -\cot x$

எ. கா.

(i) $\int x^4\, dx = \frac{x^5}{5} \quad \therefore \quad \int (x+2)^4 \cdot dx = \frac{1}{5}(x+2)^5$

$$\int (3x+2)^4\, dx = \frac{1}{5}(3x+2)^5 \times \frac{1}{3}$$

$$= \frac{1}{15}(3x+2)^5$$

$$\int (ax+b)^4\, dx = \frac{1}{5}(ax+b)^5 \times \frac{1}{a} = \frac{(ax+b)^5}{5a}$$

$$\int (a-2x)^4\, dx = \frac{1}{5}(a-2x)^5 \times \frac{1}{(-2)}$$

$$= \frac{-(a-2x)^5}{10}$$

(ii) $\int \cos x\, dx = \sin x \quad \therefore \quad \int \cos(x+\alpha)\, dx$

$$= \sin(x+\alpha)$$

$$\int \cos\left(\frac{\pi}{6}-x\right) dx = \frac{\sin\left(\frac{\pi}{6}-x\right)}{-1}$$

$$= -\sin\left(\frac{\pi}{6}-x\right)$$

$$\int \cos ax\, dx = \sin ax \times \frac{1}{a} = \frac{1}{a}\sin ax.$$

$$\int \cos \frac{1}{3}x \cdot dx = \sin \frac{1}{3}x \times \frac{1}{\frac{1}{3}} = 3 \sin \frac{1}{3}x$$

$$\int \cos(ax+b)\, dx = \sin(ax+b)/a$$

$$= \frac{1}{a}\sin(ax+b)$$

(iii) $$\int \frac{1}{(3-2x)^4}\, dx = \int (3-2x)^{-4}\, dx$$
$$= \frac{\dfrac{(3-2x)^{-4+1}}{-4+1}}{-z}$$
$$= +\frac{1}{6} \cdot \frac{1}{(3-2x)^3}$$

(iv) $$\int \frac{1}{(4x-7)^{\frac{1}{3}}}\, dx = \int (4x-7)^{-\frac{1}{3}}\, dx$$
$$= \frac{\dfrac{(4x-7)^{-\frac{1}{3}+1}}{-\frac{1}{3}+1}}{4} = \frac{3}{8}(4x-7)^{\frac{2}{3}}$$

(v) $$\int \tan^2 x\, dx = \int (\sec^2 x - 1)\, dx$$
$$= \int \sec^2 x\, dx - \int dx$$
$$= \tan x - x.$$

பயிற்சிகள் 1 (*c*)

தொகையீடு காண்க.

1. $\sqrt{1 + \sin 2x}$ 2. $\cot^2 x$

3. $(\tan x + \cot x^2)$ 4. $\dfrac{5 + 4\cos x}{\sin^2 x}$

5. $\dfrac{2 + \sin x}{\cos^4 x}$ 6. $\dfrac{1}{\sin^2 x \cdot \cos^2 x}$

7. $5\cos x - \dfrac{3}{x} + e^{-x}$ 8. $-\dfrac{2}{\sin^2 x} + \dfrac{3}{\cos^2 x}$

9. $\dfrac{1 + \cos 2x}{1 - \cos 2x}$ 10. $\sqrt{1 - \cos 2x}$

குறிப்பு : சில இடங்களில் இரண்டாம் வகைக்கெழு கொடுத்து முதற்சார்பு அல்லது இரு முறை தொகை காண வேண்டி வரும். முதற்றொகையீட்டில் ஒரு மாறிலியும், 2-ம் தொகையீட்டில் பிறிதொன்றுமாக இரு மாறிலிகள் இறுதித் தொகையில் தோன்றும்.

§ 6 மாறிலிகளின் மதிப்பு காணுதல்.

எ. கா. 1.

$\frac{d^2y}{dx^2} = 12x^2 - 24x$ எனக் கொடுத்துள்ளபோது y-ஐ x-ன் சார்பாகக் காட்டுக.

$$\frac{d^2y}{dx^2} = 12x^2 - 24x$$

$$\frac{d\left(\frac{dy}{dx}\right)}{dx} = 12x^2 - 24x$$

$$\therefore \quad \frac{dy}{dx} = \int (12x^2 - 24x) \cdot dx$$

$$= 12\frac{x^3}{3} - 24\frac{x^2}{2} + C$$

$$= 4x^3 - 12x^2 + C$$

$$\therefore \quad y = \int (4x^3 - 12x^2 + C)\, dx$$

$$= 4\frac{x^4}{4} - 12\frac{x^3}{3} + Cx + D$$

$$= x^4 - 4x^3 + Cx + D$$

இங்கு C, D மாறிலிகள்.

எ. கா. 2.

$\frac{d^2y}{dx^2} = (1-2x)^2$ என்றும் $x = 0$ அல்லது 1 என்னும் மதிப்புகள் பெறும்போது $y = 0$ என்றால் y-ஐ x-ன் சார்பாக்குக.

$$\frac{d^2y}{dx^2} = (1-2x)^2 \quad \therefore \quad \frac{dy}{dx} = \int (1-2x)^2 \cdot dx$$

$$\therefore \quad \frac{dy}{dx} = \frac{1}{3}\,\frac{(1-2x)^3}{-2} + C$$

$$= -\frac{1}{6}(1-2x)^3 + C$$

$$y = -\frac{1}{6}\int (1-2x)^3\, dx + \int C.\, dx$$

$$= -\frac{1}{6} \times \frac{1}{4} \frac{(1-2x)^4}{-2} + Cx + D$$

$$= +\frac{1}{48}(1-2x)^4 + Cx + D$$

$y = \frac{1}{48}\cdot(1-2x)^4 + Cx + D$ என்ற சமன்பாட்டில்

$x = 0, y = 0$ என இட, $0 = \frac{1}{48}\cdot 1^4 + C\cdot 0 + D$

$$\therefore \quad D = -\frac{1}{48}$$

$x = 1, y = 0$ என இட, $0 = \frac{1}{48}(1-2)^4 + C\cdot 1 - \frac{1}{48}$

$D = -\frac{1}{48}$

$$= +\frac{1}{48} + C - \frac{1}{48}$$

$$\therefore \quad C = 0$$

$$\therefore \quad y = \frac{1}{48}(1-2x)^4 - \frac{1}{48}$$

பயிற்சிகள் 2

தொகையிடுக.

1. $x^3, (5+x)^3, (5-x)^3, (4x-3)^3, (ax+b)^3$
2. $x^n, (x-a)^n, (2x+3)^n, (5-2x)^n, (ax+b)^n, (C-dx)^n$
3. $\sin x, \cos 4x, \sin nx, \cos \frac{1}{4}x, \sin(ax+b),$

   $\sin(a-bx), \sin\left(\frac{\pi}{4}-x\right)$
4. $\sqrt{x}, \sqrt{1+x}, \sqrt{2-3x}, \sqrt{ax+b}, \sqrt{1+\frac{x}{a}},$ $\sqrt{ax}, \sqrt{a}x$
5. $\frac{1}{x^3}, \frac{1}{(5-2x)^3}, \frac{1}{(3x+1)^3}, \frac{1}{(p-qx)^3}, \frac{1}{(ax-b)^3}$

6. $\sec^2 x, \sec^2(x + \alpha), \sec^2 nx, \sec^2 \frac{x}{n}, \sec^2(ax + b)$

7. $\frac{1}{x^n}, \frac{1}{(2x - 3)^n}, \frac{1}{(3 - 2x)^n}, \frac{1}{(a - x)^n}, \frac{1}{(px - q)^n},$

8. $\frac{1}{x^{\frac{3}{2}}}, \frac{1}{(x - 1)^{\frac{3}{2}}}, \frac{1}{(1 - x)^{\frac{3}{2}}}, \frac{1}{(2 - 5\ )^{\frac{3}{2}}},$

$\frac{1}{(px + q)^{\frac{3}{2}}}$ சார்பிலுள்ள மாறியையொட்டித் தொகை காண்க.

9. $(5y - 3)^5, \quad (a - bt)^{\frac{3}{2}}, (a + bz)^{\frac{1}{n}}$

10. $\frac{1}{(4 - 3t)^{\frac{1}{3}}}, \frac{1}{(1 - u)^{\frac{3}{2}}}, \frac{1}{(a - 3z)^3}$

11. $(p - t)^q, \frac{1}{(9 - 2u)^n} \frac{1}{(b - ny)^{\frac{1}{n}}}$

12. $\cos 3\theta, \sin \frac{\theta}{2}, \cos\left(\frac{\pi}{4} - \theta\right), \cos(n\theta + \alpha)$

13. $\frac{dy}{dx} = 4(3 - x)^3$, $x = 3$ எனும் மதிப்பிற்கு $y = 0$ என்று கொடுத்துள்ள போது, $x = 2$ என்ற மதிப்பிற்கு y-ன் மதிப்பைக் காண்க.

14. $\frac{d^2y}{dx^2} = 18(2 - 3x)^2$ என்ற போது y-ஐ x-ன் சார்பாகக் காண்க.

15. $\frac{d^2y}{dx^2} = 16 \cos 2x$, $x = 0$ அல்லது $\frac{\pi}{2}$ என்னும் மதிப்புகளுக்கும் $y = 0$ என்று கொடுத்துள்ளபோது y-ஐ x-ன் சார்பாகக் காண்க.

16. $\frac{d^2y}{dx^2} = \frac{1}{(1 - x)^3}$, $x = 2$ மதிப்பிற்கு $y = 0 = \frac{dy}{dx}$ என்றால், y-ஐ x-ன் சார்பாக்குக.

2. வடிவ கணிதத்தில் தொகையீட்டின் பயன்கள்

§ **7.** வளைவரைச் சமன்பாடுகளை அவற்றின் வகைக்கெழு கண்டு வளைவரைகளின் பண்புகளை அறிகிறோம். அதுபோலவே தொகையீட்டு முறையில் கொடுக்கப்பட்ட பண்புகளிலிருந்து வளைவரைகளின் இனங்களை அறியக்கூடும்.

எ. கா. 1.

(i) எவ் வளைவரைகளில் ஏதாவதொரு புள்ளியில் அதன் சாய்வு அப்புள்ளியின் x அச்சு தூர வர்க்கத்திற்கு (Square) எதிர் விகிதத்திலிருக்கும்? அவற்றில் (4, 3); (2, 6) ஆகிய புள்ளிகளின் வழியாகச் செல்லும் வளைவரை யாது?

$$\frac{dy}{dx} \propto \frac{1}{x^2},$$ என்று கொடுக்கப்பட்டுள்ளது.

$$\therefore \quad \frac{dy}{dx} = \frac{k}{x^2},$$ k ஒரு மாறிலி

தொகையிட $$y = \int \frac{k}{x^2}\,dx = k \int x^{-2}\,dx$$

$$= -\frac{k}{x} + C$$

$\therefore$ வளைவரைகளின் சமன்பாடு $y = -\dfrac{k}{x} + C$ ஆகும்.

$$xy = -k + Cx$$

அதாவது $x\,(y - C) = -k$ ......(i)

என்ற செவ்வக அதிபரவளைவுகளின் **சமன்பாடாகும்.** கொடுக்கப் பட்ட பண்பையுடைய வளைவரைகள் **அதி பர வளைவு** களாகுமென அறிகிறோம்.

மேலும், சமன்பாடு (i)-ல் $x = 4$ $y = 3$ என இட

$$4\,(3 - C) = -k$$

$$4C - k = 12 \qquad \ldots\ldots(ii)$$

$x = 2, y = 6$ என இட, $2\,(6 - C) = -k$

$$2C - k = 12 \qquad \ldots\ldots(iii)$$

(ii), (iii)-லிருந்து $C = 0,\ k = -12$ எனவாயிற்று.

$\therefore$ சமன்பாடு $xy = 12$

$\therefore$ கொடுத்துள்ள இரு புள்ளிகள் வழியாகச் செல்லும் செவ்வக அதிபரவளைவு $xy = 12$

எ. கா. 2.

எவ் வளைவரைகளில் ஏதாவதொரு புள்ளியில் தொடுகோட்டடி (Sub-tangent), அப்புள்ளியை ஆதியுடன் இணைக்கும் கோட்டின் சாய்வுக்கு நேர் விகிதத்திலிருக்கும்?

ஏதாவதொரு புள்ளி $P\ (x, y)$ எனில்

$$OP\text{-யின் சாய்வு} = \frac{y}{x}$$

$$\text{தொடுகோட்டடி} = y \Big/ \frac{dy}{dx}$$

கொடுத்துள்ளது, $y \Big/ \dfrac{dy}{dx} = k \cdot \dfrac{y}{x}$, k ஒரு மாறிலி.

$$\text{அதாவது } \frac{dy}{dx} = \frac{x}{k}$$

$$y = \int \frac{x}{k} dx = \frac{1}{k} \int x \cdot dx = \frac{1}{k} \cdot \frac{x^2}{2} + C.$$

$$y = \frac{x^2}{2k} + C.$$

எனவே வேண்டிய வளைவரைகள் பரவளைவுகளாகும். அவற்றின் அச்சுகள் y ஆயத்தின் மேல் அமையும்.

எ. கா. 3.

ஒரு வளைவரையில் ஏதாவதொரு புள்ளியில் $\frac{d^2y}{dx^2}$ அப் புள்ளியின் x அச்சு தூரத்தின் முப்படிக்கு எதிர்விகிதத்திலுள்ளது. அவ் வளைவரை (3, 2) என்ற புள்ளி வழியாகச் சென்று $7x + y = 11$ என்ற நேர்கோட்டை (1, 4) என்ற புள்ளியில் தொடுமானல், அதன் சமன்பாட்டைக் காண்க.

$$\frac{d^2y}{dx^2} = \frac{k}{x^3}$$

$$\frac{dy}{dx} = \int \frac{k}{x^3}\, dx = -\frac{k}{2x^2} + C$$

$$\therefore \quad y = \int \left(-\frac{k}{2x^2} + C \right) dx$$

$$= \frac{k}{2x} + Cx + D$$

இந்தச் சமன்பாட்டில் $x = 3,\ y = 2$ என இட

$$2 = \frac{k}{6} + C \cdot 3 + D \quad i.e. \quad \frac{k}{6} + 3C + D = 2 \quad \text{...(i)}$$

$x = 1,\ y = 4$ என இட $\quad 4 = \frac{k}{2} + C + D \quad$ ...(ii)

(ii) — (i) $\quad \frac{k}{3} - 2C = 2;\ k - 6C = 6 \quad$ ...(iii)

(1, 4) என்ற புள்ளியில் வளைவரையின் சாய்வும் $7x + y = 11$ என்ற கோட்டின் சாய்வும் ஒன்றே.

(x, y)-ல் இவ் வளைவரையின் சாய்வு $\frac{dy}{dx} = -\frac{k}{2x^2} + C$

$\therefore$ (1, 4)-ல் வளைவரையின் சாய்வு

$$\frac{dy}{dx} = -\frac{k}{2 \cdot 1^2} + C = -\frac{k}{2} + C$$

$7x + y = 11$-ன் சாய்வு $= -7$

$$\therefore \quad -\frac{k}{2} + C = -7$$

$$-k + 2C = -14 \quad \text{...(iv)}$$

(iii) + (iv), $-4C = -8$; $C = 2$

(iv)-லிருந்து $K = 18$

(i)-லிருந்து $D = -7$

எனவே வளைவரை

$$y = \frac{9}{x} + 2x - 7$$

பயிற்சிகள் 3

1. சாய்வு x-அச்சு தூரத்திற்கு நேர் விகிதத்திலிருக்கும் வளைவரைகள் யாவை ?

2. எவ்வளைவரைகளில் செங்கோட்டடி (Sub-normal) x-அச்சு தூரத்திற்கு நேர் விகிதத்திலிருக்கிறது ?

3. எவ்வளைவரைகளில் சாய்வு x-அச்சு தூரத்தின் n-படிக்கு (power) நேர் விகிதத்திலுள்ளது ?

4. செங்கோட்டடி ஒரு மாறிலியாயுள்ள வளைவரைகள் யாவை ?

5. எவ்வளைவரைகளில் x-அச்சு, செங்கோட்டடி (sub-normal) இவற்றின் கூடுதல் ஒரு மாறிலியாகும் ?

6. எவ்வளைவரைகளில் x-அச்சு, செங்கோட்டடி இவற்றின் பெருக்குத்தொகை, குத்தாயத்தின் இருபடிக்கு நேர் விகிதத்திலிருக்கும் ?

7. ஏதேனும் ஒரு புள்ளியில் ஒரு வளைவரையின் சாய்வு அப்புள்ளியை ஆதியோடு சேர்க்கும் நேர்கோட்டின் சாய்வுக்கு எதிர் விகிதத்திலுள்ளது. அவ்வளைவரையின் பொதுச் சமன்பாடு என்ன ?

8. எந்தவளைவரைகளில் செங்கோட்டடி குத்தாயத்தின் இருபடிக்கு நேர் விகிதத்திலுள்ளது ?

9. (1, 6); (2, 10) என்ற புள்ளிகளின் வழியாகச் செல்லும் ஒரு வளைவரையின் சாய்வு ஏதேனும் ஒரு புள்ளியில், அதன் x-அச்சு தூரத்தின் இருபடிக்கு எதிர் விகிதத்திலுள்ளது. அவ்வளைவரை யாது ?

10. ஒரு வளைவரை $y = 2x + 1$ என்ற கோட்டை (2, 5) என்ற புள்ளியில் தொடுவதோடு (1, 4) என்ற புள்ளி வழியாகவும் செல்லுகிறது. அதன் மேலுள்ள ஒவ்வொரு புள்ளியிலும்

$x^3 \dfrac{d^2y}{dx^2}$ ஒரு மாறிலியாயின் வளைவரையின் சமன்பாட்டைக் காண்க.

11. ஒரு வளைவரையின் சாய்வு, x-ன் ஒரு படிச்சார்பு. அது ஆதி வழியாகச் செல்வதோடு (2, 4) என்ற புள்ளியில் மீப்பெரு மதிப்பு (Maximum) உள்ளதெனில் அவ்வளைவரை யாது.

12. ஒரு வளைவரையின் $\dfrac{d^2y}{dx^2}$, x-அச்சு தூரத்திற்கு நேர் விகிதத்திலுள்ளது. அவ்வளைவரை (1, 0) வழியாகச் சென்று, $y = 2x - 1$ என்ற கோட்டை (2, 3)-ல் தொடுகிறதெனில் அதன் சமன்பாட்டைக் காண்க.

13. ஆதிப்புள்ளியில் மீச்சிறுமதிப்பும் ஏதேனுமொரு புள்ளியில் $\dfrac{d^2y}{dx^2} = 6 - 12x$ என்றுமுள்ள ஒரு வளைவரை (1, 1) என்ற புள்ளியில் மீப்பெரு மதிப்புள்ளது என நிறுவுக.

14. ஒரு வளைவரையில் $x^4 \left(\dfrac{d^2y}{dx^2} - 18 \right) = 192$. அது $(1, 0)$; $(-\frac{4}{3}, 0)$ என்ற புள்ளிகளில் x-அச்சை வெட்டுகிறதெனில் அதன் சமன்பாடு யாது ?

§ 8. இயந்திர இயலில் (Mechanics) தொகையீட்டின் பயன்கள் :

ஒரு குறிப்பிட்ட இடத்திலிருந்து ஒரு நகரும் புள்ளி t அலகு காலத்தில் சென்ற தூரம் s அலகுகளெனில், அப்புள்ளியின் திசைவேகம் (Velocity) $\dfrac{ds}{dt}$ என்றும், முடுக்கம் (Acceleration) $\dfrac{d^2s}{dt^2}$ என்றும் அறிவோம். $\dfrac{ds}{dt} = v$ என்றும் $\dfrac{d^2s}{dt^2} = \dfrac{dv}{dt} = v\dfrac{dv}{ds}$ என்றும் அறிவோம். s-ன் மதிப்பை t-ன் கோவையாகப் பெற்ற போது மேற்கண்ட வாய்பாடுகளைக் கொண்டு எக்கணத்திலும் திசைவேகத்தையும், முடுக்கத்தையும் கணக்கிடலாம்.

அதுபோலவே தொகையீடு முறையில் திசைவேகமோ அல்லது முடுக்கமோ, t, s கொண்ட சார்பாகக் கொடுக்கப் பட்டிருந்தால், எக்கணத்திலும் முறையே சென்ற தூரத்தையும், செல்லும் திசைவேகத்தையும் கணக்கிடக் கூடும்.

எ. கா. 1

ஒரு நேர்கோட்டில் செல்லும் புள்ளியின் முடுக்கம் α எனும் மாறிலியெனின், t அலகு காலத்தில் அப்புள்ளியின் திசை வேகத்தையும் சென்ற தூரத்தையும் காண்க.

$t = 0$ எனும் போது $s = 0$, $v = u$ என்போம்.

1. கணக்கில் முடுக்கம்

$$\frac{d^2 s}{dt^2} = \alpha \quad \therefore \quad \frac{ds}{dt} = \alpha t + C, \ C \text{ ஒரு மாறிலி}$$

ஆனால் $t = 0$ என்றபோது $\dfrac{ds}{ot} = v = u$

$\therefore \quad u = \alpha \cdot 0 + C$ ie $C = u$

$\therefore \quad t$ காலத்தில் திசைவேகம், $v = u + \alpha t$ ... (i)

2. (i) $\dfrac{ds}{at} = u + \alpha t$ யிலிருந்து

$$s = ut + \alpha \frac{t^2}{2} + B, \ B \text{ ஒரு மாறிலி}$$

ஆனால் $t = 0$ என்றபோது $s = 0$

$\therefore \quad 0 = 0 + 0 + B$ ie $B = 0$

$\therefore \quad t$ காலத்தில் சென்ற தூரம்

$s = ut + \frac{1}{2} \alpha t^2$ ... (ii)

3. s தூரத்தில் வேகம் v காண

$\dfrac{d^2 s}{dt^2} = v \dfrac{dv}{ds}$ என்ற வாய்பாடு கொண்டு

$$v \frac{dv}{ds} = \alpha \therefore v\, du = \alpha\, ds$$

$$\therefore \int v\,dv = \int \alpha\, ds, \ \alpha \text{ ஒரு மாறிலி}$$
$$= \alpha \int ds$$

$$\therefore \frac{v^2}{2} = \alpha s + A, \ A \text{ ஒரு மாறிலி}$$

ஆனால் $s = 0$ என்றபோது $v = \frac{ds}{dt} = u$

$$\therefore \quad \frac{u^2}{2} = \alpha \cdot 0 + A \qquad ie\ A = \frac{u^2}{2}$$

$$\therefore \quad \frac{v^2}{2} = \alpha \cdot s + \frac{u^2}{2}$$

$\therefore$ s தூரத்தில் வேகம், $v^2 = u^2 + 2\alpha s$ ... (iii)

$$v = u + \alpha t \qquad \text{... (i)}$$

$$s = ut + \tfrac{1}{2} \alpha t^2 \qquad \text{... (ii)}$$

$$u^2 = u^2 + 2 \alpha s \qquad \text{... (iii)}$$

இவை மூன்றும் சமமான முடுக்கத்துடன் ஒரு நேர் கோட்டில் செல்லும் ஒரு பொருளின் இயக்க சமன்பாடுகள். இவை இயக்கவியல் (Dynamics) வாய்பாடுகளாகும்.

எ. கா. 1.

ஒரு பொருள் நொடிக்கு 40 அடி வீதம் செங்குத்தாக மேலே எறியப்படுகிறது. புவிக்கவர்ச்சி தவிர பிறிதொரு கீழ்நோக்கி இழுப்புச் சக்தி அப்பொருளின் மேல் இயங்குகிறது. இவ் விழுப்புச் சக்தி பொருள் எறியப்பட்டதிலிருந்து காலம் t-க்கு நேர் விகிதத்திலிருக்கிறது. 1 நொடியின் முடிவில் அதனளவு 16 அடி நொடி நொடிக்கு, (feet per sec. per sec.) என்றால் அப்பொருள் எவ்வளவு உயரம் செல்லும் ?

பொருளின் மேல், கீழிழுப்பு சக்தி $= k\,t$ (k ஒரு மாறிலி). இங்கு $t = 1$ எனும்போது இழுப்பு சக்தி $= 16$

$$\therefore \quad 16 = k \cdot 1 \quad ie\ k = 16$$

புவிஈர்ப்பு சக்தி $= g$

மொத்த எதிர்ப்பு சக்தி $= g + 16\,t$

பொருளின் நிறை $= 1$ எனக் கொண்டால்

$F = m \cdot a$ என்ற வாய்பாட்டின்படி

$F = a.$

ஆகையால், சக்தி = முடுக்கம்

$$= \frac{d^2s}{dt^2} \text{ எனவாகும்.}$$

$$\therefore \quad \frac{d^2s}{dt^2} = -(g + kt) = -g - 16\,t = -32 - 16\,t$$

தொகைப்படுத்த, $\frac{ds}{dt} = v = -32\,t - 8\,t^2 + C$ (C ஒரு மாறிலி) (i)

கணக்கில் $t = 0$ எனும்போது $v = 40$

$\therefore \quad 40 = -0 - 0 + C \quad ie\ C = 40$

(i) $\frac{ds}{dt} = -32\,t - 8\,t^2 + 40$ எனவாகும்.

$\therefore \quad v = -32\,t - 8\,t^2 + 40.$

பொருள் மிகைஉயரம் சென்றபோது $v = 0$

$\therefore \quad 40 - 32t - 8t^2 = 0$

அதாவது, $t^2 + 4t - 5 = 0$ என்ற சமன்பாடுகிடைக்கும். இதற்குத் தீர்வுகாண, $(t + 5)(t - 1) = 0$

$\therefore \quad t = 1$ அல்லது $t = -5$

ஆதலால், நொடியில் பொருள் அதிகதூரம் சென்றிருக்கும். சென்ற தூரத்தைக் காண மறுமுறையும் தொகையீடு செய்தால்,

$$\frac{ds}{dt} = 40 - 32t - 8t^2$$

$$\therefore \quad s = 40t - 16t^2 - \frac{8}{3}\,t^3 + B, \text{ (}B\text{ ஒரு மாறிலி)}$$

ஆனல் $t = 0$ எனும்போது $s = 0$

$\therefore \quad 0 = 0 - 0 - 0 + B \qquad \therefore \quad B = 0$

அதாவது, $s = 40t - 16t^2 - \frac{8}{3}\,t^3$ எனவாகும். மிக அதிகதூரம் சென்றபோது $t = 1$ எனக் கண்டோம்.

$$\therefore \quad \text{மிக அதிகதூரம் } s = 40\cdot 1 - 16\cdot 1^2 - \frac{8}{3}\cdot 1^3$$

$$= 40 - 16 - 2\tfrac{2}{3} = 21\tfrac{1}{3} \text{ அடி.}$$

பயிற்சிகள் 4

1. ஒரு நகரும் புள்ளியின் முடுக்கம் புறப்பட்டு t நொடிகளுக்குப்பிறகு 18-2t அடி நொடி நொடிக்கு(feet per sec. per sec.)

என்றுள்ளது. அதன் தொடக்க வேகம் 20 அடி/நொடி என்றால் 3 நொடி முடிவில் அதன் வேகத்தையும் சென்ற தூரத்தையும் கணக்கிடுக.

2. u அடி/நொடி தொடக்க வேகமுள்ள ஒரு நகரும் புள்ளியின் முடுக்கம் $2 \cos \frac{\pi t}{6}$ அடி நொடி நொடிக்கு என்றால் 3 நொடியின் முடிவில் அதன் வேகத்தையும் சென்ற தூரத்தையும் காண்க.

3. 4 அடி/நொடி தொடக்க வேகமுள்ள ஒரு நகரும் புள்ளியின் முடுக்கம் $\sqrt{4+2t}$ அடி நொடி நொடிக்கு என்றால் 6 நொடியில் அது சென்ற தூரத்தையும் 16 நொடிக்குப் பிறகு அதன் வேகத்தையும் கணக்கிடுக.

4. 40 அடி/நொடி தொடக்க வேகமும் $(7 - 2s)$ அடி நொடி நொடிக்கு என்ற முடுக்கமுள்ள ஒரு நகரும் புள்ளி எவ்வளவு தூரம் செல்லும் ?

5. அசைவற்ற நிலையிலிருந்து நேர் கீழே விழும் ஒரு பொருளை புவிஈர்ப்பு கீழ்நோக்கியும், விழும் காலத்திற்கு நேர் விகிதத்தில் மற்றொரு இயக்கம் மேல் நோக்கியும் இழுக்கின்றன. மற்றொரு இயக்கத்தின் முடுக்கம் 2 நொடிகளின் இறுதியில் 20 அடி நொடி நொடிக்கு என்றால், 6 நொடிகளின் இறுதியில் பொருளின் வேகத்தையும் விழுந்த தூரத்தையும் காண்க.

6. முன் கணக்கில் மேல் நோக்கி இழுக்கும் இயக்கம் பொருள் விழும் தூரத்திற்கு நேர் விகிதத்திலிருப்பின், 5 அடி விழுந்தபோது அதன் முடுக்கம் 20 அடி நொடி நொடிக்கு என்று கொண்டு 15 அடி விழுந்தபோது பொருளின் வேகத்தைக் கணக்கிடுக.

7. ஆதியிலிருந்து புறப்படும் ஒரு புள்ளியின் முடுக்கம் t காலத்தில் x, y அச்சுகளுக்கு இணையாக முறையே $6t$, 4 அடி நொடி நொடிக்கு எனவிருந்தால் அப்புள்ளி நகரும் பாதையின் சமன்பாட்டைக் காண்க.

8. ஒரு நகரும் புள்ளியின் முடுக்கம் x, y அச்சுகளுக்கு இணையாக முறையே $-4 \sin 2t$ $-4 \cos 2t$ அடி நொடி நொடிக்கு என்றும், அப்புள்ளி $(2, 4)$ என்ற புள்ளியிலிருந்து நொடிக்கு 2 அடி வேகம் வீதம் x-அச்சுக்கு இணையாகச் செல்கிறது என்றும் கொடுத்திருந்தால் அப்புள்ளி நகரும் பாதையின், சமன்பாட்டைக் காண்க.

3. தொகையீடு காணும் முறைகள்

§ 9. பிரதியீட்டுத் தொகையீடு காணல் (Integration by Substitution) :

அடிப்படைத் தொகையீடுகளின் தொகுப்பு I

1. $\int x^n \, dx = \frac{x^{n+1}}{n+1} \quad (n \neq 1)$

2. $\int \frac{1}{x} \, dx = \log x$

3. $\int e^x \, dx = e^x$

4. $\int \sin x \, dx = -\cos x$

5. $\int \cos x \, dx = \sin x$

6. $\int \sec^2 x \, dx = \tan x.$

பிரதியிடல் முறையில் இத்தொகையீடுகளைக் கொண்டு மேலும் சில சார்புகளின் தொகையீடுகளைக் காணலாம்.

பிரதியிடும் முறை (பொது)

$\int f(x) \, dx$ என்ற தொகையில் மாறி x-ஐ z-ஆக மாற்றும் முறையைக் காண்போம்.

$x = \phi(z)$ எனக் கொண்டால்,

$$\frac{dx}{dz} = \phi'(z), \quad \therefore \; dx = \phi'(z) \, dz \text{ எனலாம்.}$$

$\int f(x) \, dx$ என்ற தொகையில் இவற்றைப் பிரதியிட $\int f[\phi(z)] \, \phi'(z) \, dz$ எனவாகும்.

இங்குத் தொகுக்கப்படும் சார்பு z-ஐ ஒட்டியது.

குறிப்பு : 1. x-க்குப் பிரதியிட்டுக் கிடைக்கும் சார்பு, தெரிந்த அடிப்படைத் தொகையீடுகளிலொன்ருக இருக்கவேண்டும்.

2. வரையறைத் தொகையாயின் x-ன் கீழ்மேல் எல்லைகளைப் பிரதியிடும் மாறியின் ஏற்ற கீழ், மேல் எல்லைகளாக்க வேண்டும்.

எ. கா. 1.

$\int e^x \cdot dx = e^x$ என்ற அமைப்பிலிருந்து $\int \frac{1}{x} \cdot dx = \log x$ எனக் காட்டுக.

$x = e^z$ எனில் $z = \log_e{}^x$. (இங்கு x மிகை மதிப்பு கொண்டது.)

$dx = e^z \,.\, dz.$

பிரதியிட $\int \frac{1}{x} \cdot dx = \int \frac{1}{e^z} e^z \cdot dz = \int dz = z.$

$= \log_e x.$

எ. கா. 2.

$\int e^{ax} \cdot dx = \frac{e^x}{a}$ என்ற அமைப்பிலிருந்து

$\int a^x \cdot dx = \frac{a^x}{\log a}$ எனக் காட்டுக.

$a = e^c$ எனக்கொள்க. c ஒரு மாறிலி

$\therefore \quad c = \log_e a$

$a^x = (e^c)^x = e^{cn}$

$\therefore$ பிரதியிட $\int a^x \cdot dx = \int e^{cx} \cdot dx = \frac{e^{cx}}{c}$

$$= \frac{(e^c)^x}{e} = \frac{a^x}{\log_e a}$$

எ. கா. 3.

$\int \sec^2 x \; dx = \tan x$ என்பதிலிருந்து $\int \operatorname{cosec}^2 x dx = -\cot x$ எனக் காட்டுக.

$x = \frac{\pi}{2} -$ = என்க. $z = \frac{\pi}{2} - x$

$dx = -dz \quad \therefore \quad \text{cosec}\left(\frac{\pi}{2} - z\right) = \sec z$

$$\int \text{cosec}^2 x \cdot dx = \int \sec^2 z \cdot (-dz)$$
$$= -\int \sec^2 z \cdot dz = -\tan z$$
$$= -\tan\left(\frac{\pi}{2} - x\right) = -\cot x.$$

எ. கா. 4.

$\int \sec x \tan x \, dx = \sec x$ எனக் காட்டுக.

$$\int \sec x \cdot \tan x \cdot dx = \int \frac{1}{\cos x} \cdot \frac{\sin x}{\cos x} \cdot dx$$

$\cos x = z$ என்க.

$-\sin x \cdot dx = dz.$

$$\int \sec x \cdot \tan x \cdot dx = \int \frac{1}{z} \cdot \frac{(-dz)}{z} = \int \frac{-dz}{z^2}$$
$$= -\int z^{-2} \cdot dz = \frac{(-2^{-2+1}}{-2+1} = +\frac{1}{z}$$
$$= \frac{1}{\cos x} = \sec x$$

எ. கா. 5.

$\int \text{cosec}\, x \cot x \, dx = -\text{cosec}\, z$ எனக் காட்டுக.

$$\int \text{cosec}\, x \cdot \cot x \, dx = \int \frac{1}{\sin x} \cdot \frac{\cos x}{\sin x} \cdot dx$$

$\sin x = z$ என்க. $\cos x \cdot dx = dz.$

$$\therefore \int \text{cosec}\, x \cdot \cot x \cdot dx = \int \frac{1}{z} \cdot \frac{dz}{2} = \int \frac{dz}{z^2} = -\frac{1}{z}$$
$$= \frac{-1}{\sin x} = -\text{cosec}\, x.$$

எ. கா. 6.

$$\int \frac{dx}{\sqrt{1-x^2}} = \sin^{-1} x \text{ எனக் காட்டுக.}$$

$x = \sin\theta$ என்க. $\sqrt{1-x^2} = \sqrt{1-\sin^2\theta} = \cos\theta$,

$dx = \cos\theta \cdot d\theta$ ஆகும், $\theta = \sin^{-1} x$ ஆகும்.

$$\therefore \int \frac{dx}{\sqrt{1-x^2}} = \int \frac{\cos\theta \cdot d\theta}{\cos\theta} = \int d\theta = \theta = \sin^{-1} x$$

எ.கா. 7.

$$\int \frac{dx}{1+x^2} = \tan^{-1}x \text{ எனக் காட்டுக.}$$

$x = \tan\theta$ எனப் பிரதியிட $\theta = \tan^{-1}x$,

$dx = \sec^2\theta \, d\theta$ ஆகும்.

$$\int \frac{dx}{1+x^2} = \int \frac{\sec^2\theta \, d\theta}{1+\tan^2\theta} = \int \frac{\sec^2\theta}{\sec^2\theta} \cdot d\theta$$

$$= \theta = \tan^{-1}x.$$

எ.கா. 8.

$$\int \frac{dx}{x\sqrt{x^2-1}} = \sec^{-1}x$$

$$= -\operatorname{cosec}^{-1}x \text{ எனக்காட்டுக}$$

(i) $x = \sec$ எனில் $\theta = \sec^{-1}x$

$dx = \sec\theta \tan\theta \cdot d\theta.$

$$\sqrt{x^2-1} = \sqrt{\sec^2\theta - 1} = \tan\theta.$$

$$\int \frac{dx}{x\sqrt{x^2-1}} = \int \frac{\sec\theta \tan\theta \cdot d\theta}{\sec\theta \tan\theta}$$

$$= \int d\theta = \theta = \sec^{-1}x.$$

(ii) $x = \operatorname{cosec}\theta$ எனில் $\theta = \operatorname{cosec}^{-1}x$

$dx = -\operatorname{cosec}\theta \cdot \cot\theta \cdot d\theta.$

$$\sqrt{x^2 - 1} = \sqrt{(\operatorname{cosec}^2\theta - 1)} = \cot\theta$$

$$\therefore \int \frac{dx}{x\sqrt{x^2-1}} = \int \frac{-\operatorname{cosec}\theta \cdot \cot\theta \cdot d\theta}{\operatorname{cosec}\theta \cdot \cot\theta}$$

$$= -\int d\theta = -\theta$$

$$= -\operatorname{cosec}^{-1} x.$$

எ.கா. 9

$\int \frac{dx}{a^2 - x^2}$ $(x^2 < a^2)$ மதிப்பிடுக.

$x = a \tanh\theta$ எனில் $\theta = \tanh^{-1}\frac{x}{a}$ $dx = a \cdot \operatorname{sech}^2\theta\, d\theta$

$a^2 - x^2 = a^2(1 - \tanh^2\theta) = a^2 \operatorname{sech}^2\theta$

$$\int \frac{dx}{a^2 - x^2} = \int \frac{a \operatorname{sech}^2\theta \cdot d\theta}{a^2 \operatorname{sech}^2\theta} = \int \frac{1}{a} \cdot d\theta = \frac{1}{a}\theta$$

$$= \frac{1}{a} \cdot \tanh^{-1}\frac{x}{a}$$

எ.கா. 10

$\int \frac{dx}{x^2 - a^2}$ $(x^2 > a^2)$ மதிப்பிடுக.

$x = a \coth\theta$ எனில் $dx = a \operatorname{cosech}^2\theta \cdot d\theta$

$x^2 - a^2 = a^2(\coth^2\theta - 1) = a^2 \operatorname{cosech}^2\theta$

$$\int \frac{dx}{x^2 - a^2} = \int \frac{-a \operatorname{cosech}^2\theta}{a^2 \operatorname{cosech}^2\theta}\, d\theta$$

$$= \frac{-1}{a}\int d\theta = \frac{1}{a}\theta = \frac{-1}{a}\coth^{-1}\frac{x}{a}$$

§ 10. அதிபரவளைச் சார்புகளின் தொகையீடுகள் (Hyperbolic Functions) :

(i) $(i = \sqrt{-1})$ என்ற கற்பனை (imaginary) மதிப்புடன் கோணவிகிதச் சார்புகளாக மாற்றியோ, அல்லது (ii) e^x-ன் சார்புகளாக மாற்றியோ தொகை காணலாம். இது ஒரு நல்ல பயிற்சியுமாகும்.

வரையறைப்படி

$$\cos(ix) = \cosh(x) = \frac{e^x + e^{-x}}{2}$$

$$\sin(ix) = i\sinh x = i\,\frac{e^x - e^{-x}}{2}$$

$$\tan(ix) = i\tanh x = \frac{e^x - e^{-x}}{e^x + e^{-x}}$$

எ. கா. 1.

(i) $\int \cosh x\, dx = \int \cos(ix)\, dx$

$$= \frac{\sin(ix)}{i} = \frac{i\sinh x}{i} = \sinh x$$

(ii) $\int \cosh x\, dx = \int \frac{e^x + e^{-x}}{2}\, dx$

$$= \frac{e^x - e^{-x}}{2} = \sinh x$$

எ. கா. 2.

(i) $\int \sinh x\, dx = \int \frac{\sin(ix)}{i}\, dx$

$$= -\frac{1}{i}\,\frac{\cos ix}{i} = -\frac{1}{i^2}\cosh x$$

$$= +\cosh x$$

(ii) $\int \sinh x\, dn = \int \frac{e^x - e^{-x}}{2}\, dx$

$$= \tfrac{1}{2}(e^x + e^{-x}) = \cosh x$$

எ. கா. 3.

$\int \operatorname{sech}^2 x = \int \sec^2(ix)\, dx$

$$= \frac{\tan ix}{i} = \frac{i\tanh x}{i} = \tanh x$$

எ. கா. 4.

$$\int \operatorname{cos}ec\,h^2\,x = \int i^2 \cos ec^2\,(ix)\,dx$$

$$= -i^2 \cdot \left[\frac{\cot\,(ix)}{i}\right]$$

$$= -i^2\,\frac{\cot h\,x}{i^2} = -\cot h\,x$$

எ. கா. 5.

$$\int \sec h\,x \cdot \tan h\,x \cdot dx$$

$$= \int \sec\,(ix) \cdot \frac{\tan\,(ix)}{i}\,dx = \frac{1}{i}\quad\frac{\sec\,(ix)}{i}$$

$$= -\sec h\,x$$

எ. கா. 6.

$$\int \operatorname{cosech} x \cdot \cot h\,x\,dx$$

$$= \int \frac{1}{\sin h\,x} \cdot \frac{\cos h\,x}{\sin h\,x} \cdot dx$$

$\sin h\,x = z$ எனில் $\cos h\,x\,dx = dz$

$$\therefore \int \frac{\cosh x}{\sinh^2 x}\,dx = \int \frac{d_z}{z^2} = -\frac{1}{z}$$

$$= -\frac{1}{\sin h\,x} = -\operatorname{cosech} x$$

அடிப்படை அமைப்புகளின் தொகுப்பு II

(தொகை காணும்போது தோன்றும் மாறிலி C தொக்கியுள்ளது)

1. $\int x^n \cdot dx = \dfrac{x^{n+1}}{n+1} \quad n \neq 1$
2. $\int dx = x$
3. $\int \dfrac{1}{x}\,dx = \log_e x.$
4. $\int e^x\,dx = e^x$
5. $\int \sin x\,dx = -\cos x$
6. $\int \cos x\,dx = \sin x$

7. $\int \sec^2 x \, dx = \tan x$

8. $\int \operatorname{cosec}^2 x \; dx = -\cot x$

9. $\int \sec x \tan x \, dx = \sec x$

10. $\int \operatorname{cosec} x \cot x \, dx = -\operatorname{cosec} x$

11. $\int \cosh x \, dx = \sinh x$

12. $\int \sinh x \, dx = \cos h\, x$

13. $\int \operatorname{sech}^2 x \, dx = \tan h\, x$

14. $\int \operatorname{cosec} h^2 x \, dx = -\coth x$

15. $\int \sec h\, x \cdot \tan h\, x \, dx = -\operatorname{sech} x$

16. $\int \operatorname{cosech} x \cdot \coth x \, dx = -\operatorname{cosech} x$

17. $\int \frac{dx}{\sqrt{1 - x^2}} = \sin^{-1} x = -\cos^{-1} x$

18. $\int \frac{dx}{a^2 + x^2} = \frac{1}{a} \tan^{-1} \frac{x}{a}$

19. $\int \frac{dx}{x\sqrt{x^2 - 1}} = \sec^{-1} x$ அல்லது $-\operatorname{cosec}^{-1} x$

20. $\int \frac{dx}{1 - x^2} = \tan h^{-1} x$

§. 13. பிரதியிடல் முறையில் மற்றும் சில எடுத்துக்காட்டுகள்;

பொதுப்படையான விதி 1.

$\int f(x^n) n\, x^{n-1} dx \;\; u = x^n$ என்க.

$\therefore \quad \frac{du}{dx} = n\, x^{n-1}$; $du = n \cdot x^{n-1}\, dx$ எனவாகும்.

பிரதியிட $\int f(u) \cdot du$ எனவாகும்.

எ. கா. 1.

$\int (x^3 + 7)^2 \cdot x^2 \cdot dx$

$(x^2 + 7)^2 = u$ என்க. $\quad \therefore \quad 3x^2 \cdot dx = du.$

$\therefore \quad \int (x^3 + 7) \; x^2 \cdot dx = \int u^2 \cdot \frac{du}{3} \cdot = \frac{1}{3} \cdot \frac{u^3}{3}$

$= \frac{1}{9} (x^3 + 7)^3.$

எ. கா. 2.

$$\int x \cdot \sin \cdot x^2 \, dx$$

$x^2 = u$ என்க. $\quad \therefore \quad 2x \cdot dx = du.$

$$\int x \sin \; x^2 \cdot dx = \int \sin u \cdot \frac{du}{2} = -\frac{\cos u}{2}$$

$$= -\frac{1}{2} \cos x^3.$$

பொதுப்படையான விதி 2.

$$\int \frac{f'(x)}{f(x)} \, dx \qquad \ldots \text{(i)}$$

இங்கே $f(x) = u$ என்க.

$$\frac{d f[(x)]}{dx} = \frac{du}{dx}$$

$$f'(x) = \frac{du}{dx}$$

$$\therefore \quad f'(x) \cdot dx = du$$

(i)-ல் பிரதியிட

$$\therefore \quad \int \frac{f'(x)}{f(x)} \cdot dx = \int \frac{du}{u} = \log u$$

$$= \log f(x)$$

எ. கா. 3.

$$\int \frac{(3x^2 + 6x)}{x^3 + 3x^2 + 1} \cdot dx$$

பகுதி $x^3 + 3x^2 + 1 = u$ என்க.

$$\therefore \quad 3x^2 + 6x = \frac{du}{dx}$$

$$\therefore \quad \int \frac{(3x^2 + 6x)}{x^3 + 3x^2 + 1} \cdot dx = \int \frac{1}{u} \, du = \log u$$

$$= \log (x^3 + 3x^2 + 1)$$

எ. கா. 4.

$$\int \frac{(e^x - e^{-x})}{e^x + e^{-x}} \cdot dx.$$

பகுதி $e^x + e^{-x} = u$ என்க.

$$(e^x - e^{-x})\, dx = du$$

$$\therefore \int \frac{e^x - e^{-x}}{e^x + e^{-x}} \cdot dx = \int \frac{du}{u} = \log u$$

$$= \log (e^x + e^{-x})$$

பயிற்சிகள் 7

கீழ் வருவனவற்றில் அவற்றின் மாறியையொட்டித்தொகையீடு காண்க.

1. $2x \sqrt{x^2 + 1}$
2. $\sin^2\theta$
3. $\cos^3\theta$
4. $\sin 3x \cdot \cos 5x$
5. $\dfrac{e^{\tan^{-1}x}}{1 + x^2} \cdot dx$
6. $\dfrac{\sin x}{\cos^{n+1} x}$ $\quad n \neq 1$
7. $\dfrac{\sin^n x}{\cos^{n+2} x}$ $(n \neq -1)$
8. $\dfrac{\sin^n x}{\sqrt{1 - x^2}}$
9. $\dfrac{\operatorname{cosec}^2\theta}{(a + b \cot\theta)^2}$
10. $\dfrac{1}{x(\log x)^n}$ $\quad n \neq 1$
11. $\displaystyle\int_0^{\frac{\pi}{2}} \frac{\cos x}{1 + \sin x}\, dx$
12. $\dfrac{1}{x \log x}$
13. $\dfrac{1 + \cos x}{x + \sin x}$

14. $x \cdot e^{-x^2}$

15. $a^{x^7} \cdot x^{7-1}$

16. $e^{(3a + b\cos\theta)} . \sin\theta$

17. $e^{(\cos^2\theta)} . \sin 2\theta$

18. $e^{\sin^2 x + \cos x}(\sin 2x - \sin x)$

19. $\dfrac{\cos 2x}{\cos x}$

20. $\dfrac{\sqrt{1 - x^2}}{1 - x}$

21. $\displaystyle\int_0^a \frac{x\sqrt{a^2 - x^2}}{\sqrt{a^2 + x^2}}\,dx \quad (x^2 = a^2 \cos 2\theta)$

22. $\dfrac{e^x}{e^x - 1}$

23. $\dfrac{1}{(e^x + 1)(1 + e^{-x})}$

24. $\dfrac{e^x}{x/2}$

25. $\dfrac{e - 1}{\sqrt{e^x - 1}}$

பயிற்சிகள் 8

தொகையீடு காண்க :

1. $\dfrac{\sec(\log x) \cdot \tan(\log x)}{x}$

2. $\sec^2(3x + 2) + \cos 6x$

3. $\sin^3 x \cdot \cos x - \cos^3 x \cdot \sin x$

4. $\cos x \cdot \sin 4x$

5. $\cos 2x \cdot \cos 3x$

6. $\sin mx \cdot \cos nx$

7. $\sin mx \cdot \sin nx$

8. $\sin^2 x \cdot \cos 3x$

9. $\cos^2 x \cdot \sin 4x$

10. $\sin x \cdot \cos 2x \cdot \cos 4x$

11. $\sin x \cdot \sin 2x \cdot \sin 3x$

12. $\int \cos^2 x \cdot \cos 2x \cdot dx$

13. $\dfrac{\sec \theta}{(\sec \theta + \tan \theta)^n} \quad n \neq 0$

14. $\displaystyle\int \frac{\sec^2\theta \cdot d\theta}{(\sec \theta + \tan \theta)^n} \quad n > 1$

15. $\displaystyle\int \frac{\sec \theta \cdot \tan \theta \, d\theta}{(\sec \theta \cdot + \tan \theta)^k} \quad n > 1$

குறிப்பு: 13, 14, 15 கேள்விகளில் $u = \sec \theta + \tan \theta$ எனப் பிரதியிடவும்.

§ 12. அடிப்படை அமைப்புகளின் தொகுப்பு. III

1. $\int \tan x \cdot dx = \log \sec x.$

2. $\int \cot x \cdot dx = \log \sin x.$

3. $\int \operatorname{cosec} x \, dx = -\log (\operatorname{cosec} x + \cot x)$

4. $\int \sec x \cdot dx = \log (\sec x + \tan x)$

5. $\displaystyle\int \frac{dx}{\sqrt{a^2 - x^2}} = \sin^{-1} \frac{x}{a}$

அல்லது $\cos^{-1} \dfrac{x}{a}$

இவ்விரு தொகைகளின் வேறுபாடு $\dfrac{\pi}{2}$ என்ற மாறிலி

6. $\displaystyle\int \frac{dx}{a^2 + x^2 a} = \frac{1}{a} \tan^{-1} \frac{x}{a}.$

$$= -\frac{1}{a} \tan^{-1} \frac{x}{a}.$$

இவ்விரு வகைகளின் வேறுபாடு π என்ற மாறிலி.

7. $$\int \frac{dx}{\sqrt{x^2 + a^2}} = \sin h^{-1} \frac{x}{a}$$

8. $$\int \frac{dx}{\sqrt{x^2 - a^2}} = \cos h^{-1} \frac{x}{a}$$

9. $$\int \frac{dx}{a^2 - x^2} = \frac{1}{2a} \cdot \log \frac{a + x}{a - x}$$

10. $$\int \frac{dx}{x^2 - a^2} = \frac{1}{2a} \log \frac{(x - a)}{(x + a)}$$

குறிப்பு: அடிப்படை அமைப்புகள் 9, 10 இரண்டையும் பகுதிப் பின்ன முறையில் எளிதில் செய்யலாம்.

மேற்கண்டவற்றையெல்லாம் பிரதியிட்டும் செய்யலாம்.

எ. கா. 1. $$\int \tan x \cdot dx = \int \frac{\sin x}{\cos x} \cdot dx$$

$\cos x = u$ எனில் $-\sin x \cdot dx = du$

$$\therefore \int \tan x \,.\, dx = \int -\frac{du}{u} = -\log u = \log u^{-1}$$

$$= \log \frac{1}{u} = \log \frac{1}{\cos x} = \log \sec x.$$

எ. கா. 2. $$\int \cot x \, dx = \int \frac{\cos x}{\sin x} dx$$

$\sin x = u$ எனில் $\cos x \cdot dx = du$

$$\therefore \int \cot x \cdot dx = \int \frac{du}{u} = \log u = \log \sin x.$$

எ. கா. 3.

$$\int \operatorname{cosec} x \cdot dx = \int \frac{\operatorname{cosec} x \, (\operatorname{cosec} x + \cot x) \, dx}{(\operatorname{cosec} x + \cot x)}$$

$\operatorname{cosec} x + \cot x = u$ எனில்

$x = a\cos^3\theta,\ y = a\sin^3\theta$ என்ற வளைவரை சுற்றளவைக் காண்க.

$$x = a\cos^3\theta. \qquad \therefore\ \cos\theta = \left(\frac{x}{a}\right)^{\frac{1}{3}}$$

$$y = a\sin^3\theta. \qquad \sin\theta = \left(\frac{y}{a}\right)^{\frac{1}{3}}$$

$$\left(\frac{x}{a}\right)^{\frac{2}{3}} + \left(\frac{y}{a}\right)^{\frac{2}{3}} = \cos^2\theta + \sin^2\theta = 1$$



படம் 34.

வளைவரையின் உருவம் படத்தில் அச்சுகளையொட்டிச் சீராக உள்ளதால் ஒரு நாற்கூறுப் பகுதியின் நீளத்தை மட்டும் காண்போம்.

$\theta = 0$ எனில் $x = a\,;\ y = 0$

$\theta = \frac{\pi}{2}$ எனில் $x = 0\,;\ y = 1$

$$\frac{dx}{d\theta} = 3a \cdot \cos^2\theta\,(-\sin\theta),\ \frac{dy}{d\theta} = 3a\sin^2\theta \cdot \cos\theta.$$

$$\therefore\ \left(\frac{dx}{d\theta}\right)^2 + \left(\frac{dy}{d\theta}\right)^2 = 9a^2 \cdot \cos^2\theta \cdot \sin^2\theta\,(\cos^2\theta + \sin^2\theta)$$

$$\therefore\ \sqrt{\left(\frac{dx}{d\theta}\right)^2 + \left(\frac{dy}{dx}\right)^2} = 3a \cdot \cos\theta \cdot \sin\theta.$$

இப்போது நாற்கூறுப் பகுதி $s = \int_0^{\frac{\pi}{2}} \sqrt{\left(\frac{dx}{d}\right)^2 + \left(\frac{dy}{d\theta}\right)^2}\, d\theta$

$$= \int_0^{\frac{\pi}{2}} 3a \cdot \cos\theta \cdot \sin\theta \cdot d\theta$$

$$= 3a \left(\frac{\sin^2\theta}{2}\right)_0^{\frac{\pi}{2}} = \frac{3}{2} a \cdot 1$$

∴ முழுச் சுற்றளவு $= 4 \times \frac{3}{2} \cdot a = 6a$

எ. கா. 6.

$4y^2 = (x+2)^3$ என்ற வளைவரையின் நீளத்தை $x = 2$, $x = 7$ என்ற இடைவெளியில் கணக்கிடுக.

$$4y^2 = (x+2)^3, \; y = \frac{(x+2)^{\frac{3}{2}}}{2} \quad \therefore \frac{dy}{dx} = \frac{1}{2} \cdot \frac{3}{2}(x+2)^{\frac{1}{2}}$$

$$1 + \left(\frac{dy}{dx}\right)^2 = 1 + \frac{9}{16}(x+2) = \frac{16 + 9x + 18}{16}$$

$$= \frac{9x + 34}{16}$$

$$\therefore \sqrt{1 + \left(\frac{dy}{dx}\right)^2} = \frac{1}{4}\sqrt{9x + 34}$$

இப்போது $s = \int_2^7 \frac{1}{4}\sqrt{9x+34}\, dx =$

$$\left[\frac{1}{4}\frac{(9x+34)^{\frac{3}{2}}}{\frac{3}{2}} \times \frac{1}{9}\right] = \frac{1}{54}\left[(9x+34)^{\frac{3}{2}}\right]_2^7$$

$$= \tfrac{1}{54}\left[(63+34)^{\frac{3}{2}} - (18+34)^{\frac{3}{2}}\right]$$

$$= \tfrac{1}{54}\left(97^{\frac{3}{2}} - 52^{\frac{3}{2}}\right)$$

§ 38. கோண தூர அளவுகளில் வளைவரையின் நீளம்.



படம் 35-(i)



படம் 35-(ii)

வளைவரையில் P, Q என்பன (r, θ), $(r+\Delta r, \theta+\Delta\theta)$ என்ற கோணதூர அளவுகளுள்ள இரு புள்ளிகள். OQ-க்குச் செங்குத்தாக PM வரையப்பட்டுள்ளது. படம் (i)-ல் θ அதிகரிக்க, r-ம் அதிகரிக்கின்றது. படம் (ii)-ல் θ அதிகரிக்க, r குறைகின்றது. ஆனால் இரண்டிலும் நாண்

$$PQ = PM . \operatorname{cosec} M\hat{Q}P.$$

$\therefore$ வில் $AB = s =$ எல்லை Σ (நாண் PQ)

$$= \text{எல்லை } \Sigma\, (PM \cdot \operatorname{cosec} M\hat{Q}P)$$

$$= \text{எல்லை } \Sigma\, (r \sin \Delta\theta . \operatorname{cosec} M\hat{Q}P)$$

$$= \text{எல்லை } \Sigma \left(r \Delta\theta . \frac{\sin \Delta\theta}{\Delta\theta} \operatorname{cosec} M\hat{Q}P \right)$$

ஆனால் $\Delta\theta \to 0$ எனில் $\frac{\sin \Delta\theta}{\Delta\theta} \to 1$,

$M\hat{Q}P \to \phi$ (i) அல்லது $\pi - \phi$ (ii)

$\operatorname{cosec} M\hat{Q}P \to \operatorname{cosec} \phi$.

$\therefore$ Σ (PQ) ஒரு எல்லையை நாடுவதாகக் கொண்டு

வில் $AB = s = \int_{\alpha}^{\beta} r \operatorname{cosec} \phi \, d\theta = \int_{\alpha}^{\beta} r \sqrt{1 + \cot^2 \phi} \, d\theta$.

ஆனால் $\tan \phi =$ எல்லை $\tan \angle MQP$

$$= \text{எல்லை } \frac{r\triangle\theta}{\triangle r} = r.\frac{d\theta}{dr}$$

$$\therefore \quad \cot\phi = \frac{1}{r}\cdot\frac{dr}{d\theta}$$

இப்போது, $s = \int_{\alpha}^{\beta} r\sqrt{1+\frac{1}{r^2}\left(\frac{dr}{d\theta}\right)^2}\cdot d\theta$

$= \int_{\alpha}^{\beta}\sqrt{r^2+\left(\frac{dr}{d\theta}\right)^2}\cdot d\theta$ எனவாகும்.

இங்கு α, β என்பவை A, B புள்ளிகளின் ஆரக் கோணங்கள்.

குறிப்பு : $\sin\phi = r\frac{d\theta}{ds}$; $\cos\phi = \frac{dr}{ds}$ என்ற வாய்பாடுகள் இங்கு கவனத்திற்குரியவை.

எ. கா.

$r = a\ (1+\cos\theta)$ என்ற நெஞ்சுவளையின் சுற்றளவைக் காண்க.

$$s = 2\int_0^{\pi}\sqrt{r^2+\left(\frac{dr}{d\theta}\right)^2}\,d\theta.$$

$$r = a\ (1+\cos\theta),\ \frac{dr}{d\theta} = -\ a\sin\theta$$

$$\therefore \quad r^2+\left(\frac{dr}{d\theta}\right)^2 = a^2\ (1+\cos\theta)^2 + a^2\sin^2\theta$$

$$= 2a^2 + 2a^2\cos\theta = 2a^2\ (1+\cos\theta)$$

$$= 4a^2\cos^2\frac{\theta}{2}$$

$$\therefore \sqrt{r^2 + \left(\frac{dr}{d\theta}\right)^2} = 2a \cos\frac{\theta}{2}$$

சுற்றளவு, $$s = 2\int_0^{\pi} 2a \cos\frac{\theta}{2}\, d\theta$$

$$= 4a \left(\frac{\sin\frac{\theta}{2}}{\frac{1}{2}}\right)_0^{\pi} = 8\,a\,(1-0)$$

$$= 8a$$

பயிற்சிகள் 36

1. $4y^2 = x^3$ என்ற வளைவரையின் நீளத்தை $x = 0$, $x = 1$ எல்லையில் மதிப்பிடுக.

2. $3ay^2 = x\,(x - a)^2$ என்ற வளைவரையின் வளையத்தின் சுற்றளவைக் கணக்கிடுக.

3. $x = a\,(\theta + \sin\theta)$, $y = a\,(1 + \cos\theta)$ என்ற வளை வரையின் ஒரு வளைவின் நீளமென்ன ?

4. $8a^2\,y^2 = x^2\,(a^2 - 2x^2)$ என்ற வளைவரையின் முழு நீளத்தை மதிப்பிடுக.

5. $r = a$ யிலிருந்து $r = 2a$ வரையில் $r^2 - 2ar \cdot \theta + a^2 = 0$ என்ற வளைவரையின் நீளம் யாது ?

6. $y = \log\,(\sec x)$ என்ற வளைவரையின் நீளத்தை $x = 0$ விலிருந்து $x = \frac{\pi}{3}$ வரையில் காணவும்.

7. $\phi = 0$-விலிருந்து $\phi = \frac{\pi}{4}$ வரையில் $x = \sqrt{2}\,\sin^2\phi$, $y = \sqrt{2}\cos^2\phi$ என்ற நேர்கோட்டின் நீளத்தைத் தொகையீட்டு முறையில் கணக்கிடுக.

8. $x = 0$-விலிருந்து $x = c$ வரையில் $y = c\,\cosh\frac{x}{c}$ என்ற வளைவரையின் நீளத்தைக் கணக்கிடுக.

9. $y = x^2$ என்ற பரவளையின் நீளத்தை (1, 1)-லிருந்து (2, 4) வரை காண்க.

10. $r(1 + \cos\theta) = 2a$-ன் நீளத்தை $\theta = 0, \frac{\pi}{2}$ இடையில் கணக்கிடுக.

11. $r = a \cos^3 \frac{\theta}{3}$ என்ற வளைவரையின் சுற்றளவைக் காண்க.

12. $x = f(t)$, $y = \phi(t)$ என்ற வளைவரையின் நீளம் $t = a$ என்ற புள்ளியிலிருந்து $t = b$ வரையில்

$$\int_a^b [f'(t^2) + \phi'(t^2)] \cdot dt$$ என நிறுவி, $x = (1 - t)^2$, $y = t^2$

என்ற வளைவரை நீளத்தை, அது y-அச்சைத்தொடும் புள்ளியிலிருந்து $y = x$ என்ற கோட்டை வெட்டும் வரையில் கணக்கிடுக.

§ 39. உருளைப்பருமத்தின் புறப்பரப்பு (Surface Area of a solid of revolution)

ஒரு கூம்பின் நுனியில்லாத வெட்டுத் துண்டத்தின் (Frustum) இருவெட்டு முகங்களும் வட்டமானவை. அவ்வட்டங்களுள் ஒழுங்கான, ஒன்றுபோலமைந்த வடிவொத்த (similar and similarly situated) பல கோணங்கள் வரைந்து அவற்றின் நேர்நிலையான (corresponding) முனைகள் PQ, $P'Q'$,......இவற்றை இணைத்தால், $PP'Q'Q$ போன்று பல சரிவகங்கள் ஏற்படும்.



படம் 36

MN என்பது சரிவகம் $PP'Q'Q$-ன் உயரமெனில்

$$PP'Q'Q\text{-ன் பரப்பு} = \tfrac{1}{2}(PP' + QQ') \cdot MN$$

இதுபோன்ற n சரிவகங்களின் மொத்தப் பரப்பு

$$= \tfrac{1}{2} \cdot n\, (PP' + QQ') \cdot MN$$ ∵ பல கோணத்தின் பக்கங்கள் சமம்

$$= \tfrac{1}{2} \left(\begin{array}{c}\text{இரு பல கோணங்களின்} \\ \text{சுற்றளவுகளின் கூடுதல்}\end{array} \right) \cdot MN.$$

$n \to \infty$ ஆகும்போது பல கோணங்களின் சுற்றளவுகள் வெட்டுமுக வட்டங்களின் சுற்றளவுகளை நெருங்கும். $MN \to PQ$-ஐ நெருங்கும்.

$\therefore$ n சரிவகங்களின் பரப்புகளின் கூடுதல்

$\to \frac{1}{2} PQ$ (வெட்டுமுக வட்டங்களின் சுற்றளவுகளின் கூடுதல்)

இதைக் கூம்பின் வெட்டுத் துண்டத்தின் (Frustum) புறப் பரப்பென்கிறோம். கூம்பின் அச்சையொட்டி PQ சுழல்வதால் இப்புறப்பரப்பு உண்டாகிறதென்றும் கூறலாம்.

படம் 37-ல் வளைவரை x–அச்சையொட்டிச் சுற்றும்போது PQ போன்ற ஒவ்வொரு நாணும் ஒரு கூம்பு வெட்டின் (Frustum) புறப்பரப்பை உண்டாக்குகின்றது. $PQ \to 0$ என்றால் கூம்பு வெட்டுத்துண்டங்களின் புறப்பரப்புகளின் கூடுதல் ஒரு எல்லையை நெருங்கும். இவ்வெல்லை மதிப்பை, $BHKC$ என்ற பரப்பு x-அச்சையொட்டிச் சுற்றும்போது ஏற்படும் உருளைப்பருமத்தின் புறப்பரப்பென்கிறோம்.

உருளைப் பருமத்தின் புறப்பரப்பு

$$S = \text{எல்லை} \sum PQ \times \tfrac{1}{2} \times [2\pi y + 2\pi (y + \triangle y)]$$



படம் 37

$$= \text{எல்லை} \sum PQ \cdot 2\pi \left(y + \frac{\triangle y}{2}\right)$$

$$= \text{எல்லை} \sum 2\pi \left(y + \frac{\triangle y}{2}\right) \sqrt{\triangle x^2 + \triangle y^2}$$

$$= \text{எல்லை} \sum 2\pi \left(y + \frac{\triangle y}{2}\right) \cdot \triangle s$$

$$= \int_{s_1}^{s_2} 2\pi\ y \cdot ds \qquad \text{...(i)}$$

மற்றும் S $=$ எல்லை $\Sigma\ 2\pi \left(y + \frac{\Delta y}{2}\right)\sqrt{(\Delta x)^2 + (\Delta y)^2}$

$$= \text{எல்லை}\ \Sigma\ 2\pi \left(y + \frac{\Delta y}{2}\right) \sqrt{1 + \left(\frac{\Delta y}{\Delta x}\right)^2} \cdot \Delta x$$

$$= \int_{x_1}^{x^2} 2\pi\ y \sqrt{1 + \left(\frac{dy}{dx}\right)^2} \cdot dx \qquad \text{...(ii)}$$

$$S = \int_{y_1}^{y_2} 2\pi\ y \sqrt{1 + \left(\frac{dx}{dy}\right)^2}\ dy \qquad \text{...(iii)}$$

$$= \int_{t_1}^{t^2} 2\pi\ y \sqrt{\left(\frac{dx}{dt}\right)^2 + \left(\frac{dy}{dt}\right)^2}\ dt \qquad \text{...(iv)}$$

இங்கு s_1, s_2 ; t_1, t_2 ; (x_1, y_1) ; $(x_2\ y_2)$ என்பவை முறையே B, C புள்ளிகளைக் குறிக்கும்.

குறிப்பு : வளைவரை y-அச்சையொட்டிச் சுற்றிலுண்டாகும் உருளைப்பருமத்தின் புறப்பரப்பு

$$\int_{s_1}^{s^2} 2\pi x \cdot ds$$

எ. கா. 1.

r ஆரையுள்ள ஒரு கோளத்தை அதன் மையத்திலிருந்து ஒரு புறமாக முறையே b, c தூரங்களிலுள்ள சம தளங்கள் வெட்டும் பகுதியின் புறப்பரப்பைக் கணக்கிடுக.

x-அச்சு, $x = b$, $x = c$ என்ற குத்தாயங்கள் $x^2 + y^2 = r^2$ என்ற வட்டம் இவற்றிற்கிடைப்பட்ட பரப்பு x-அச்சையொட்டிச் சுற்றும்போது இவ்வெட்டுப் பகுதி கிடைக்கிறது.

∴ வெட்டுப்பகுதியின் புறப்பரப்பு

$$S = \int_b^c 2\pi y \sqrt{1 + \left(\frac{dy}{dx}\right)^2} \cdot dx$$

$$x^2 + y^2 = r^2;\ 2x + 2y \cdot \frac{dy}{dx} = 0 \qquad \therefore\ \frac{dy}{dx} = -\frac{x}{y}$$

$$\sqrt{1 + \left(\frac{dy}{dx}\right)^2} = \sqrt{1 + \frac{x^2}{y^2}} = \frac{1}{y}\sqrt{x^2 + y^2} = \frac{r}{y}$$

$$\therefore\ S = \int_b^c 2\pi y \cdot \frac{r}{y} \cdot dx = 2\pi r \int_b^c dx$$

$$= 2\pi r\,(c - b)$$

இங்கு $c - b$ = இருதளங்களுக்கிடைத்தூரம்

$c - b$ = விட்டம் $2r$ என்றிட்டால்

$S = 2\pi r\,(2r) = 4\,\pi r^2$, கோளத்தின் புறப்பரப்பாகும்.

எ. கா. 2.

$x^2 = 4ay$ என்ற பரவளைவை அதன் செவ்வகலம் (latus rectum) வெட்டிய பகுதி y-அச்சையொட்டிச் சுற்றுவதால் ஏற்படும் உருளைப் பருமத்தின் புறப்பரப்பைக் காண்க.

பரவளைவு

$$x^2 = 4ay$$

$$\therefore\ x = 2\sqrt{a} \cdot \sqrt{y}$$

$$\frac{dx}{dy} = \sqrt{\frac{a}{y}}.$$

$$\therefore\ S = \int_0^a 2\pi x \sqrt{1 + \left(\frac{dx}{dy}\right)^2} \cdot dy$$



படம் 38

$$S = 2\pi \int_0^a x \sqrt{1 + \frac{a}{y}} \cdot dy$$

$$= 2\pi \int_0^a x \frac{\sqrt{y+a}}{\sqrt{y}} \cdot dy = 2\pi \int_0^a 2\sqrt{a}\sqrt{a+y} \cdot dy$$

$$= 4\pi \sqrt{a} \cdot \frac{2}{3}\Big[(a+y)^{\frac{3}{2}}\Big]_0^a$$

$$= \frac{8}{3}\pi \sqrt{a}\left[(2a)^{\frac{3}{2}} - a^{\frac{3}{2}}\right]$$

$$= \frac{8}{3}\pi \sqrt{a} \cdot a^{\frac{3}{2}}\left(2^{\frac{3}{2}} - 1\right) = \frac{8}{3}\pi a^2 (2\sqrt{2} - 1)$$

எ. கா. 3.

உருள்வளை $x = a(\theta - \sin\theta)$ $y = a(1 - \cos\theta)$. அதன் உச்சியிலுள்ள தொடுகோட்டையொட்டிச் சுழலும் போதுண்டாகும் உருளைப் பருமத்தின் புறப்பரப்பைக் கணக்கிடுக.

உருள்வளையின் மேலுள்ள (x, y) என்ற ஏதேனுமொரு புள்ளி K-ஐ மையமாகவும் KP-ஐ ஆரையாகவும் உடைய ஒரு வட்டத்தை உண்டாக்கும்.

$$\therefore \quad S = \int_0^{2\pi} 2\pi \, PK \cdot \sqrt{\left(\frac{dx}{d\theta}\right)^2 + \left(\frac{dy}{d\theta}\right)^2} \cdot d\theta$$



படம் 39

$$PK = 2a - y = 2a - a\,(1 - \cos\theta)$$

$$= a + a\cos\theta = 2a \cos^2 \frac{\theta}{2}$$

$$\frac{dx}{d\theta} = a\,(1 - \cos\theta) = 2a \sin^2 \frac{\theta}{2}\,, \quad \frac{dy}{d\theta} = 2a \sin \frac{\theta}{2}$$

$$\therefore \quad \left(\frac{dx}{d\theta}\right)^2 + \left(\frac{dy}{d\theta}\right)^2 = 4a^2 \sin^2 \frac{\theta}{2}$$

$$\therefore \quad S = \int_0^{2\pi} 2\pi \cdot 2a \cos^2 \frac{\theta}{2} \cdot 2a \sin \frac{\theta}{2} \cdot d\theta$$

$$= 8\,\pi a^2 \int_0^{\pi} 2 \cos^2 \phi \cdot \sin \phi \, d\phi \,; \; \phi = \frac{\theta}{2}$$

$$= 16\,\pi a^2 \left[- \frac{\cos^3 \phi}{3} \right]_0^{\pi} = \frac{-16\,\pi a^2}{3} (-1 - 1)$$

$$= \frac{32}{3}\,\pi a^2.$$

எ. கா. 4.

$r = a(1 + \cos\theta)$ என்ற நெஞ்சுவலை அதன் தொடக்கக் கோட்டையொட்டிச் சுற்ற ஏற்படும் உருளைப் பருமத்தின் புறப் பரப்பு யாது ?

புறப்பரப்பின் துருவ ஆய அளவு வாய்பாடு

$$\left.\begin{array}{l} x = r\cos\theta \\ y = r\sin\theta \end{array}\right\},\quad S = \int 2\pi y \sqrt{r^2 + \left(\frac{dr}{d\theta}\right)^2}\cdot d\theta$$

$$r^2 + \left(\frac{dr}{d\theta}\right)^2 = a^2(1+\cos\theta)^2 + (-a\sin\theta)^2$$

$$= a^2[1 + 2\cos\theta + \cos^2\theta + \sin^2\theta]$$

$$= 2a^2(1+\cos\theta) = 4a^2\cos^2\frac{\theta}{2}$$

$$y = r\sin\theta\ a(1+\cos\theta)\cdot\sin\theta$$

$$= 2a\cos^2\frac{\theta}{2}\cdot 2\sin\frac{\theta}{2}\cdot\cos\frac{\theta}{2}$$

$$= 4a\cdot\cos^3\frac{\theta}{2}\cdot\sin\frac{\theta}{2}$$

$$\therefore\ S = \int_0^{\pi} 2\pi\cdot 4a\cos^3\frac{\theta}{2}\cdot\sin\frac{\theta}{2}\cdot 2a\cos\frac{\theta}{2}\,dx\left(\frac{\theta}{2}\right)2.$$

$$= 32\pi a^2\int_0^{\frac{\pi}{2}}\cos^4\phi\sin\phi\,d\phi\ ;\quad \phi = \frac{\theta}{2}$$

$$= 32\pi a^2\cdot\frac{3\cdot 1}{5\cdot 3}\cdot 1 = \frac{32}{5}\pi a^2$$

எ. கா. 5.

ஒரு வட்டத்தின் நாற்கூறுப் பகுதி (Quadrant) அதன் ஒரு முனையிலுள்ள தொடுகோட்டை யொட்டிச் சுற்றும்போது ஏற்படும் உருளைப்பருமத்தின் புறப்பரப்பென்ன ?



படம் 40

வட்டத்தின் சாராமாறிச் சமன்பாடுகள் (Parametric equations)

$x = a\cos\theta,\ y = a\sin\theta$

$$ds = \sqrt{\left(\frac{dx}{d\theta}\right)^2 + \left(\frac{dy}{d\theta}\right)^2} \cdot d\theta$$

$$= \sqrt{(-a\sin\theta)^2 + (a\cos\theta)^2} \cdot d\theta = a \cdot d\theta.$$

$$S = \int 2\pi \cdot PM \cdot ds = 2\pi \int (a - x)\, ds$$

$$= 2\pi \int (a - a\cos\theta)\, ds$$

$$= 2\pi a \int_0^{\frac{\pi}{2}} (1 - \cos\theta) \cdot a\, d\theta$$

$$= 2\pi a^2 \left[\theta - \sin\theta\right]_0^{\frac{\pi}{2}}$$

$$= 2\pi a^2 \left(\frac{\pi}{2} - 1\right) = \pi a^2 [\pi - 2]$$

எ. கா. 6.

$2y = x - 4$ என்ற நேர்கோட்டின் $x = 0, x = 5$ என்ற எல்லைக்குள் உள்ள பகுதி x-அச்சையொட்டிச் சுழலும்போது ஏற்படும் நேர்வட்டக் கூம்பின் துண்டத்தின் புறப்பரப்பைக் கணக்கிடுக.



படம் 41

$$2y = x - 4$$

$$\therefore \quad \frac{dy}{dx} = \frac{1}{2}$$

$$\therefore \quad \sqrt{1 + \left(\frac{dy}{dx}\right)^2} = \sqrt{1 + \frac{1}{4}} = \frac{\sqrt{5}}{2}$$

$$s = \int 2\pi y \cdot ds$$

$$= \int_0^5 2\pi y \sqrt{1 + \left(\frac{dy}{dx}\right)^2} \cdot dx$$

$$= \int_0^5 2\pi y \cdot \frac{\sqrt{5}}{2} \cdot dx = \sqrt{5}\,\pi \int_0^5 \frac{(x-4)}{2} \cdot dx$$

$$= \frac{\sqrt{5}}{2} \cdot \pi \left[\frac{(x-4)^2}{2} \right]_0^5$$

$$= \frac{\sqrt{5}}{4}\pi\,[\,1^2 - (-4)^2\,]$$

$$= \frac{\sqrt{5}}{4}\pi\,(1 - 16) = -\frac{15\sqrt{5}}{4}\pi$$

$$= \frac{15\sqrt{5}}{4}\pi \text{ (— குறியை நீக்கி)}$$

பயிற்சிகள் 37

1. $r = a\,(1 + \cos\theta)$ என்ற நெஞ்சுவளை தொடக்கக் கோட்டை யொட்டிச்சுற்ற ஏற்படும் உருளைப்பருமத்தின் வளை பரப்பைக் காண்க.

2. $x = a\,(t - \sin t),\ y = a\,(1 - \cos t)$ என்ற உருள்வளை அதன் அடிப் பக்கத்தைச் சுற்ற ஏற்படும் உருளைப் பருமத்தின் புறப்பரப்பு யாது ?

3. $6xy = x^4 + 3$ என்ற வளைவரை $x = 1, x = 3$ என்ற எல்லைகளுக்கிடையே சுழலும்போதுண்டாகும் உருளைப்பருமத்தின் புறப்பரப்பை மதிப்பிடுக.

4. ஒரு கோளத்தின் புறப்பரப்பை ஒரு சமதளம் 3 : 1 என்ற விகிதத்தில பிரிக்கிறது. கோளத்தின் ஆரை r எனக் கொண்டு மையத்திலிருந்து தளத்தின் தொலைவைக் காண்க.

5. $y = \frac{a}{2}\left(e^{\frac{x}{a}} + e^{\frac{-x}{a}}\right)$ என்ற வளைவரை y அச்சைச் சுற்றும்போது $x = 0,\ x = a$ என்ற எல்லைகளில் உருளைப் பருமத்தின் புறப்பரப்பைக் கணக்கிடுக.

6. $x^2 + 4y^2 = 16$ என்ற நீள்வட்டம் x-அச்சைச் சுற்றும் போதுண்டாகும் உருளைப்பருமத்தின் புறப்பரப்பை மதிப்பிடுக.

7. $x = a\cos^3 t,\ y = a\sin^3 t$ என்ற வளைவரை x-அச்சைச் சுற்றும்போதுண்டாகும் உருளைப்பருமத்தின் புறப்பரப்பு எவ்வளவு ?

8. $x = 0,\ x = 2$ என்ற எல்லைகளில் $y^2 - x^2 = 8$ என்ற வளைவரை x-அச்சைச் சுற்றவுண்டாகும் உருளைப்பருமத்தின் புறப் பரப்பு $\pi\,[2 + \sqrt{2}\log(\sqrt{2} + 1)\,]$ எனக் காட்டுக.

9. $y = \sin x$ என்ற வளைவரை $x = 0, \pi$ எல்லைகளில் x-அச்சைச் சுற்றிவரும்போதுண்டாகும் உருளைப்பருமத்தின் புறப் பரப்பு $2\pi\,[\,\sqrt{2} + \log(1 + \sqrt{2}\,]$ எனக் காட்டுக.

10. $y^2 = 4ax$ என்ற பரவளைவின் உச்சியிலிருந்து அதன் செவ்வகலத்தின் ஒருமுனைவரை உள்ள பகுதி x-அச்சைச் சுற்றும் போதுண்டாகும் உருளைப்பருமத்தின் புறப்பரப்பளவைக் காண்க.

11. $r^2 = a^2 \cdot \cos 2\theta$ என்ற வளைவரை அதன் தொடக்கக் கோட்டையொட்டிச் சுழலும்போது ஏற்படும் உருளைப்பருமத்தின் புறப்பரப்பைக் காண்க.

12. $a^2 y = x^3$ என்ற வளைவரை x-அச்சினைச் சுற்ற உண்டாகும் உருளைப்பருமத்தின் புறப்பரப்பை $x = 0, x = a$ எல்லைகளில் மதிப்பிடுக.

13. $x = t^2, y = t - \frac{t^3}{3}$ என்ற வளைவரையின் வளையம் (loop) x-அச்சினைச் சுற்றும்போது உருவாகும் உருளைப்பருமத்தின் புறப்பரப்பு யாது?

14. $3ay^2 = x\ (x - a)^2$ என்ற வளைவரையின் வளையம் x-அச்சைச் சுற்றவுண்டாகும் உருளைப்பருமத்தின் புறப்பரப்பைக் கணக்கிடுக.

15. $r = e^{\theta}$ என்ற வளைவரை $\theta = 0, \theta = \pi$ எல்லைகளில் தொடக்கக்கோட்டையொட்டிச் சுழல ஏற்படும் உருளைப்பருமத்தின் புறப்பரப்பைக் காண்க.

12. புவிக்கவர்ச்சி மையம்

(Centre of Gravity)

§ 40. வரையறை

(x, y) என்ற புள்ளியில் m நிறையுள்ள ஒரு பொருளிருப்பின், y, x ஆயங்களைச் சுற்றி அதன் சுழல் திறன்கள் முறையே mx, my ஆகும். அது போலவே ஒரே தளத்தில் $(x_1\ y_1)$ $(x_2\ y_2)$...என்ற புள்ளிகளிலுள்ள $m_1\ m_2$......என்ற பொருள்களின் கூட்டுச் சுழல் திறன் y, x ஆயங்களைச் சுற்றி முறையே

$$m_1x_1 + m_2x_2 + \ldots\ldots = \Sigma\,(mx)\,;$$

$$m_1y_1 + m_2y_2 + \ldots = \Sigma\,(my)$$ எனவாகும்.

$$\bar{x} \cdot \Sigma m = \Sigma\,(mx);\ \bar{y}\ \Sigma m = \Sigma(my) \qquad \ldots\ (1)$$

என்ற சமன்பாடுகளாக்கினால், $(\bar{x}, \bar{y})$ என்ற ஆயத்தொலைவுகள் கொண்ட ஒரு புள்ளியைக் குறிக்கலாம். இப்புள்ளியை **நிறை மையம்** (Centre of Mass) என்கிறோம்.

பொருட்கள், தனித்திராமல் தொடர்ந்து ஒரே பொருளாக இருக்குமானால் சுழல் திறன்களின் கூடுதலானது ஒரு வரையறுத்த தொகையாகும். இப்போது நிறை மையம் காணும் சமன்பாடுகள்

$$M\bar{x} = \int x\,(dm)$$

$$M\bar{y} = \int y\,(dm) \qquad \ldots(2)$$ எனவாகும்.

இங்கு (dm) என்பது (x, y) என்ற புள்ளியிலுள்ள நுண்ணிய பொருளின் நிறையாகும். $M = \Sigma\,(dm)$ என்பது முழுப் பொருளின் நிறையாகும்.

கொள்கை : (1) (2) விதிகளில் பொருள்களின் கூட்டம் ஒரே தளந்திலுள்ளதாகவும், அத்தளத்திற்கு இருபுறமும் சமச் சீராகவும்

கட்டிறுக்கமாகவும் (rigid) அந்த தளத்திலமைந்த செங்குத்தான இரு கோடுகளை ஆயங்களாகப் பெற்றதாகவும் கொள்ளவேண்டும்.

§ 41. புவிக்கவர்ச்சி மையம் :

(i) பொருள் சம அடர்த்தியுள்ள மெல்லிய தகடானால் (lamina), அடர்த்தியை ρ என்ற மாறிலியாகவும் பரப்பை A என்ற மாறியாகவும் கொண்டு நிறைமையச் சமன்பாடுகள்

$(\rho A)\bar{x} = \int x(\rho\, dA)$; $(\rho\, A)\bar{y} = \int y\,(\rho \cdot dA)$ எனவும், பொதுக்காரணி P-வை நீக்க,

$A \cdot \bar{x} = \int x\,(dA)$; $A \cdot \bar{y} = \int y\,(dA)$ எனவுமாகும். இங்கு $(\bar{x}, \bar{y})$ என்ற புள்ளி **பரப்பு மைய** மெனப்படும்

(ii) அது போலவே $V\bar{x} = \int x\,(dv)$

$$V\bar{y} = \int y\,(dv)$$

$s\,\bar{x} = \int x\,(ds)$; $s\,\bar{y} = \int y\,(ds)$ என்பனவற்றில் $(\bar{x}, \bar{y})$ முறையே பொருளின் பரும மையமென்றும், பொருளின் வில் மையமென்றும் கூறப்படும். இப்பரப்பு, பருமம், வில் மையங்களே அவற்றின் எடைகளுடன் (weights) தொடர்பு படுத்தினால் **புவிக்கவர்ச்சி மையங்களாகும்** (centroid). இவற்றை பு. க. மையம் எனச் சுருக்கிக் கூறலாம்.

குறிப்பு : (i) அடர்த்தி ஒரு மாறிலியானால், நிறை மையமும் (centre of mass) பு. க. மையமும் (centroid) ஒன்றே.

(ii) பொருளின் அடர்த்தி ρ, ஆயத் தொலைவுகளின் சார்பானால் $\rho\,(x, y)$ அதைத் தொகுபடு சார்புடன் இணைத்துத் தொகுத்து நிறை மையம் காணவேண்டும்.

$$\bar{x} = \frac{\int x\,\rho\,(x,y)\,dA}{\int \rho\,(x,y)\,dA}\,;\quad \bar{y} = \frac{\int y\,\rho\,(x,y)\,dA}{\int \rho\,(x,y)\,dA}$$

$$\bar{x} = \frac{\int x\,\rho\,(x,y)\,dv}{\int \rho\,(x,y)\,dv}\,;\quad \bar{y} = \frac{\int y\cdot\rho\,(x,y)\,dv}{\int \rho\,(x,y)\,dv}$$

$$\bar{x} = \frac{\int x\,\rho\,(x,y)\,ds}{\int \rho\,(x,y)\,ds}\,;\quad \bar{y} = \frac{\int y\cdot\rho\,(x,y)\,ds}{\int \rho\,(x,y)\cdot ds}$$

§ 42. வெளிப்படையான சில பு. க. மையங்கள்

(i) ஒரு நேர்கோட்டின் பு. க. மையம் அதன் நடுப்புள்ளி.

(ii) ஒரு சதுரம், நீள்சதுரம், இணைகரம் இவற்றின் பு.க. மையங்கள் அவற்றின் மூலைவிட்டங்கள் வெட்டும் புள்ளிகள்.

(iii) ஒரு முக்கோணத்தின் பு. க. மையம் அதன் நடுக் கோடுகளின் சந்திப்பு.

(iv) ஒரு வட்டம் அல்லது கோளத்தின் மையமும், பு. க. மையமும் ஒன்றே.



படம் 42

43. ஒரு சமதளப்பரப்பின் பு. க. மையம் காணல்

(*a*) **செங்குத்தாயங்கள் :** படத்தில் *EBCD* என்ற பரப்பு, வளைவரை $y = f(x)$-க்கும், x-அச்சுக்கும், $x = a$, $x = b$ என்ற குத்தாயங்களுக்கும் இடையிலுள்ளது. வளைவரையின் மேல் P, Q என்ற இரு புள்ளிகளின் ஆயத் தொலைவுகள் முறையே (x, y), $(x + \triangle x, y + \triangle y)$. PM, QN குத்தாயங்கள் Q என்ற புள்ளி P-யை நெருங்கும்போது $PMNQ$ என்ற உருவம் நுண்ணிய அகல முள்ள ஒரு நீள் சதுரமாகிறது. அதன் பரப்பு $\triangle A = y \cdot \triangle x$. அதன் பு. க. மையம் $\left(x + \dfrac{\triangle x}{2}, \dfrac{y}{2}\right)$ ஆயத் தொலைவுகளுள்ள G_1 என்ற புள்ளியாகும்.

EBCD-யின் பரப்பு A எனில்

$$A \cdot \bar{x} = \underset{\triangle x \to 0}{\text{எல்லை}} \sum_a^b (y \cdot \triangle x)\left(x + \frac{\triangle x}{2}\right) = \int_a^b x \cdot y \cdot dx$$

$$A \cdot \bar{y} = \underset{\triangle x \to 0}{\text{எல்லை}} \sum_{a}^{b} (y \cdot \triangle x)\left(\frac{1}{2} y\right) = \int_{a}^{b} \frac{1}{2} y^2 \cdot dx$$

(b) **கோணதூரக் கூறுகள் (Polar Co-ordinates)**



படம் 43

AB என்ற வளைவரை $r = f(\theta)$ என்ற துருவ ஆயச் சமன்பாடு உள்ளதாகவும் x-அச்சு அடிப்படைக் கோடாகவும், $\angle AOB = \alpha$ எனவும் இருப்பின் OAB என்ற பரப்பின் பு. க. மையங்காண அதை OPQ போன்று நுண்பகுதிகளாக்க வேண்டும். OPQ-ன் பரப்பு $\triangle A$ எனில்

$$\triangle A = \tfrac{1}{2} r (r + \triangle r) \sin \triangle\theta$$

$$= \frac{1}{2} r (r + \triangle r) \frac{\sin \triangle\theta}{\triangle\theta} \cdot \triangle\theta$$

$= \frac{1}{2} r^2 \cdot \triangle\theta$, $\triangle\theta \to 0$ என்ற எல்லையில் புள்ளி Q, P-யை நெருங்கும்போது OPQ-ஐ அண்ணளவில் ஒரு முக்கோணமாகக் கொள்ளலாம். அதன் பு. க. மையம் G_1 $(\frac{2}{3} r, \theta)$ எனவாகும். G_1-ன் x, y அச்சு தூரங்கள் $(\frac{2}{3} r \cos\theta$, $\frac{2}{3} r \sin \theta)$ எனக்கொண்டு பரப்பு OAB-யின் பு. க. மையம் காணலாம்.

$$A \bar{x} = \int x dA = \int_0^{\alpha} \tfrac{1}{2} r^2 \times (\tfrac{2}{3} r \cdot \cos \theta)\, d\theta.$$

$$A \bar{y} = \int y dA = \int_0^{\alpha} \tfrac{1}{2} r^2 (\tfrac{2}{3} r \sin \theta)\, d\theta.$$

எ. கா. 1.

பரவளைவு $y^2 = 4ax$, x அச்சு, குத்தாயம் $x = b$ இவற்றினுள் அடங்கிய பரப்பின் பு. க. மையம் காண்க.

$$A\,\bar{x} = \int_0^b x\cdot y\cdot dx = \int_0^b x\cdot 2\sqrt{ax}\cdot dx$$

$$= 2\sqrt{a}\int_0^b x^{\frac{3}{2}}\cdot dx = 2\sqrt{a}\cdot\frac{2}{5}\,b^{\frac{5}{2}} = \frac{4}{5}\,a^{\frac{1}{2}}\,b^{\frac{5}{2}}$$

$$A\,\bar{y} = \int_0^b \frac{1}{2}\,y^2\,dx = \int_0^b 2ax\,dx = 2a\cdot\frac{b^2}{2} = ab^2.$$

$$i.e.\ A = \int_0^b y\cdot dx = \int_0^b 2\sqrt{a}\cdot x^{\frac{1}{2}}\cdot dx = 2\sqrt{a}\,\frac{2}{3}\,b^{\frac{3}{2}}$$

$$= \tfrac{4}{3}\,a^{\frac{1}{2}}\,b^{\frac{3}{2}}$$

$$\therefore\quad \bar{x} = \frac{\frac{4}{5}\,a^{\frac{1}{2}}\cdot b^{\frac{5}{2}}}{\frac{4}{3}\,a^{\frac{1}{2}}\cdot b^{\frac{3}{2}}} = \frac{3}{5}\,b.$$

$$\therefore\quad \bar{y} = \frac{ab^2}{\frac{4}{3}\,a^{\frac{1}{2}}\cdot b^{\frac{3}{2}}} = \frac{3}{4}\sqrt{ab}.$$

$\therefore$ பு. க. மையம் $(\tfrac{3}{5}\,b, \tfrac{3}{4}\sqrt{ab})$

எ. கா. 2.

$\dfrac{x^2}{a^2} + \dfrac{y^2}{b^2} = 1$ என்ற நீள் வட்ட நாற்கூறுப் பகுதியின் பு. க. மையம் காண்க.

$$A = \tfrac{1}{4}\,\pi ab$$

$$A\,\bar{x} = \int_0^a xy\cdot dx = \int xy\,\frac{dx}{d\theta}\cdot d\theta.$$

$x = a\cos\theta,\ y = b\sin\theta$ என்று கொள்க.

$$A\,\bar{x} = \int_0^{\frac{\pi}{2}} a\cos\theta\cdot b\sin\theta\cdot a\sin\theta\cdot d\theta.$$

$$= a^2b\int_0^{\frac{\pi}{2}} \sin^2\theta\cdot\cos\theta\cdot d\theta = a^2b\cdot\tfrac{1}{3}$$

$$A\,\bar{y} = \int_0^{a} \frac{y^2}{2}\,dx = \frac{1}{2}\int_0^{a} y^2\cdot\frac{dx}{d\theta}\cdot d\theta.$$

$$= \tfrac{1}{2}\int_0^{\frac{\pi}{2}} b^2\sin^2\theta\cdot a\sin\theta\cdot d\theta.$$

$$= \frac{1}{2}\,ab^2\int \sin^3\theta\cdot d\theta = \frac{1}{2}\,ab^2\cdot\frac{2}{3}\cdot 1 = \frac{ab^2}{3}$$

$$\therefore\quad \bar{x} = \left(\frac{a^2b}{3}\right)\left(\frac{\pi\,ab}{4}\right) = \frac{a^2b}{3}\times\frac{4}{\pi ab} = \frac{4a}{3\pi}\qquad \dots(1)$$

$$\bar{y} = \frac{\frac{ab^2}{3}}{\frac{1}{4}\pi ab} = \frac{4b}{3\pi}\qquad \dots(2)$$

$$\therefore\quad \text{பு. க. மையம்}\ \left(\frac{4a}{3\pi}\right),\left(\frac{4b}{3\pi}\right)$$

எ. கா. 3.

$r = a\,(1 + \cos\theta)$ என்ற நெஞ்சு வளையின் பரப்பின் பு. க. மையம் காண்க.



படம் 44

நெஞ்சு வளை தொடக்கக் கோட்டிற்கு மேலும் கீழும் சீராக இருப்பதால் அதன் பு. க. மையம் OX-ன் மேல் இருக்கும்.

நெஞ்சு வளையின்

பரப்பு $A = \Sigma\,(\triangle OPQ)$

$$= 2\sum_{0}^{\pi} \tfrac{1}{2} r^2 \cdot d\theta = 2 \times \tfrac{1}{2}\int_{0}^{\pi} a^2\,(1+\cos\theta)^2\,d\theta.$$

$$= a^2 \int_{0}^{\pi} 4\cos^4\frac{\theta}{2}\cdot d\left(\frac{\theta}{2}\right)\cdot 2$$

$$= 8a^2 \int_{0}^{\frac{\pi}{2}} \cos^4\phi \cdot d\phi\,;\quad \phi = \frac{\theta}{2}\cdot$$

$$= 8a^2\,\frac{3\cdot 1}{4\cdot 2}\cdot\frac{\pi}{2} = \frac{3}{2}\pi a^2.$$

$$A\,\bar{x} = 2\int_{0}^{\pi} \tfrac{1}{2} r^2 \cdot (\tfrac{2}{3} r\cos\theta)\cdot d\theta$$

$$= \tfrac{2}{3}\int_{0}^{\pi} a^3\,(1+\cos\theta)^3\cdot\cos\theta\cdot d\theta.$$

$$= \frac{2}{3}\,\frac{a}{3}\int_{0}^{\pi} a^3\,(\cos\theta + 3\cos^2\theta + 3\cos^3\theta + \cos^4\theta)\,d\theta.$$

$$= \tfrac{2}{3} a^3 \cdot 2\int_{0}^{\frac{\pi}{2}} (3\cos^2\theta + \cos^4\theta)\,d\theta.$$

[∵ $0 - \frac{\pi}{2}$, $\frac{\pi}{2}$, π இடைவெளிகளில் $\cos\theta^{2n+1}$ சமபரப்பு,

ஆனால் எதிர்க்குறிகள்]

$$= \frac{4}{3} a^3 \left[3 \cdot \frac{1}{2} \cdot \frac{\pi}{2} + \frac{3 \cdot 1}{4 \cdot 2} \cdot \frac{\pi}{2} \right] =$$

$$\frac{4}{3} \times \frac{3}{4} \pi a^3 \left(1 + \frac{1}{4} \right)$$

$$= \frac{5}{4} \pi a^3.$$

$$\therefore \; \bar{x} = \frac{\frac{5}{4} \pi a^3}{\frac{3}{2} \pi a^2} = \frac{5}{4} \times \frac{2}{3} \cdot a = \frac{5}{6} a$$

எ. கா. 4.

$r^2 = a^2 \cos 2\theta$ என்ற லெமெனிஸ்கேட் (Lemniscate) வளை வரையின் ஒரு வளைவு பரப்பின் பு. க. மையம் காண்க.

$\pm r, \pm\theta$ மதிப்புகளை $r^2 = a^2 \cos 2\theta$ என்ற சமன்பாட்டி லிட்டால் அதன் மதிப்பு மாறுவதில்லை. ஆதலால் இவ்வளைவரை அடிப்படைக் கோட்டையும் (x-அச்சு) ஆதியையும் ஒட்டிச் சீரான வடிவமுள்ளது.



படம் 45

$\theta = 0$ என்றிட, $r^2 = a^2$; $r = \pm a$ ... (i)

$\theta = \pm \frac{\pi}{4}$ என்றிட, $r^2 = 0 \quad \therefore \quad r = 0$ ... (ii)

(i), (ii) அளவுகளுடன் வளைவரையின் படம் வரையலாம்.

பரப்பு x-அச்சையொட்டிச் சீரானதால் $\bar{y} = 0$

$$\Delta A = \tfrac{1}{2} r^2 \, d\theta. \quad \therefore A = \int_{-\frac{\pi}{4}}^{+\frac{\pi}{4}} \tfrac{1}{2} r^2 \, d\theta.$$

$$= 2 \int_0^{\frac{\pi}{4}} \tfrac{1}{2} r^2 \, d\theta = \int_0^{\frac{\pi}{4}} a^2 \cos 2\theta \cdot d\theta.$$

$$= a^2 \left[\frac{\sin 2\theta}{2}\right]_0^{\frac{\pi}{4}} = \frac{a^2}{2}$$

$$A \cdot \bar{x} = \int_{-\frac{\pi}{4}}^{+\frac{\pi}{4}} x \, \tfrac{1}{2} r^2 \, d\theta.$$

$$= \int_0^{\frac{\pi}{4}} (\tfrac{2}{3} r \cos\theta) r^2 \, d\theta$$

$$= \tfrac{2}{3} \int_0^{\frac{\pi}{4}} r^3 \cdot \cos\theta \cdot d\theta = \tfrac{2}{3} \int_0^{\frac{\pi}{4}} a^3 (\cos 2\theta)^{\frac{3}{2}} \cdot \cos\theta \, d\theta.$$

$$= \tfrac{2}{3} a^3 \int_0^{\frac{\pi}{4}} (1 - 2 \sin^2\theta)^{\frac{3}{2}} \, d(\sin\theta)$$

$$= \tfrac{2}{3} a^3 \int_0^{\frac{1}{\sqrt{2}}} (1 - 2u^2)^{\frac{3}{2}} \, du, \quad u = \sin\theta.$$

$$= \frac{2}{3} a^3 \int_0^{\frac{\pi}{2}} (1 - \sin^2\phi)^{\frac{3}{2}} \frac{\cos\phi}{\sqrt{2}} \cdot d\phi.$$

$$\begin{cases} \sqrt{2}u = \sin\phi \\ \sqrt{2} \cdot du = \cos\phi \, d\phi \end{cases}$$

$$= \frac{2}{3} \cdot \frac{a^3}{\sqrt{2}} \int_0^{\frac{\pi}{2}} \cos^4\phi \cdot d\phi = \frac{a^3}{\sqrt{2}} \cdot \frac{2}{3} \frac{3 \cdot 1}{4 \cdot 2} \times \frac{\pi}{2}$$

$$= \frac{\pi a^3}{8\sqrt{2}}$$

$$\therefore \quad \bar{x} = \frac{\pi a^3}{8\sqrt{2}} \times \frac{2}{a^2} = \frac{\pi a \sqrt{2}}{8}$$

எ. கா. 5.

$x = a(\theta - \sin\theta)$, $y = a(1 - \cos\theta)$ என்ற உருள்வளை பரப்பின் பு. க. மையம் காண்க.



படம் 46

$$\Delta A = y \cdot dx$$

$$A = \int_0^{2\pi a} y \cdot dx$$

$$= \int_0^{2\pi} a(1 - \cos\theta) \, d\left[a(\theta - \sin\theta) \right]$$

$$= \int_0^{2\pi} a\,(1 - \cos\theta) \cdot a\,(1 - \cos\theta)\, d\theta$$

$$= a^2 \int_0^{2\pi} (1 - \cos\theta)^2\, d\theta = 2a^2 \int_0^{\pi} 4 \sin^4 \frac{\theta}{2} \cdot d\theta$$

$$= 2 \times 8a^2 \int_0^{\frac{\pi}{2}} \sin^4 \phi\, d\phi\,;\ \phi = \frac{\theta}{2}$$

$$= 16a^2 \cdot \frac{3 \cdot 1}{4 \cdot 2}\, \frac{\pi}{2} = 3\pi a^2.$$

உருள்வளையில் $OA = 2\pi a$

C என்பது OA-யின் மையமானல் $OC = \pi a$

CB என்ற குத்தாயத்தை யொட்டி உருள்வளை சீராக அமைந்தது.

$$\therefore \quad \bar{x} = \pi \cdot a \tag{1}$$

$$A\,\bar{y} = \int_0^{2\pi a} \frac{y^2}{2}\, dx = \int_0^{2\pi} a^2\,(1 - \cos\theta)^2\, a\,(1 - \cos\theta)\, d\theta$$

$$= a^3 \int_0^{\pi} (1 - \cos\theta)^3 \cdot d\theta$$

$$= 8a \int_0^{\pi} \sin^6 \frac{\theta}{2} \cdot d\left(\frac{\theta}{2}\right) \cdot 2$$

$$= 16a^3 \int_0^{\frac{\pi}{2}} \sin^6\phi \cdot d\phi = 16a^3 \cdot \frac{5 \cdot 3 \cdot 1}{6 \cdot 4 \cdot 2} \cdot \frac{\pi}{2}$$

$$= \tfrac{5}{2} \pi a^3$$

$$\bar{y} = \frac{\frac{5}{2} \cdot \pi a^3}{A} = \frac{5}{2} \cdot \frac{\pi a^3}{3\pi a^2} = \frac{5}{6} a \qquad (2)$$

∴ பு. க. மையம் $(\pi a, \frac{5}{6} a)$

§ 44. உருளைப்பருமத்தின் பு. க. மையம்.

$y = f(x)$ என்ற வளைவரை, x-அச்சு, $x = a$, $y = b$ என்ற குத்தாயம் இவைகளால் அடைபடும் பரப்பு x-அச்சை ஒருமுறை சுற்றினால் ஏற்படும் உருளைப்பருமத்தின் பு. க. மையம் காணல்.



படம் 47

PN போன்ற நுண்ணிய நீள் சதுரங்கள் x-அச்சைச் சுற்றும்போது அடி ஆரம் y-ம் Δx உயரமுமுள்ள நுண் உருளைகள். ஏற்படும் $\Delta V = \pi y^2 dx$. இதன் பு. க. மையம் x-அச்சில் $\left(x + \frac{\Delta x}{2}, 0\right)$ என்ற புள்ளியில் அமையும்.

$$\therefore \quad \bar{y} = 0, V \cdot \bar{x} = \underset{\Delta x \to 0}{\text{எல்லை}} \sum_{a}^{b} \pi y^2 \Delta x \left(x + \frac{\Delta x}{2} \right)$$

$$= \int_a^b \pi x y^2 \cdot dx.$$

குறிப்பு : 1. $y = f(x)$, y-அச்சு, $y = c$, $y = d$ இவைகளுக்கு இடைப்பட்ட பரப்பு y-அச்சை ஒருமுறை சுற்ற ஏற்படும் உருளையின் பு.க. மையம்

$$\bar{x} = 0, v \cdot \bar{y} = \int_c^d \pi y \cdot x^2 \cdot dy$$ எனவாகும்.

2. x, y அச்சுக்களல்லாது வேறெந்தக் கோட்டை யொட்டிச் சுழன்ருலும், அக்கோட்டிற்குச் செங்குத்தாக ஏற்படும் நுண் உருளைப்பருமம் $\triangle v$ என்றும் அதன் பு.க. மையம் (x, y) என்றும் கொண்டு கணக்கிடல் வேண்டும்.

எ. கா. 1.

$y^2 = 4ax$ என்ற பரவளைவும், x-அச்சு $x = b$ குத்தாயம் இவற்ருலடைபட்ட பரப்பு x-அச்சையொட்டி ஒருமுறை சுற்றினுல் ஏற்படும் உருளை பருமத்தின் பு.க. மையம் காண்க.



படம் 48-a

உருளைப்பருமம் x-அச்சையொட்டி சீராக உள்ளதால் $\bar{y} = 0$

$$V = \int_0^b \pi y^2 \cdot dx$$

$$= \pi \int_0^b y^2 \cdot dx = \pi \int_0^b 4ax \cdot dx$$

$$= 4a\pi \cdot \frac{b^2}{2} = 2\pi a \cdot b^2.$$

$$V \cdot \bar{x} = \int_0^b x \cdot \pi y^2\, dx = \pi \int_0^b x \cdot 4ax \cdot dx$$

$$= 4a\pi \int x^2 \cdot dx = \frac{4\pi}{3} ab^3$$

$$\therefore \quad \bar{x} = \frac{\frac{4}{3}\pi ab^3}{2\pi ab^2} = \frac{2}{3} b$$

$\therefore$ பு.க. மையம் $= (\frac{2}{3} b, 0)$

எ. கா. 2

பரவளைவு $y^2 = 4ax$, அதன் அச்சு செவ்வகலம் (latus rectum) இவற்ருலடைபடும் பரப்பு செவ்வகலத்தை ஒட்டி ஒரு முறை சுற்றினுல் ஏற்படும் உருளைப்பருமத்தின் பு.க. மையம் காண்க.

அச்சு SL-ஐ ஒட்டி உருளைப்பருமம் சீராக உள்ளது. ஆதலால் பு.க. மையம் SL-ன் மேலிருக்கும்.



படம் 48-b

$\bar{x} = a$

$$V = \int_0^{2a} \pi \cdot PN^2 \cdot dy = \int_0^{2a} \pi\,(a - x)^2 \cdot dy$$

$$= \pi \int_0^{2a} \left(a - \frac{y^2}{4a} \right)^2 \cdot dy$$

$$= \pi \int_0^{2a} \left(a^2 - 2a \cdot \frac{y^2}{4a} + \frac{y^4}{16a^2} \right) dy$$

$$= \pi \left[a^2 y - \frac{y^3}{3 \cdot 2} + \frac{y^5}{5 \cdot 16a^2} \right]_0^{2a}$$

$$= \pi \left[a^2 \cdot 2a - \frac{8a^3}{6} + \frac{32 \cdot a^5}{80 \cdot a^2} \right]$$

$$= \pi a^3 \left[2 - \frac{4}{3} + \frac{2}{5} \right] = \frac{\pi a^3}{15} (30 - 20 + 6) = \frac{16}{15} \pi a^3$$

$$V \cdot \bar{y} = \int_0^{2a} \pi \cdot PN^2 \cdot y \cdot dy = \pi \int_0^{2a} (a - x)^2 \cdot y \cdot dy$$

$$= \pi \int_0^{2a} \left(a - \frac{y^2}{4a} \right)^2 \cdot y \, dy$$

$$= \pi \int_0^{2a} \left(a^2 - 2a \cdot \frac{y^2}{4a} + \frac{y^4}{16a^2} \right) y \, dy$$

$$= \pi \int_0^{2a} \left(a^2 y - \cdot \frac{y^3}{2} + \frac{y^5}{16a^2} \right) dy$$

$$= \pi \left[a^2 \cdot \frac{y^2}{2} - \frac{1}{2} \cdot \frac{y^4}{4} + \frac{1}{16a^2} \cdot \frac{y^6}{6} \right]_0^{2a}$$

$$= \pi \left[a^2 \cdot \frac{4a^2}{2} - \frac{1}{8} \cdot 16a^4 + \frac{1}{96a^2} 64a^6 \right]$$

$$\therefore \quad V \cdot \bar{y} = \tfrac{2}{3} \pi a^4, \qquad V = \tfrac{16}{15} \pi a^3$$

$$\therefore \quad \bar{y} = \frac{\frac{2}{3} \pi a^4}{\frac{16}{15} \pi a^3} = \frac{2}{3} \cdot \frac{15}{16} \cdot a = \frac{5}{8} a$$

§ 45. வட்டம், கோளம்-இவற்றையொட்டிய கணக்குகள்.

(i) r ஆரையுள்ள ஒருவட்ட வில்லின் பு.க. மையம் காணல்.

வில் $A'A$-ஐ, OX இருசமபாகங்களாக வெட்டட்டும். முழுவில் வட்டமையத்தில் 2α கோணம் உண்டாக்கினல் (Subtends)

$\angle XOA = \alpha$, $\angle XOP = \theta$ என்க.

முழு வில் $A'A = r \cdot 2\alpha$.

$= s$.



படம் 49

$$s\bar{x} = \Sigma (x \cdot \triangle s) = \int_{-\alpha}^{+\alpha} x \cdot r \cdot d\theta$$

$$= 2 \int_0^{\alpha} r \cdot \cos\theta \cdot r \cdot d\theta = 2r^2 \int_0^{\alpha} \cos\theta \cdot d\theta$$

$$= 2r^2 \cdot \sin\alpha$$

$$\therefore \quad \bar{x} = \frac{2r^2 \sin\alpha}{s} = \frac{2r^2 \sin\alpha}{2r \cdot \alpha} = \frac{r \sin\alpha}{\alpha}$$

$\alpha = \frac{\pi}{2}$ எனில் $\bar{x} = \left[\frac{2r}{\pi}\right]$

$A'A$-வில் OX-ஐ ஒட்டிச் சீராக இருப்பதால் $\bar{y} = 0$.

(ii) r-ஆரையுள்ள ஒருவட்டக் கோணப்பகுதியின் பு.க. மையம் காணல்.

வட்டக்கோணப்பகுதி, OPQ போன்ற நுண் (படம் 49) பகுதிகளின் கூடுதலாகக் கொள்வோம்.

$\triangle A = \frac{1}{2} r^2 d\theta$; $A = \frac{1}{2} r^2 . 2\alpha = r^2\alpha$

$\triangle\theta \to 0$ எல்லையில் பரப்பு OPQ = முக்கோணம் OPQ.

$\triangle OPQ$-யின் பு.க. மையதூரம் $OG_1 = \frac{2}{3} r$

$$x = OM = OG_1 \cos\theta = \frac{2}{3} r \cos\theta$$

$$A\bar{x} = 2\int_0^{\alpha} \tfrac{1}{2} r^2 \left(\tfrac{2}{3} r \cos\theta\right) d\theta$$

$$= \tfrac{2}{3} r^3 \int_0^{\alpha} \cos\theta \cdot d\theta = \tfrac{2}{3} r^3 \cdot \sin\alpha$$

$$\therefore \quad \bar{x} = \frac{\tfrac{2}{3} r^3 \sin\alpha}{r^2\alpha} = \left(\frac{\tfrac{2}{3} r \sin\alpha}{\alpha}\right)$$

$A'A$-வில் OX-ஐ ஒட்டிச்சீராக இருப்பதால் வட்டக்கோணப் பகுதியின் $\bar{y} = 0$

குறிப்பு : $\alpha = \frac{\pi}{2}$ எனில் $\bar{x} = \frac{4r}{3\pi}$

(iii) **அரைக்கோளத்தின் பு.க. மையம் காணல்.**



படம் 50

கால்வட்டம் x-அச்சையொட்டிச் சுற்றுவதால் அரைக்கோளம் ஏற்படுகிறது. அவ்வாறு சுற்றும்போது நுண் பகுதியான PN என்ற நீள்சதுரம் அடிஆரம் y, உயரம் Δx உள்ள நுண் உருளையாகிறது.

$$\Delta v = \pi y^2 \Delta x$$

நுண் உருளையின் பு.க. மையம் x-அச்சின் மேல் O-விலிருந்து x-தூரத்திலிருக்கும். வட்டத்தின் சமன்பாடு $x^2 + y^2 = a^2$.

$$V = \tfrac{2}{3}\pi a^3$$

$$V \cdot \bar{x} = \int_0^a \pi y^2 \cdot x \cdot dx = \pi \int_0^a x(a^2 - x^2)\, dx$$

$$= \pi \int_0^a (a^2 x - x^3)\, dx = \pi\left[\left(a^2 \cdot \frac{a^2}{2} - \frac{a^4}{4}\right)\right]$$

$$= \frac{\pi a^4}{4}$$

$$\therefore \quad \bar{x} = \frac{\pi a^4}{4 \cdot V} = \frac{\pi a^4}{4} \times \frac{3}{2\pi a^3} = \frac{3}{8} a$$

$\bar{y} = 0 \quad \therefore$ பு.க. மையம் $\left(\tfrac{3}{8} a, 0\right)$

(iv) உள்ளீடற்ற அரைக்கோளத்தின் பு. க. மையம் காணல்.

வில் $PQ = ds.$

$$= \sqrt{\left(\frac{dx}{d\theta}\right)^2 + \left(\frac{dy}{d\theta}\right)^2}\ a).$$

வட்டம், $x = a \cos \theta$

$y = a \sin \theta$ எனில்

$$ds = \sqrt{(-a \sin \theta)^2 + (a \cos \theta)^2}.\ d\theta.$$

$$= a\, d\theta$$



படம் 51.

கால் வட்டவில் x-அச்சையொட்டிச் சுழலும்போது Δs ஒரு கூம்பு வெட்டுத் துண்டின் புறப்பரப்பைத் தோற்றுவிக்கும்.

அதன் அடிப்பக்க ஆரம் y,

சாய்வு உயரம் $\triangle s$.

கூம்பு வெட்டுத்துண்டின் புறப்பரப்பு

$$\Delta s = 2\pi y \cdot \Delta s$$

$$s = \int 2\pi y \cdot ds = \int_0^{\frac{\pi}{2}} 2\pi \cdot a \sin \theta \cdot a\, d\theta.$$

$$= 2\pi a^2 (\cos \theta)_0^{\frac{\pi}{2}} = 2\pi\, a^2$$

$$s\, \bar{x} = \int_0^{} x\, 2\, \pi y \cdot ds = \int_0^{\frac{\pi}{2}} 2\pi\, (a \sin \theta)\, (a \cos \theta)$$

$$\times\ a d\theta$$

$$= 2\pi a^3 \int_0^{\frac{\pi}{2}} \sin\theta \cdot \cos\theta \cdot d\theta = 2\pi\, a^3 \cdot \frac{1}{2}$$

$$= \pi a^3$$

$$\therefore \quad \bar{x} = \frac{\pi a^3}{s} = \frac{\pi a^3}{2\pi a^2} = \frac{a}{2}$$

பு. க. மையம் $\left(\frac{a}{2}, 0\right)$

§ 46. ஒரு வில்லின் பு. க. மையங்காணல்.

DC என்பது $y = f(x)$ என்ற வளைவரையின் வில். (x, y) புள்ளியில் வில் $PQ = \triangle s$ ஒரு நுண் பகுதி.



படம் 52.

$Q \rightarrow P$ எனும் போது

$\triangle s = \sqrt{(\triangle x)^2 + (\triangle y)^2}$ (முதல்படி நுண்ணளவுக்கு)

$$= \sqrt{1 + \left(\frac{dy}{dx}\right)^2}\, dx,$$

செங்குத்தாயத் தொலைவுகளில்

$$= \sqrt{\left(\frac{dx}{d\theta}\right)^2 + \left(\frac{dy}{d\theta}\right)^2} \cdot d\theta$$

சாரா மாறித் தொலைவுகளில்

$$= \sqrt{r^2 + \left(\frac{dr}{d\theta}\right)^2}\, d\theta.$$ துருவ ஆய

அளவுகளில் இவ்வாய்பாடுகளை முன்பே கண்டோம்.

∴ வளைவரை DC-யின் பு. க. மையம்

$$\bar{x} = \frac{\int_a^b x \cdot ds}{\int_a^b ds} = \frac{\int_a^b x \sqrt{1 + \left(\frac{dy}{dx}\right)^2} \cdot dx}{\int_a^b \sqrt{1 + \left(\frac{dy}{dx}\right)^2} \cdot dx}$$

$$\bar{y} = \frac{\int_a^b y \cdot ds}{\int_a^b ds} = \frac{\int_a^b y \sqrt{1 + \left(\frac{dy}{dx}\right)^2} \cdot dx}{\int_a^b \sqrt{1 + \left(\frac{dy}{dx}\right)^2} \cdot dx}$$

§ 47. உருளைப்பருமத்தின் புறப்பரப்பின் பு.க. மையம் காணல்.



படம் 53

AB என்ற வளைவரை x-அச்சை யொட்டிச் சுழலும்போது தோன்றும் உருளைப் பருமத்தின் புறப்பரப் y-ஆரமாகவும் Δs சாய்வு உயரமாக வும் கொண்ட நுண்கூம்புத் துண் டங்களின் புறப்பரப்பின் தொகை யாகும்.

$$S = \Sigma\, 2\pi y \cdot \Delta s$$

$$= \sum_a^b 2\pi y \sqrt{1 + \left(\frac{dy}{dx}\right)^2} \cdot dx$$

உருளை x-அச்சுக்குச் சீராக இருப்பதால் $\bar{y} = 0$

$$S \cdot \bar{x} = \int_a^b x \cdot 2\pi y \sqrt{1 + \left(\frac{dy}{dx}\right)^2} \cdot dx$$

$$= \int_a^b 2\pi xy \sqrt{1+\left(\frac{dy}{dx}\right)^2}\cdot dx$$

$$\bar{x} = \frac{\displaystyle\int_a^b 2\pi\, xy \sqrt{1+\left(\frac{dy}{dx}\right)^2}\; dx}{\displaystyle\int_a^b 2\pi\, y \sqrt{1+\left(\frac{dy}{dx}\right)^2}\; dx}$$

குறிப்பு : துருவ ஆய அளவுகளில்

$$\Delta s = \sqrt{r^2+\left(\frac{dr}{d\theta}\right)^2}\cdot d\theta$$

எ.கா 1.

நெஞ்சுவளை $r = a(1+\cos\theta)$, அடிப்படைக் கோட்டையொட்டிச் சுழலும்போது உண்டாகும் உருளைப்பருமத்தின் புறப்பரப்பின் பு.க. மையம் காண்க.



படம் 54

வரைவளையின் சமச்சீருக்கு ஏற்ப $\bar{y} = 0$

$$ds = \sqrt{r^2+\left(\frac{dr}{d\theta}\right)^2}\cdot ds$$

$$= \sqrt{a^2(1+\cos\theta)^2+(-a\sin\theta)^2}\cdot d\theta$$

$$= a\sqrt{2+2\cos\theta}\cdot d\theta = \sqrt{2}a \times \sqrt{2}\cos\frac{\theta}{2}\cdot d\theta$$

$$= 2a\cos\frac{\theta}{2}\cdot d\theta$$

$$S = \int_0^\pi 2\pi y\cdot ds = \int_0^\pi 2\pi\, r\sin\theta\cdot 2a\cos\frac{\theta}{2}\, d\theta$$

$$= \int_0^{\pi} 2\pi\, a\,(1+\cos\theta)\cdot \sin\theta \cdot 2a\cos\frac{\theta}{2}\, d\theta$$

$$= \int_0^{\pi} 2\cos^2\frac{\theta}{2}\, 2\sin\frac{\theta}{2}\cdot\cos^2\frac{\theta}{2}\cdot d\left(\frac{\theta}{2}\right)\cdot 2$$

$$= 4\pi a^2 \int_0^{\pi} 2\cos^2\frac{\theta}{2}\cdot 2\sin\frac{\theta}{2}\cos^2\frac{\theta}{2}\cdot d\left(\frac{\theta}{2}\right)\cdot 2$$

$$= 32\pi a^2 \int_0^{\frac{\pi}{2}} \cos^4\phi\,\sin\phi\, d\phi\;;\quad \phi = \frac{\theta}{2}$$

$$= 32\pi a^2\,\frac{3\cdot 1}{5\cdot 3}\,1 = \frac{32}{5}\pi a^2$$

$$S\,\bar{x} = \int_0^{\pi} x\cdot 2\pi y\cdot ds = \int_0^{\pi} r\cos\theta\cdot 2\pi\, r\sin\theta\; 2a\cdot\cos\frac{\theta}{2}\, d\theta$$

$$= \int_0^{\pi} 4\pi a\cdot a^2(1+\cos\theta)^2\cdot\cos\theta\cdot\sin\theta\cdot \cos\frac{\theta}{2}\times d\left(\frac{\theta}{2}\right)2$$

$$= 8\pi a^3 \int_0^{\pi} 4\cos^4\frac{\theta}{2}\left(2\cos^2\frac{\theta}{2}-1\right)\cdot 2\sin\frac{\theta}{2}\cdot \cos\frac{\theta}{2}\cos\frac{\theta}{2}\cdot d\left(\frac{\theta}{2}\right)$$

$$= 64\pi a^3 \int_0^{\pi} \cos^6 \frac{\theta}{2} \left(2\cos^2 \frac{\theta}{2} - 1\right) \cdot \sin \frac{\theta}{2} \cdot d\left(\frac{\theta}{2}\right)$$

$$= 64\pi a^3 \int_0^{\pi} [2 \sin \phi \cdot \cos^8 \phi - \sin \phi \cdot \cos^6 \phi]\, d\phi$$

$$\left(\phi = \frac{\theta}{2}\right)$$

$$= 64\pi a^3 \left[\frac{2 \cdot 7 \cdot 5 \cdot 3 \cdot 1}{9 \cdot 7 \cdot 5 \cdot 3} \cdot 1 - \frac{5 \cdot 3 \cdot 1}{7 \cdot 5 \cdot 3} \cdot 1\right]$$

$$= 64\pi a^3 \left[\frac{14 - 9}{9 \cdot 7}\right] = 64\pi a^3 \cdot \frac{5}{9 \cdot 7} = \frac{320\pi a^3}{63}$$

$$\bar{x} = \frac{320\pi a^3}{63} \times \frac{5}{32\pi a^2} = \frac{50}{63} a$$

§ 48. அடர்த்தி ρ ஒரு மாறியாக இருக்கும்போது பு. க. மையம் காணல்.

எடுத்துக்காட்டு.

1. ஓர் அரைவட்டப் பரப்பின் அடர்த்தி ஒவ்வொரு புள்ளியிலும், விட்டத்திலிருந்து அதன் தூரத்திற்கு நேர்விகிதத்திலுள்ளதெனில் அதன் பு. க மையம் காண்க.



படம் 55

PSRQ என்ற நுண் பரப்பின் பு. க. மையம் *Y'Y* விட்டத்திலிருந்து x தூரத்திலுள்ளது.

$$\Delta A = 2y \cdot \Delta x.$$

$$\Delta m = 2y \cdot \Delta x\, \rho$$

இங்கு $\rho = Kx$, K ஒரு மாறிலி.

$$\therefore \quad \Delta m = (2y \cdot \Delta x)(K \cdot x)$$

அரைவட்டம் x-அச்சுக்குச் சமச்சீர் $\therefore \quad \bar{y} = 0$

$$\bar{x} \Sigma \triangle m = \Sigma x \cdot \triangle m$$

$$\therefore \quad \bar{x} = \frac{\Sigma x \cdot \triangle m}{\Sigma \triangle m} = \frac{\int_0^a x \cdot 2y\,(K \cdot x)\, dx}{\int_0^a 2y\,(K \cdot x)\, dx}$$

$$= \frac{\int_0^a x^2 y \cdot \frac{dx}{d\theta} \cdot d\theta}{\int_0^a x\, y \cdot \frac{dx}{d\theta} \cdot d\theta}$$

(வட்டச்சமன்பாடுகள்) $[x = a \cos \theta \;\; y = a \sin \theta]$

$$= \frac{\int_{\frac{\pi}{2}}^{0} a^2 \cos^2\theta \cdot a \sin \theta\, (- a \sin \theta)\, d\theta.}{\int_{\frac{\pi}{2}}^{0} a \cos \theta \cdot a \sin \theta\, (- a \sin \theta)\, d\theta.}$$

$$= \frac{a^4 \int_0^{\frac{\pi}{2}} \cos^2\theta \sin^2\theta \cdot d\theta}{a^3 \int_0^{\frac{\pi}{2}} \cos \theta \sin^2 \theta \cdot d\theta} = \frac{a \frac{1 \cdot 1}{4 \cdot 2} \cdot \frac{\pi}{2}}{\frac{1}{3} \cdot 1}$$

$$= \frac{3}{16} \pi a$$

$$\therefore \quad OG = \frac{3}{16} \pi a$$

எ. கா. 2.



படம் 56

ஓர் அரைக்கோளத்தின் அடர்த்தி மையப்புள்ளியிலிருந்து புள்ளிகளின் தூரங்களின் n மடங்குக்கு நேர் விகிதத்திலிருக்கிறது. பு. க. மையங்காண்க.

அரைக்கோளத்தை x ஆரமும், $\triangle x$ தடிப்புமுள்ள உள்ளீடற்ற அரைக்கோளங்களாக்கினுல் ஒவ்வொன்றின் பருமமும், ஒரு படி நுண்ணளவுக்கு (to the first order of infinitesimal) $\triangle V = 2\pi x^2 \cdot \triangle x$

அதன் பு. க. மையம் $OG_1 = \dfrac{x}{2}$

$\rho = K \cdot x^n$, K ஒரு மாறிலி.

$\therefore \quad \triangle m = (2\pi\, x^2 \cdot \triangle x)\rho = (2\pi\, x^2 \cdot \triangle x)\, K \cdot x^n.$

$$\bar{x} = \frac{\sum \frac{x}{2}\, dm}{\Sigma\, dm} = \frac{\sum_0^a \frac{x}{2}\,(2\pi\, x^2 \cdot \triangle x)\,(K\, x^n)}{\Sigma_0^a\,(2\pi\, x^2 \cdot \triangle x)\,(K \cdot x^n)}$$

$$\frac{2\pi \int^a \frac{x^{n+3}}{2} \cdot dx}{2\pi \int_0^a x^{n+2} \cdot dx} = \frac{1}{2}\,\frac{\frac{a^{n+4}}{n+4}}{\frac{a^{n+3}}{n+3}}$$

$$= \frac{n+3}{n+4} \cdot \frac{a}{2} = \frac{a}{2} \cdot \frac{n+3}{n+4}$$

அரைக்கோளம் x-அச்சுக்குச் சமச்சீர் $\therefore\ \bar{y} = 0$

பயிற்சிகள் 38

1. கீழ்க்காணும் **வில்களின் பு.** க. மையங்களைக் காண்க :

1. $x = a\,(\theta - \sin\theta)$, $y = a\ (1 - \cos\theta)$ என்ற உருள் வளையின் ஒரு வளைவு.

2. $x^{\frac{2}{3}} + y^{\frac{2}{3}} = a^{\frac{2}{3}}$ என்ற வளைவரையின் அடுத்துள்ள இரு முனைகளுக்கு இடையிலுள்ள வளைவு.

3. நெஞ்சுவளை $r = a\,(1 + \cos\theta)$.

4. வளைவரை $4y^2 = x^3$-ல் $y = -\frac{1}{2}$ முதல் $y = \frac{1}{2}$ வரையிலுள்ள வில்.

2. கீழ்க்காணும் **பரப்புகளின் பு.** க. மையங்கள் காண்க.

1. நெஞ்சுவளை $r = a\,(1 + \cos\theta)$

2. $r = a\cos 2\theta$ என்ற வளைவரையின் வளைவு.

3. $r = a\ \cos 3\theta$ என்ற வளைவரையின் வளைவு.

3. கொடுக்கப்பட்ட எல்லைகளுக்குட்பட்ட பரப்புகளின் பு. க. மையங்கள் காண்க.

1. $y^2 = 4ax$, இரட்டைக் குத்தாயம் $x = h$.

2. $x^{\frac{2}{3}} + y^{\frac{2}{3}} = a^{\frac{2}{3}}$, இரு அச்சுகள்.

3. $\frac{x^2}{a^2} + \frac{y^2}{b^2} = 1$ என்ற நீள்வட்டத்தை $\frac{x}{a} + \frac{y}{b} = 1$ என்ற கோடு வெட்டும்போது ஏற்படும் சிறிய பகுதி.

4. $y^2 = 4x$, $x^2 = 4y$.

5. வளைவரை $y = \sin x$, x-அச்சு.

6. x-அச்சு, கயிற்றுவளை $y = c\cosh\frac{x}{c}$, குத்தாயங்கள் $x = \pm b$.

7. $y^2 = 4ax$, x-அச்சு, செவ்வகலம் (latus rectum).

8. $xy = a^2$, x-அச்சு, $x = b$, $x = c$.

9. $x = a(\theta - \sin\theta)$, $y = a(1 - \cos\theta)$ என்ற உருள் வளையின் ஒரு வளைவு, x-அச்சு.

10. $x^2 = 4y$, $y = x$.

11. $y^2 = 4x$, $x - 2y + 3 = 0$.

12. $y = 4x^2$, $y = x^4$ முதல் நாற்கூறுப் பகுதியில் (I Quadrant).

4. நீள்வட்டத்தின் நாற்கூறுப் பகுதி (Quadrant)-யின் பு. க. மையம் காண்க.

5. r ஆரையும் மையக்கோணம் 2α-ம் உள்ள வட்ட வில்லின் முனைகளைச் சேர்க்கும் நாணிற்கும், வில்லிற்கும் இடைப்பட்ட பகுதி (segment)-ன் பு. க. மையம் காண்க.

6. r ஆரையுள்ள ஓர் அரைவட்டத்தின் அடர்த்தி எல்லை விட்டத்திலிருந்து உள்ள தூரத்திற்கு நேர் விகிதத்திலிருந்தால் அதன் பு. க. மையங் காண்க.

7. ஒருவட்டத்தின் ஆரை a, ஒரு புள்ளியில் அதன் அடர்த்தி மையத்திலிருந்து புள்ளியின் தூரத்தில் K மடங்கெனில் வட்டத்தின் நிறைமையங் காணவும்.

8. a ஆரையுள்ள ஒரு கோளத்தை அதன் மையத்திலிருந்து b, c தூரங்களில் இரு இணையான தளங்கள் வெட்டும்போது ஏற்படும் இடைப்பகுதியின் பு. க. மையங் காண்க.

9. ஓர் அரைக்கோளத்தின் அடர்த்தி ஏதேனுமொரு புள்ளியில் அதன் சமதளப் பீடத்திலிருந்து அப்புள்ளியின் தூரத்தின் இருபடி (Square)-யானால் அரைக்கோளத்தின் நிறை மையம் காண்க.

10. கீழ்க்காணும் பரப்புகள் சுற்றும் போதுண்டாகும் உருளைப் பருமங்களின் பு. க. மையம் காண்க.

1. $\dfrac{x^2}{a^2} + \dfrac{y^2}{b^2} = 1$ என்ற நீள்வட்டம் $x = 0$, $x = a$ x-அச்சு இவற்றிற்கு இடையிலுள்ள பகுதி OX-ஐ யொட்டி.

2. $y = a\sin x$, $x = 0$, $x = \dfrac{\pi}{2}$ இவற்றிற்கிடையிலுள்ளது x-அச்சையொட்டி.

3. $xy = a^2$, $y = a$, $y = 2a$ இவற்றிலடைபட்டது OY-ஐ யொட்டி.

11. ஒரு நேர் வட்டக்கூம்பின் பு. க. மையம் காணவும்.

12. $ay^2 = x^2 (a - x)$ என்ற வளைவரையின் வளையத்தின் பரப்பு x-அச்சையொட்டிச் சுற்றும் போதுண்டாகும் உருளைப் பருமத்தின் பு. க. மையங் காண்க.

13. ஒரு கால் வட்டம், அதன் இரு முனைகளில் வரைந்த தொடு கோடுகள் இவற்றிற்கு இடைப்பட்ட பரப்பு, ஒரு தொடு கோட்டைச் சுற்றும்போது ஏற்படும் உருளைப்பருமத்தின் பு. க. மையம் காணவும்.

14. $y^2 = 4ax$, x-அச்சு, செவ்வகலம் (latus rectum) இவற்றிற் கிடைப்பட்ட பரப்பு, செவ்வகலத்தை யொட்டிச் சுற்ற வுண்டாகும் உருளைப் பருமத்தின் பு. க. மையத்தைக் காண்க.

15. a ஆரையுள்ள ஒரு கோளத்தில் h உயரமுள்ள துண்டின் (spherical cap) பு. க. மையம் காணவும்.

16. $r = a (1 + \cos\theta)$ என்ற வளைவரை அதன் அச்சை யொட்டிச் சுற்றும் போதுண்டாகும் உருளைப் பருமத்தின் பு. க. மையம் காண்க.

17. $9 y^2 = x^2 (3 - x)^2$ என்ற வளைவரையின் வளையம் x-அச்சையொட்டிச் சுற்றும்போதுண்டாகும் உருளைப் பருமப் புறப்பரப்பின் பு. க. மையம் காணவும்.

18. $y^2 = 4x$, $x = 0$, $x = 3$ இவற்றிற் கிடைப்பட்ட பகுதி x-அச்சையொட்டிச் சுற்றும்போது ஏற்படும் உருளைப் பருமத்தின் புறப்பரப்பின் பு. க. மையம் காண்க.

19. a ஆரையுள்ள ஒரு கால்வட்டம் அதன் ஒரு முனையில் வரைந்த தொடு கோட்டையொட்டிச் சுற்றும்போது ஏற்படும் உருளைப் பருமத்தின் புறப்பரப்பின் பு. க. மையத்தைக் காண்க.

20. ஒரு கூம்பின் வெட்டுத்துண்டத்தின் இரு எல்லை வட்டங் களின் ஆரைகள் a, b; துண்டத்தின் நீளம் h என்ருல் அதன் பு. க. மையத்தைக் காணவும்.

§ 49. பாப்பசு தேற்றங்கள் (Pappus' Theorems)

1. **ஒரு வளைவரை அதன் தளத்திலுள்ள ஓர் அச்சையொட்டி ஒருமுறை சுற்றுவதாலுண்டாகும் புறப்பரப்பளவு அவ்வளைவரையின் நீளத்தையும் அதன் பு க. மையம் சுற்றிய தூரத்தையும் பெருக்கி வந்த தொகைக்குச் சமம்.**

2. **ஒரு பரப்பு அதன் தளத்திலுள்ள ஓர் அச்சையொட்டி ஒரு முறை சுற்றுவதால் உண்டாகும் பருமம், அப்பரப்பையும் அதன் பு.க. மையம் சுற்றிய தூரத்தையும் பெருக்கிவந்த தொகைக்குச் சமம்.**



படம் 57

குறிப்பு : அச்சைச் சுற்றும் முழுவில்லும் அச்சுக்கோட்டிற்கு ஒரு புறமாகவுள்ளது எனக் கொள்க.

வளைவரை x-அச்சைச் சுற்றுவதாகக் கொள்வோம்.

தேற்றம் 1-ன் தெரிப்பு :

முழுவரையின் நீளம் s எனவும் அதன் பு. க. மையக்குத்தாயம் $\bar{y}$ எனவும் இருப்பின் $s\bar{y} = \int y\,ds$ (தகுந்த எல்லைக்குள்) என்றறிவோம். வளைவரை சுற்றுவதால்

ஏற்படும் புறப்பரப்பு $\left[\begin{array}{ll} \llcorner P = y & MG = \bar{y} \\ \llcorner Q = y^1 & NG^1 = \bar{y}^1 \end{array}\right]$

$$= \int 2\pi\, y \cdot ds = 2\pi \int y \cdot ds$$

$$= 2\pi\, s \cdot \bar{y} = s\,(2\pi\,\bar{y})$$

= வளைவரையின் நீளம் X வளைவரையின் பு. க. மையம் சுற்றிய தூரம்.

தேற்றம் 2-ன் தெரிப்பு :

பரப்பு A எனவும் அதன் பு.க. மையக் குத்தாயம் $\bar{y}$ எனவுமிருப்பின் $A\bar{y}' = \int y'dA$ என்றறிவோம். பரப்பு சுற்றுவதால் ஏற்படும் பருமம்

$$= \int 2\pi y' \cdot dA$$

$$= 2\pi \int y'dA = 2\pi A \cdot \bar{y}' = A\,(2\pi\bar{y}')$$

= பரப்பு × பரப்பின் பு.க. மையம் சுற்றிய தூரம்.

குறிப்பு : மேற்கண்டவற்றில் வளைவரை அல்லது பரப்பு 2π கோணம்முழுவதும் (ஒருமுழுச்சுற்று) சுற்றுமல் α கோணம்மட்டும் சுற்றினுல், 2π வருமிடத்து α வருமென்பது தெளிவு.

§ 50. பாப்பசு தேற்றங்களின் பயன்கள் .

1. அரைவட்ட வளைவரையின் பு.க. மையம் காணலாம்.

அரைவட்ட வளைவரையின் நீளம் $= \frac{1}{2} \times 2\pi r = \pi r$ விட்டத்தை அச்சாகக் கொண்டு அரைவட்டத்தைச் சுற்றினுல் கோளம் ஏற்படும்.

கோளத்தின் புறப்பரப்பு $= 4\pi r^2$ பாப்பசு தேற்றத்தின்படி, $\bar{y}$-வில்லின் பு.க. மையக்குத்தாயமானுல்

$$2\pi \bar{y} \times (\pi r) = 4\pi r^2$$

$$\therefore \quad \bar{y} = \frac{4\pi r^2}{2\pi \times \pi r} = \frac{2r}{\pi}$$

2. அரைவட்டப்பரப்பின் பு.க. மையங்காணலாம். அரைவட்டப்பரப்பு $= \frac{1}{2} \pi r^2$.

விட்டத்தை அச்சாகக்கொண்டு அரைவட்டத்தைச் சுற்றினுல் கோளம் ஏற்படும். கோளத்தின் பருமம் $= \frac{4}{3} \pi r^3$. பாப்பசு தேற்றத்தின்படி, $\bar{y}$ அரைவட்டப்பரப்பின் பு.க. மையத்தின் குத்தாயமானுல்,

$$2\pi \bar{y} \left(\tfrac{1}{2} \pi r^2\right) = \tfrac{4}{3} \pi r^3$$

$$\therefore \quad \bar{y} = \frac{\frac{4}{3} \pi r^3}{2\pi \cdot \frac{1}{2} \pi r^2} = \frac{4r}{3\pi}$$

3. r ஆரையுள்ள ஒரு வட்டம் அதன் மையத்திலிருந்து C தூரத்திலுள்ள அச்சைச் சுற்றும்போது ஏற்படும் வளையத்தின் பருமனையும், புறப்பரப்பையுங் காணலாம்.

பாப்பசு தேற்றத்தின்படி

$$\text{பருமம்} = 2\pi \bar{y} \times \text{வட்டப்பரப்பு}$$

$$= 2\pi C + \pi r^2 = 2\pi^2 r^2 C$$

$$\text{புறப்பரப்பு} = 2\pi \bar{y} \cdot (\text{வட்டச்சுற்றளவு})$$

$$= 2\pi C \times 2\pi r = 4\pi^2 r C$$

4. ஒருநேர் வட்டக்கூம்பின் பருமம், புறப்பரப்பு இவற்றைக் காணலாம்.



படம் 58

கூம்பின் அடிஆரம் r என்றும் உயரம் h என்றும் கொள்க. OC-ஐ அச்சாகக்கொண்டு OA என்ற நேர்கோடு சுழல்வதால் கூம்பு ஏற்படுகிறது.

$\triangle OCA$-யின் பரப்பு $= \frac{1}{2}\, rh$

$\triangle OCA$-யின் பு.க. மையக்குத்தாய தூரம், $\bar{y} = NG \; \frac{r}{3}$

$\therefore$ கூம்பின் பருமம் $= 2\pi \; \frac{r}{3} \times \left(\frac{1}{2}\, rh \right)$,

$\triangle OCA = \frac{1}{2}\, rh$

$= \frac{1}{3}\, \pi r^2 h$

கூம்பின் அல்லது OA தோற்றுவிக்கும்

புறப்பரப்பு $= OA$-யின் நீளம் $\times$ அதன் பு.க. மையம் செல்லுந்தூரம்

$= \sqrt{r^2 + h^2} \times 2\pi\, MG_2 - G_2$, OA-யின் பு.க. மையம்

$= l \times 2\pi \times \frac{r}{2}$

$= \pi r l$ இங்கு l-சாய்வுயரம் $MG_{.} = \frac{r}{2}$

பயிற்சிகள் 39

1. ஒரு சமபக்க முக்கோணம் அதன்பக்கத்தை யொட்டிச் சுற்றவுண்டாகும் உருளைப்பருமத்தின் புறப்பரப்பையும், பருமத்தை யுங்காண்க.

2. பாப்பசு தேற்றங்களைக் கொண்டு (a) ஒரு நேர்வட்ட உருளை (b) ஒரு நேர்வட்டக்கூம்பு, இவற்றின் பருமத்தையும் புறப்பரப்பையும் கணக்கிடுக.

3. ஒருவட்டம் அதன் ஒருதொடு கோட்டை யொட்டிச் சுற்ற ஏற்படும் உருளைப்பருமம், அதன் புறப்பரப்பு இவற்றை மதிப்பிடுக.

4. ஒரு நீள் வட்டம் அதன் ஓர் இயக்குவரை (directrix)-யை யொட்டிச் சுழலும்போதுண்டாகும் உருளைப்பருமத்தைக் கணக்கிடுக.

13. நிலை நெம்புத்திறன் (Moment of Inertia)

§ 50. வரையறை

m நிறையுள்ள ஒரு பொருள் ஒரு நேர்கோட்டிலிருந்து r தூரத்திலிருந்தால் அக்கோட்டையொட்டி அப்பொருளின் நிலை நெம்புத் திறன் (நி. நெ. தி,) mr^2 எனப்படும். அதுபோல $m_1, m_2, m_3,$ ...... நிறைகளும் கோட்டிலிருந்து முறையே r_1, r_2, r_3 ...... தூரங்களுமுள்ள ஒரு நிறைகளின் கூட்டத்தின் நி.நெ. தி. $m_1 r_1^2 + m_2 r_2^2 + m_3 r_3^2 + \ldots\ldots \equiv \Sigma (mr^2)$ ஆகும்.

பொருள்கள் தனித்திராமல் தொடர்ந்து ஒரே பொருளாக இருக்குமானால் நி. நெ. திறனின் கூடுதலானது ஒரு வரையறுத்த தொகை (definite Integral) ஆகும்.

ஒரு நுண்பகுதியின் நிறை $\triangle m$ எனவும் ஒரே நேர்கோட்டிலிருந்து அதன் தூரம் r எனவுமிருப்பின் அக்கோட்டையொட்டி முழுப்பொருளின் நி. நெ. தி, $\Sigma r^2 \triangle m$ அல்லது $\int r^2 dm$ ஆகும். பொருளின் கூட்டு நிறை M எனவும், $MK^2 = \int r^2 dm$ எனவும் கொண்டால், K என்பது அக்கோட்டையொட்டிப் பொருளின் சுழிப்பு ஆரம் அல்லது சுழியாரை (radius of gyration) எனப்படும்.

கோட்டிலிருந்து K தூரத்திலுள்ள ஒரு புள்ளியில் M-ன் நிறை முழுவதும் தேங்கியிருப்பின் இதே அளவுள்ள நி. நெ. தி. வருமென்பதாகும்.

குறிப்பு : மேலே கண்டவற்றில் பொருளின் அடர்த்தி எங்கும் சமமெனக் கொண்டுள்ளது. அடர்த்தி ஒரு மாறி $P = K(x, y)$ எனில் அதைத் தொகு சார்புடன் இணைத்துத் தொகுக்க வேண்டும்.

எ. கா 1.

$2a$ நீளமுள்ள நேரான, சமகுறுக்கு வெட்டுள்ள, சீரான அடர்த்தியுள்ள ஒரு கோலின் நி. நெ. திறனை அதன் மையக் குத்துக் கோட்டையொட்டிக் காண்க.

கோலை x-அச்சாகவும் அதன் மையம் O-வை ஆதியாகவும் கொள்க.

$OP = x$

ஒரு நுண்பகுதி $PQ = \triangle x$

$\triangle m = \triangle x \cdot \rho$, ρ-அடர்த்தி ஒரு மாறிலி.



படம் 59.

OY-ஐயொட்டி $\triangle m$-ன் நி. நெ. தி. $= \triangle m \cdot x^2$

$$= \triangle x \cdot \rho \cdot x^2$$

$\therefore$ AB யின் நி. நெ. தி. $= \sum_{-a}^{+a} \triangle x \cdot \rho \cdot x^2$

$$= \int_{-a}^{+a} \rho\, x^2 \cdot dx = 2\rho \int_0^a x^2 \cdot dx$$

$$= \frac{2\rho}{3} \cdot a^3.$$

$$= (2 \cdot a \cdot \rho). \frac{a^2}{3} = M. \frac{a^2}{3}$$

$$= MK^2 \ldots\ldots \text{(i)}$$

$K = \frac{a}{\sqrt{3}}$ சுழியாரை

எ. கா. 2.

r-ஆரையுள்ள ஒரு வட்டமான மெல்லிய கம்பியின் மையத்தின் வழியே வட்டத்தின் தளத்திற்குச் செங்குத்தான கோட்டை யொட்டிக் கம்பியின் நி. நெ. தி. காண்க.

OZ-தளத்திற்குச் செங்குத்தான அச்சு

$PQ = \triangle m$, நுண் பகுதியின் நிறை

r = அச்சிலிருந்து $\triangle m$-ன் தூரம் என்ருல் வட்டக்கம்பியின் நி. நெ. தி. = $\Sigma \triangle m \cdot r^2$, r ஒரு மாறிலி.



படம் 60.

$= r^2 \Sigma \triangle m = Mr^2$

$= MK^2$ ...... வாய்பாடு ......(ii)

∴ கம்பியின் சுழியாரை $K = r$, வட்ட ஆரை.

எ. கா. 3.

r ஆரையுள்ள, மெல்லிய, சம அடர்த்தியுள்ள ஒரு வட்டத் தகட்டின் மையத்தின் வழியாகத் தளத்திற்குச் செங்குத்தான அச்சையொட்டி நி. நெ. தி காண்க.



படம் 61.

வட்டத்தகட்டின் நிறை

$M = \pi r^2 \rho$, ρ அடர்த்தி ஒரு மாறிலி.

தகட்டை நுண்ணிய, $\triangle x$ இடைவெளியுள்ள x, $x + \triangle x$ ஆரைகள் கொண்ட, பொதுமைய வட்ட வளையங்களாக்கினுல் (rings), இரு வட்டங்களுக்கு மிடைப்பட்ட நுண் பகுதியின் நிறை $\triangle x \to 0$ எல்லையில் (ஒரு படி அண்ணளவுக்கு) $\rho \cdot 2\pi x \cdot \triangle x$ எனவாகும்.

∴ வட்டத்தகட்டின் நி. நெ. தி. வாய்பாடு (ii) ஐக் கொண்டு $\Big\} \sum_{0}^{r} (\rho\ 2\pi x \cdot \triangle x)\, x^2$

$$= \int_0^r \rho \cdot 2\pi x^3 \cdot dx = 2\pi\rho \left(\frac{x^4}{4}\right)_0^r$$

$$= \rho \cdot \pi \frac{r^4}{2} = \frac{1}{2}(\rho\pi r^2)\, r^2$$

$$= \tfrac{1}{2} Mr^2 \qquad \text{........ வாய்பாடு (iii)}$$

∴ சுழியாரை $= \dfrac{r}{\sqrt{2}}$

எ. கா. 4

ஒரு கோளத்தின் நி. நெ. திறனை அதன் ஒரு விட்டத்தை யொட்டிக் காண்க.

r-கோளத்தின் ஆரையெனில், அதன் நிறை $= \frac{4}{3}\pi r^3 \rho$. விட்டத்தை x-அச்சாகக் கொண்டு அதற்குச் செங்குத்தான நுண்ணிய $\triangle x$ தடிப்புள்ள வட்டத்தகடுகளாகக் கோளத்தை வெட்டுவோமானால்,



படம் 62.

$\triangle x \to 0$ என்ற எல்லையில் ஒரு வட்டத்தகட்டின் நிறை

$= \pi\, y^2 \cdot \triangle x \cdot \rho$ (ρ-அடர்த்தி ஒரு மாறிலி).

OX-ஐ ஒட்டி வாய்பாடு (iii) ஐக்கொண்டு

அதன் நி. நெ. தி. $= (\pi y^2 \cdot \triangle x \cdot \rho)\, \dfrac{y^2}{2}$

$$\text{கோளத்தின் நி. நெ. தி.} = \sum_{-r}^{+r} (\pi y^2 \cdot \triangle x \cdot \rho) \cdot \frac{y^2}{2}$$

$$= 2 \int_0^r \rho \cdot \frac{\pi}{2} \cdot y^4 \cdot dx$$

$$= \rho \cdot \pi \int_0^r y^4 \cdot dx = \rho \cdot \pi \int_0^a (r^2 - x^2)^2 \, dx$$

$$= \rho \cdot \pi \int_0^r (r^4 - 2r^2x^2 + x^4) \, dx \; ; \; r\text{-மாறிலி}$$

$$= \rho \pi r^5 \left(1 - \tfrac{2}{3} + \tfrac{1}{5}\right) = \rho \cdot \pi \, \tfrac{8}{15} r^5$$

$$= \left(\rho \cdot \tfrac{4}{3} \cdot \pi r^3\right) \tfrac{2}{5} \cdot r^2$$

$$= \tfrac{2}{5} M \cdot r^2 \cdot \qquad \text{வாய்பாடு (iv)}$$

$$\therefore \; K = \sqrt{\tfrac{2}{5}} \cdot r$$

§ 51. இணை அச்சுத்தேற்றம் (Theorem of Parallel Axes)

தேற்றம் : ஒரு பொருளின் பு. க. மையத்தின் வழியாகச் செல்லும் அச்சையொட்டி அதன் நி. நெ. தி. I என்றால், d தூரத்திலுள்ள இணையான அச்சையொட்டி அப்பொருளின் நி. நெ. தி. $I' = I + Md^2$: M-என்பது பொருளின் நிறை.

பொருளைச் சமதளத் தகடாகக் கொள்வோம்.



படம் 63.

பொருளின் பு. க. மையம் G-யை ஆதிப்புள்ளியாகவும் $G X$, Gy-ஐ அச்சுகளாகவும் கொள்வோம்.

$\triangle m$ — $P(x, y)$ என்ற புள்ளியில் நுண்பகுதியின் நிறையெனில், பு. க. மையம், G, ஆதிப்புள்ளியாதலால்

$$\bar{x} = \frac{\Sigma(\triangle m \cdot x)}{(\Sigma \triangle m)} = 0 \qquad \therefore \Sigma(\triangle m \cdot x) = 0 \qquad \text{...(i)}$$

$$\bar{y} = \frac{\Sigma(\triangle m \cdot y)}{\Sigma(\triangle m)} = 0 \qquad \therefore \Sigma(\triangle m \cdot y) = 0 \qquad \text{...(ii)}$$

Gy-ஐ யொட்டிப் பொருளின் நி. நெ. தி.

$$= \Sigma(\triangle m \cdot x^2) = Iy,$$

Gx-ஐ யொட்டிப் ,, $= \Sigma(\triangle m \cdot y^2) = Ix$
என்போம்.

O எனும் புள்ளி வழியாக, Ox', Oy' என்ற Gx, Gyகளுக்கு இணையான அச்சுகள் வரைக. இவ்வச்சுகளை யொட்டிப் புள்ளிகள் G-(d_1, d_2) $P(x', y')$, எனில் $x' = x + d_1$, $y' = y + d_2$

Oy'-ஐ ஒட்டிப் பொருளின் நி. நெ. தி. $= \Sigma(\triangle m \cdot x'^2) = I'y$

Ox'-ஐ ,, ,, ,, $= \Sigma(\triangle m y'^2) = I'x$

$$\begin{aligned} I'y &= \Sigma \triangle m \cdot x'^2 = \Sigma(\triangle m)(x + d_1)^2 \\ &= \Sigma \triangle m(x^2 + d_1^2 + 2d_1 x_9) \\ &= \Sigma \triangle m \cdot x^2 + \Sigma \triangle m\, d_1^2 + \Sigma \triangle m \cdot 2d_1 x \\ &= \Sigma \triangle m \cdot x^2 + d_1^2 \Sigma \triangle m + 2d_1 \Sigma \triangle m \cdot x \\ &= Iy + Md_1^2, \qquad \text{(i)} \quad (\therefore \Sigma \triangle m \cdot x = 0) \end{aligned}$$

அதுபோலவே

$$I'x = Ix + M d_2^2 \qquad \text{(ii)} \quad (\therefore \Sigma(\triangle m \cdot y) = 0)$$

கிளை 1. I என்பது பு. க. மையத்தின் வழியாகத் தகட்டின் தளத்திற்குச் செங்குத்தான அச்சையொட்டிய நி. நெ. தி. எனவும், I' என்பது O-வழியாகத் தளத்திற்குச் செங்குத்தான ஓர் இணை அச்சையொட்டிய நி. நெ. தி. எனவுமிருப்பின், முன் பக்கத்திலுள்ள படத்திற்கண்டபடி (படம் 63),

$$\begin{aligned} I' &= \Sigma \triangle m \cdot OP^2 = \Sigma \triangle m(OQ^2 + QP^2) \\ &= \Sigma \triangle m[(x + d_1)^2 + (y + d_2)^2] \end{aligned}$$

$$= \Sigma \triangle m\,[x^2 + d_1^2 + 2d_1 x] + \Sigma \triangle m\,[y^2 + d_2^2 + 2d_2 y]$$

$$= \Sigma \triangle m\,(x^2 + y^2) + \Sigma \triangle m\,(d_1^2 + d_2^2) + 2d_1 \Sigma (\triangle m - 1\,x) + 2d_2 \Sigma (\triangle m + y)$$

$$= \Sigma \triangle m \cdot GP^2 + \Sigma \triangle m \cdot OG^2$$

$$= \Sigma \triangle m \cdot r^2 + \Sigma \triangle m \cdot d^2 \qquad \begin{bmatrix} GP = r \\ OG = d \end{bmatrix}$$

$$= I + Md^2$$

கிளை 2. ஒரு பொருளின் முப்பரிமாணத்திலும் இத் தேற்றத்தின் உண்மையைக் காணலாம்.

கிளை 3. இத்தேற்றத்திலிருந்து, பு. க. மையத்தின் வழியாகச் செல்லும் அச்சையொட்டிய நி. நெ. தி. மிகக் குறைந்தது எனக் காணலாம். $\therefore\ I' = I + Md^2$-ல் $d = 0$

§ 52 செங்குத்து அச்சுத்தேற்றம்: (Theorem of Perpendicular Axes)

தேற்றம்: Ix, Iy என்பன ஒரே தளத்திறுள்ள ஒரு பொருளின் Ox, Oy என்ற அச்சுகளையொட்டிய நி. நெ. தி. எனில், O-வழியாகத் தளத்திற்குச் செங்குத்தான அச்சையொட்டிய நி. நெ. தி.

$$I = Ix + Iy$$

$\triangle m$ நுண்பகுதிப் பொருளின் புள்ளி $P(x, y)$, $OP = r$ எனில் $Iy = \Sigma \triangle m \cdot x^2$; $Ix = \Sigma \triangle m \cdot y^2$

$$\therefore\ Iy + Ix = \Sigma \triangle m \cdot x^2 + \Sigma \triangle m \cdot y^2$$

$$= \Sigma\,[\triangle m\,(x^2 + y^2)]$$

$$= \Sigma\,[\triangle m \cdot r^2] = I$$

எ. கா. 1.

$2a$ நீளமுள்ள நேரான மெல்லிய கோலின் நி. நெ. திறனை அக் கோலின் முனையில் செங்குத்தாக உள்ள அச்சையொட்டிக் காண்க.

Gy-ஐ யொட்டி நி. நெ. தி. $= \dfrac{Ma^2}{3}$ எனக் கண்டோம்.

இணை அச்சுத்தேற்றப்படி Ay'-ஐ ஒட்டி நி. நெ. தி.



படம் 64.

$$= \frac{Ma^2}{3} + Ma^2 = \frac{4}{3} Ma^2$$

எ. கா. 2.

$2a$, $2b$ நீள, அகலமுள்ள ஒரு நீள்சதுரத்தகட்டின் நி. நெ. தி.

(i) நீளப்பக்கங்களின் மையங்களைச்சேர்க்கும் நேர்கோட்டை அச்சாக,

(ii) அகலப்பக்கங்களின் மையங்களைச்சேர்க்கும் நேர் கோட்டை அச்சாக

(iii) தகட்டின் பு.க. மையத்தின் வழியாகத் தளத்திற்குச் செங்குத்தான கோட்டை அச்சாக

(iv) நீள்சதுரத்தின் ஒருமுனையில் தளத்திற்குச் செங்குத்தான கோட்டை அச்சாகக் கணக்கிடுக.



படம் 65.

(i) நீள்சதுரத்தை நீளப்போக்கில் நுண்ணிய அகலமும், $2a$ நீளமுமுள்ள $\triangle m$ நிறையுள்ள கோல்களாக வெட்டினால்,

$$\text{நி.நெ.தி.} = \Sigma \triangle m \cdot \frac{a^2}{3}$$

$$= \frac{a^2}{3} \Sigma \triangle m = M \frac{a^2}{3} \text{ ஆகும்.}$$

(ii) அகலப்போக்கில் நுண்ணிய அகலமுள்ள கோல்களாக வெட்டினால்

$$\text{நி.நெ.தி.} = M \frac{b^2}{3}$$

(iii) பு.க. மையமானது எதிர்ப்பக்க மையங்களைச்சேர்க்கும் இருகோடுகளின் சந்திப்பு, O. OZ தளத்திற்குச் செங்குத்தான அச்செனில்,

$$I = I_y + I_x = M \frac{(a^2 + b^2)}{3}$$

(iv) AZ', OZ-க்கு இணையெனில், AZ'-ஐ ஒட்டி நி.நெ.தி

$$I' = I + M \cdot OA^2 = M \frac{a^2 + b^2}{3} + M(a^2 + b^2)$$

$$= \tfrac{4}{3} M(a^2 + b^2)$$

குறிப்பு : ஒரு நீண்ட கனசதுரத்தின் நீள, அகல, உயரங்கள் முறையே $2a$, $2b$, $2c$ எனில் அதன் பு.க. மையம் வழியாகப் பக்க தளங்களுக்குச் செங்குத்தாயுள்ள அச்சுகளை யொட்டி நி.நெ. திறன்

(i) நீள, அகலங்கொண்ட தளங்களுக்குச் செங்குத்தான அச்சையொட்டி $M \frac{(a^2 + b^2)}{3}$ ஆகும்.

(ii) நீள, உயரங்கொண்ட தளங்களுக்குச் செங்குத்தான அச்சையொட்டி $M \frac{(a^2 + c^2)}{3}$ ஆகும்.

(iii) அகல, உயரங்கொண்ட தளங்களுக்குச் செங்குத்தான அச்சையொட்டி $M \frac{(b^2 + c^2)}{3}$ ஆகும்.

எ. கா. 3

ஒரு வட்டத்தகட்டின் தளத்திலுள்ள (i) ஒரு விட்டத்தை அச்சாகக்கொண்டு (ii) ஒரு தொடுகோட்டை அச்சாகக்கொண்டு அதன் நி.நெ.தி. காண்க.

(i) a ஆரையுள்ள ஒரு வட்டத்தகட்டின் தளத்திற்குச் செங்குத்தாக பு.க. மையம் வழியாகச் செல்லும் அச்சையொட்டி

நி.நெ.தி. $= M \frac{a^2}{2}$

வட்டத்தளத்தில் செங்குத்தாக இரு விட்டங்களையொட்டி நி.நெ.தி. சமமாகவிருக்கும். ஒவ்வொன்றும் I எனில் செங்குத்து

அச்சுத் தேற்றப்படி, $I + I = M \frac{a^2}{2}$

$$\therefore \quad I = M \frac{a^2}{4}$$

(ii) தளத்தில் வட்டத்தைத் தொடுகோடு அதற்கு இணையான விட்டத்திலிருந்து a தூரத்திலிருக்கும் ஆதலால் இணை அச்சுத் தேற்றத்தின்படி

$$I = \frac{Ma^2}{4} + Ma^2 = \frac{5}{4} Ma^2$$

எ. கா. 4.

ஒரு நீள்வட்டத்தின் நி.நெ. திறனை அதன் நெட்டச்சை யொட்டிக் காண்க.

நீள்வட்டத்தை அதன் நெட்டச்சுக்குச் செங்குத்தாக $\triangle x$ அகலமுள்ள நுண்பகுதிச் செவ்வகங்களாக வெட்டினால் $2y$ நீளமுள்ள நுண்பகுதியின் நிறை



படம் 66.

$$\triangle m = \rho \cdot 2y \cdot \triangle x.$$

OX-ஐ யொட்டி அதன் நி.நெ.தி

$$= \triangle m \cdot \frac{y^2}{3}$$

∴ நீள்வட்டத்தின் நி.நெ.தி $= \sum_{-a}^{+a} (\triangle m) \cdot \frac{y^2}{3}$

$$= 2 \sum_{0}^{a} (\rho \cdot 2y \triangle x) \cdot \frac{y^2}{3}$$

$$= \frac{4\rho}{3} \int_{0}^{a} y^3 \cdot dx = \frac{4\rho}{3} \int y^3 \cdot \frac{dx}{d\theta} \cdot d\theta$$

நீள்வட்டத்தின் சமன்பாடுகள் $x = a \cos \theta$

$y = b \sin \theta$ என்று

கொண்டால்

நி.நெ.தி. $= \frac{4\rho}{3} \int_{0}^{\frac{\pi}{2}} b^3 \sin^3\theta \cdot a \sin\theta \cdot d\theta$

$$= \frac{4\rho}{3} ab^3 \int_{0}^{\frac{\pi}{2}} \sin^4\theta \cdot d\theta$$

$$= \frac{4}{3} \rho\, ab^3 \cdot \frac{3 \cdot 1}{4 \cdot 2} \cdot \frac{\pi}{2} = \rho \frac{\pi b^3}{4}$$

$$= (\pi ab \cdot \rho) \frac{b^2}{4} = M \cdot \frac{b^2}{4}$$

சுழியாரை $= \frac{b}{2}$

கிளை. 1. குற்றச்சையொட்டி

$$\text{நி.நெ.தி.} = M\frac{a^2}{4}$$

மையம்வழியாகத் தளத்திற்குச் செங்குத்தான அச்சையொட்டி

$$\text{நி.நெ.தி.} = \frac{M}{4}(a^2 + b^2)$$ என அறியலாம்.

எ. கா. 5.

ஒருநேர் வட்டக்கூம்பின் (i) அச்சையொட்டி (ii) அதன் முனை வழியாக அச்சுக்குச்செங் குத்தான ஒரு கோட்டை யொட்டி நி.நெ.தி.காண்க.



படம் 67.

(i) வட்டக்கூம்பை அதன் அச்சுக்குச் செங்குத்தான $\triangle x$ தடிப் புள்ள, y ஆரையுள்ள நுண்பகுதி வட்டத்தகடுகளாக வெட்டினால்

$$\triangle m = \pi y^2 \cdot \triangle x \cdot \rho$$

மையத்தின்வழியாக வட்டத்திற்குச் செங்குத்தான அச்சையொட்டி

$$\text{நி.நெ.தி.} = (\triangle m) \cdot \frac{y^2}{2}$$

$$\therefore \text{ வட்டக்கூம்பின் நி.நெ.தி.} = \sum (\triangle m) \cdot \frac{y^2}{2}$$

$$= \sum \pi y^2 \rho \cdot \triangle x \cdot \frac{y^2}{2}$$

$$= \int_0^h \pi \rho \cdot \frac{y^4}{2} \cdot dx$$

கூம்பின் உச்சிக்கோணத்தில்பாதி α எனில்,

$$y = x \tan \alpha$$

$$\therefore \text{ நி.நெ.தி.} = \tfrac{1}{2}\int_0^h \pi \cdot \rho \cdot \tan^4\alpha \cdot x^4 \cdot d.$$

$$= \frac{1}{2}\pi\rho \cdot \tan^4\alpha \cdot \left(\frac{x^5}{5}\right)_0^h; \quad \tan\alpha = \frac{a}{h}$$

$$= \pi\rho \tan^4\alpha \cdot \frac{h^5}{10} = \pi\rho \frac{a^4}{h^4} \cdot \frac{h^5}{10}$$

$$= \frac{\pi\rho \cdot a^4 h}{10} = \left(\frac{1}{3}\pi a^2 h \rho\right) \times \frac{3}{10} a^2$$

$$= \frac{3}{10} Ma^2$$

(ii) $\triangle m$ நிறையுள்ள வட்டத்தகட்டின் தளத்திலுள்ள ஒரு விட்டத்தையொட்டி அதன்

$$\text{நி.நெ.தி.} = (\triangle m)\frac{y^2}{4}$$

$\therefore$ OY அச்சையொட்டி வட்டத்தகட்டின்

$$\text{நி.நெ.தி.} = (\triangle m)\frac{y^2}{4} + \triangle m \cdot x^2$$

$$= \triangle m\left(\frac{y^2}{4} + x^2\right)$$

$$= (\pi y^2 \cdot \rho \cdot \triangle x)\left(\frac{y^2}{4} + x^2\right)$$

$\therefore$ OY-ஐ யொட்டி வட்டக்கூம்பின்

$$\text{நி.நெ.தி.} = \sum (\pi y^2 \cdot \rho \cdot \triangle x)\left(\frac{y^2}{4} + x^2\right)$$

$$= \int_0^h \pi\rho \cdot y^2 \left(\frac{y^2}{4} + x^2\right) dx$$

$$= \pi\rho \int_0^h \left(\frac{y^4}{4} + x^2 y^2\right) \cdot dx$$

$$= \pi\rho \int_0^h \left(\tan^4\alpha \cdot \frac{x^4}{4} + x^2 \cdot x^2 \tan^2\alpha\right) dx$$

$$= \pi\rho \left(\tan^4\alpha \cdot \frac{h^5}{5\cdot 4} + \tan^2\alpha \cdot \frac{h^5}{5}\right)$$

$$= \pi\rho \cdot \frac{\tan^2\alpha \cdot h^5}{20} (\tan^2\alpha + 4)$$

$$= \frac{\pi\rho}{20} \cdot \frac{a^2}{h^2} h^5 \left(\frac{a^2}{h^2} + 4\right) = \frac{\pi\rho}{20} a^2 h (a^2 + 4h^2)$$

$$= \left(\tfrac{1}{3}\pi a^2 h \rho\right) \cdot \tfrac{3}{20} (a^2 + 4h^2)$$

$$= \tfrac{3}{20} M (a^2 + 4h^2)$$

எ. கா. 6.

ஒரு விட்டத்தையொட்டி ஒருகோளத்தின் புறப்பரப்பின் நி.நெ.தி. காண்க.



படம் 68.

கோளத்தின் புறப் பரப்பை விட்டத்திற்குச் செங்குத்தாக உள்ளீடற்ற கூம்புத் துண்டுகளாக் கிஞல், (x,y) புள்ளியில் $\triangle s$ சாய்வுயரமுள்ள ஒரு கூம்புத்துண்டத்தின் (Frustum) புறப்பரப்பு $= 2\pi y \cdot \delta s$. அதன் நிறை, $\triangle m = 2\pi y \cdot \rho \cdot \partial s$. கூம்புத் துண்டின் அடிவட்ட மையத்தின் வழியாக அதன் தளத்திற்குச் செங்குத்தான அச்சையொட்டி நி. நெ. தி. $= \triangle m \cdot y^2 = (2\pi y \cdot \rho\, \delta s)\, y^2$

கோளப்புறப்பரப்பின் நி.நெ.தி

$$= \sum_{-a}^{+a} (2\pi y \cdot \rho\, \partial s)\, y^2$$

$$= 2 \int_0^a 2\pi\rho \cdot y \cdot y^2 \sqrt{1 + \left(\frac{dy}{dx}\right)^2} \cdot dx$$

$$= 4\pi\rho \int_0^a y^3 \sqrt{1 + \frac{x^2}{y^2}} \cdot dy\,,$$

$$\because \quad x^2 + y^2 = a^2$$

$$\frac{dy}{dx} = -\frac{x}{y}$$

$$= 4\pi\rho \int_0^a y^2 \sqrt{x^2 + y^2} \cdot dx$$

$$= 4\pi\, \rho \cdot a \int_0^{\frac{\pi}{2}} y^2 \cdot \frac{dx}{d\theta} \cdot d\theta$$

$$= 4\pi\, \rho \cdot a \int_0^{\frac{\pi}{2}} a^2 \sin\theta \cdot a \sin\theta \cdot d\theta.$$

$$x = a \cos\theta.$$
$$y = a \sin\theta.$$

$$= 4\pi\, \rho\, a^4 \int_0^{\frac{\pi}{2}} \sin^3\theta.\, d\theta.$$

$$= 4\pi\, \rho \cdot a^4\, \tfrac{2}{3} = \tfrac{8}{3}\, \pi\rho\, a^4.$$

$$= (4\pi a^2\, \rho)^2 \cdot \frac{a^2}{3} = 2\, M \frac{a^2}{3}$$

எ. கா. 7.

இரு சமபக்க $\triangle OBC$-யின் உயரம் h, அடிப்பக்கம் $BC = 2b$, O முனை வழியாக அடிப்பக்கத்திற்கு இணையான அச்சையொட்டி நி. நெ. தி. காண்க.

BC-யின் மையக்குத்து OX—x அச்சாகவும் OY—y அச்சாகவும் கொண்டு, BC-க்கு இணையான, $\triangle x$ தடிப்புள்ள PQ என்ற நுண் பகுதிகளாக முக்கோணத்தைப் பிரிக்கலாம்.



படம் 69.

$$\triangle m = 2y\rho \cdot \triangle x.$$

PQ என்ற நுண் பகுதியின் பு.க. மையம் அதன் மையத்தில் x-அச்சின் மேல் O-விலிருந்து x-தூரத்திலுள்ளது.

$\therefore$ OY-ஐயொட்டி நுண் பகுதியின் நி. நெ. தி.

$$= \triangle m \cdot x^2 = (2y\,\rho \cdot \triangle x)\, x^2$$

$$\therefore \quad \triangle OBC\text{-யின் நி. நெ. தி.} = \sum_0^h \triangle m\, x^2 = \sum_0^h (2y\,\rho \cdot \triangle x) \cdot x^2.$$

$$= \int_0^h 2y \cdot x^2 \rho \cdot dx,$$

$$\frac{y}{x} = \frac{b}{h} \quad \therefore \quad y = \frac{b}{h}\,x.$$

$$= \int_0^h 2\rho \cdot \frac{b}{h} \cdot x \cdot x^2\, dx$$

$$= 2\rho\,\frac{b}{h} \cdot \frac{h^4}{4}$$

$$= \frac{\rho b h^3}{2} = (bh\,\rho)\,\frac{h^2}{2}$$

$$= M$$

கிளை : 1. OX-ஐ ஒட்டி நி. நெ. தி. $= \Sigma \Delta m. \frac{y^2}{3}$

$$= \int_0^h 2y\rho \cdot \frac{y^2}{3}\, dx$$

$$= \frac{2\rho}{3} \int_0^h \frac{b^3}{h^3} \cdot x^3 \cdot dx$$

$$= \frac{2\rho}{3} \cdot \frac{b^3}{h^3} \times \frac{h^4}{4} = \frac{\rho h\, b^3}{6} = \frac{Mb^2}{6}$$

கிளை : 2. பு. க. மையம் G வழியாக OY-க்கு இணையாக உள்ள அச்சையொட்டி நி. நெ. தி. காண இணை அச்சுத் தேற்றத்தின் படி,

$$I' = I + Md^2$$

இங்கு $M \frac{h^2}{4} = I + M \left(\frac{2}{3}\, h\right)^2$

$$\therefore \quad I = \frac{Mh^2}{2} - M. \frac{4}{9}\, h^2 = \frac{Mh^2}{18}$$

கிளை : 3. BC-யை யொட்டி நி. நெ. தி.

$$I' = I + Md^2$$

$$= \frac{Mh^2}{18} + M\left(\frac{h}{3}\right)^2 = \frac{Mh^2}{18} + \frac{Mh^2}{9}$$

$$= \frac{Mh^2}{}$$

கிளை : 4. OBC தளத்திற்குச் செங்குத்தாக G வழியாகச் செல்லும் அச்சையொட்டி

நி. நெ. தி $I = Ix + Iy$

$$= \frac{1}{6} Mb^2 + \frac{Mh^2}{18} = \frac{M}{18}(3b^2 + h^2)$$

கிளை : 5. தளத்திற்குச் செங்குத்தாக B முனை வழியே செல்லும் அச்சையொட்டி.

$$I' = I + Md^2$$

$$= \frac{M}{18}(3b^2 + h^2) + M \cdot BG^2.$$

$$= \frac{M}{18}(3b^2 + h^2) + M\left[b^2 + \left(\frac{h}{3}\right)^2\right]$$

$$= Mb^2\left(\tfrac{1}{6} + 1\right) + Mh^2\left[\tfrac{1}{18} + \tfrac{1}{9}\right]$$

$$= Mb^2 \times \frac{7}{6} + Mh^2 \times \frac{1}{6} = \frac{M}{6}(h^2 + 7b^2)$$

எ. கா. 8.



படம் 70.

$x = a(\theta - \sin\theta)$; $y = a(1 - \cos\theta)$ என்ற உருள் வளைக்கும் அதன் அடிக் கோட்டிற்கும் இடைப்பட்ட பரப்புக்கு அடிக்கோட்டை யொட்டி நி. நெ. தி. காண்க.

$P\ (x, y)$ புள்ளியிலிருந்து x-அச்சுக்கு PM குத்துக்கோடு வரைக.

$(PM \cdot \delta x)$ என்ற நுண் பாகங்களாகப் பரப்பைப் பிரித்தால்
$\triangle m = y \cdot \triangle x \cdot \rho$

வாய்பாட்டின்படி, OX-ஐ யொட்டி $\triangle m$-ன் நி. நெ. தி.

$$= \triangle m \cdot \frac{4}{3}\left(\frac{y}{2}\right)^2 = \triangle m \cdot \frac{y^2}{3}$$

$\therefore$ முழுப்பரப்பின் நி. நெ. தி. $= \sum \Delta m \dfrac{y^2}{3}$

$$= \sum_{0}^{2\pi a} y \cdot \rho \cdot \triangle x \cdot \frac{y^2}{3}$$

$$= \int_0^{2\pi a} \rho . \frac{y^3}{3} . dx$$

$$= \frac{\rho}{3}\int_0^{2\pi} a^3 (1 - \cos\theta)^3 . a (1 - \cos\theta)\, d\theta.$$

$$= \frac{a^4 . \rho}{3}\int_0^{2\pi} (1 - \cos\theta)^4 \cdot d\theta.$$

$$= \frac{a^4 \cdot \rho}{3} . 2\int_0^{\pi} \left(2\sin^2\frac{\theta}{2}\right)^4 \cdot d\frac{\theta}{2} \times 2$$

$$= \frac{64}{3} \rho \cdot a^4 . \int_0^{\frac{\pi}{2}} \sin^8\phi\, d\phi\ ;\ \phi = \frac{\theta}{2}$$

$$= \rho \cdot \frac{64}{3} . a^4 . \frac{7 \cdot 5 \cdot 3 \cdot 1}{8 \cdot 6 \cdot 4 \cdot 2} \cdot \frac{\pi}{2}$$

$$= \tfrac{35}{12} \cdot \pi \rho a^4 = 3\pi a^2 \rho \times \tfrac{1}{3} \times \tfrac{35}{12} a^2$$

$$= M \cdot \tfrac{35}{36} a^2 = \tfrac{35}{36} Ma^2 : \because\ M = (3\pi a^2 \rho)$$

பயிற்சிகள் 40

1. a அலகுகள் நீளமுள்ள ஒரு கோலின் (rod) அடர்த்தி அதன் ஒரு முனையிலிருந்து தூரத்திற்கு நேர் விகிதத்திலிருக்கிறது. அம் முனையில் கோலுக்குச் செங்குத்தான அச்சையொட்டிக் கோலின் நி. நெ. தி. காண்க.

2. a-ஆரையுள்ள ஒரு வட்டத் தகட்டின் அடர்த்தி மையத்திலிருந்து புள்ளிகளுள்ள தூரத்தைப் போல் K மடங்கு மையத்தின் வழியாகத் தளத்திற்குச் செங்குத்தான அச்சையொட்டி வட்டத்தின் நி. நெ. தி. காண்க.

3. ஒரு நீள் வட்டத்தின் நி. நெ. திறனை பு. க. மையத்தில் தளத்திற்குச் செங்குத்தான கோட்டை யொட்டிக் காண்க.

4. **கீழ்க்கண்டவற்றின் நிறை M எனக் கொண்டு நி. நெ. தி. காணவும்.**

(i) a பக்கமுள்ள ஒரு சதுரத்திற்கு அதன் ஒரே மூலை விட்டத்தையொட்டி.

(ii) a ஆரையும், 2 α மையக்கோணமுமுள்ள ஒரு வட்ட கோணப்பகுதிக்கு (sector) தளத்திற்குச் செங்குத்தான மையத்தில் வரைந்த அச்சையொட்டி.

(iii) செவ்வகலத்தை (latus rectum) ஒட்டி ஒரு நீள் வட்டத்திற்கு.

(iv) இயக்கு வரையை (directric) யொட்டி ஒரு நீள் வட்டத்திற்கு.

(v) a, b ஆரைகளுள்ள இரு பொதுமைய வட்டங்களுக் கிடைப்பட்ட பரப்புக்கு (1) ஒரு விட்டத்தை யொட்டி (2) தளத் திற்குச் செங்குத்தாகப் பொது மையத்தின் வழியாகவுள்ள கோட்டை யொட்டி.

5. $y^2 = 4ax$ என்ற பரவளைவை அதன் செவ்வகலம் (latus rectum) வெட்டும் பகுதிக்கு (1) அதன் உச்சியில் வரைந்த தொடு கோட்டை யொட்டி நி. நெ. தி. $\frac{3}{7} Ma^2$ என்றும், (2) அதன் அச்சையொட்டி நி. நெ. தி. $\frac{4}{5} Ma^2$ என்றும் நிறுவுக.

6. ABC முக்கோணத்திற்கு (i) BC-யை யொட்டி (ii) அதன் உச்சியில் BC-க்கு இணையான கோட்டையொட்டி (உச்சி யிலிருந்து வரைந்த செங்கோட்டின் நீளம் p எனக் கொண்டு) நி. நெ. தி. காண்க.

7. ஒரு சமபக்க முக்கோணத்திற்கு அதன் பு. க. மையத்தில் (centroid) தளத்திற்குச் செங்குத்தான அச்சையொட்டி நி. நெ. தி. காணவும்.

8. நெஞ்சுவளை $r = a\ (1 + \cos\theta)$-ன் வில்லுக்கு அதன் துருவம் (pole) வழியாகத் தளத்திற்குச் செங்குத்தான அச்சை யொட்டி நி. நெ. தி. காணவும்.

9. $x^{\frac{2}{3}} + y^{\frac{2}{3}} = a^{\frac{2}{3}}$ என்ற வளை வரைக்குள்ளடங்கிய பரப் பிற்கு ஒரு அச்சையொட்டி நி. நெ. தி. மதிப்பிடவும்.

10. $x = a\ (\theta - \sin\theta)$, $y = a\ (1 - \cos\theta)$ என்ற உருள் வளையின் நி. நெ. திறனை அதன் அடிக்கோட்டையொட்டிக் கணக்கிடுக.

11. ஒரு விட்டத்தையொட்டி a-ஆரையுள்ள உள்ளீடற்ற கோளத்தின் நி. நெ. தி. காணவும்.

12. ஒரு கன சதுரக்கட்டையின் ஓர் ஓரம் a நீளமுள்ளது. ஓர் ஓரத்தையொட்டிக் கட்டையின் நி. நெ. தி. காண்க.

13. a, b, c பக்கங்களுள்ள (prism) நேர் பட்டகத்தின் நி. நெ. தி காணவும்.

14. ஒரு நேர்வட்ட உருளையின் நி. நெ. தி. (i) அதன் அச்சையொட்டி (ii) அதன் ஒரு தோற்றுவிக்கும் கோட்டை (generating line) யொட்டி (iii) அதன் அடிவட்டத்தின் ஒரு விட்டத்தையொட்டி, அடி ஆரம் r எனவும், உயரம் h எனவும் கொண்டு நி. நெ. தி. காணவும்.

15. a ஆரையுள்ள கோளத்தின் நி. நெ. தி. அதன் ஒரு விட்டத்தையொட்டிக் கணக்கிடுக.

16. $\frac{x^2}{a^2} + \frac{y^2}{b^2} = 1$, x-அச்சையொட்டிச் சுழலும்போதுண்டாகும் உருளையின் நி. நெ. திறனைச் சுழலும் அச்சையொட்டிக் காண்க.

17. $x = a\ (\theta - \sin\theta)$, $y = a\ (1 - \cos\theta)$ என்ற உருள் வளையின் ஒரு பகுதி அடிக்கோட்டையொட்டிச் சுழலும் போதுண்டாகும் உருளையின் நி. நெ. திறனைச் சுழலும் அச்சையொட்டிக் காண்க.

18. உள்ளீடற்ற நேர்வட்டக் கூம்பின் நி. நெ. திறனை அதன் அச்சையொட்டிக் கணக்கிடுக.

19. R, r வெளி, உள் ஆரைகளுள்ள உள்ளீடற்ற நேர்வட்ட உருளையின் நி. நெ. திறனை அதன் அச்சையொட்டி $\frac{1}{2} M\ (R^2 + r^2)$ என நிறுவுக.

20. ஒரு கூம்பின் வெட்டுத்துண்டின் இரு முகங்களும் முறையே a, b ஆரைகள் கொண்டவை. அதன் நி. நெ. தி. அச்சையொட்டி $\frac{3M\ (a^5 - b^5)}{10\ (a^3 - b^3)}$ எனக்காட்டுக.

21. $y = e^{x} \cdot \cos x$ என்ற வளைவரை $(0, \pi)$ எல்லைகளில் x-அச்சையொட்டிச் சுற்றும்போதுண்டாகும் உருளையின் நி. நெ. தி சுழலும் அச்சையொட்டிக் காண்க.

14. அழுத்தமும், அழுத்த மையமும்

(Pressure & centre of pressure)

§ **53. அழுத்தம் :** ஒரு பரப்பு ஒரு திரவத்தில் மூழ்கியுள்ள போது, அதன் மேல், திரவத்தின் எடையால் (weight) அழுத்தம் ஏற்படுகிறது. அழுத்தமென்பது ஒரு சதுர அலகுள்ள பரப்பின் மேல் திரவத்தின் எடையாகும் (weight). ஒரு கன அலகு திரவத்தின் எடை w என்றும் மூழ்கிய ஆழம் h என்றும் கொண்டால் அழுத்தம் $p = wh$ என அறிவோம். திரவத்தின் அழுத்தம் எல்லா திசைகளிலும் சமமாக இயங்கும் என்ற தத்துவத்தின்படி, திரவத்தில் மூழ்கியுள்ள ஒரு பரப்பின் மேலேற்படும் மொத்த அழுத்தத்தைக் கணக்கிடுகிறோம்.



படம் 71

திரவமட்டத்திற்குச் செங்குத்தாக ஒரு பரப்பு திரவத்தில் மூழ்கியிருப்பதாகக் கொள்வோம். அப்பரப்பில் திரவ மட்டத்திலிருந்து h ஆழத்தில், l நீளமும் dh அகலமுமுள்ள நுண்பகுதியின் மேல் திரவ அழுத்தம்

$$\triangle F\ (l \cdot dh \cdot w)\ h.$$

$\therefore$ ABC பரப்பின் மேல்

மொத்த அழுத்தம் $F = \int w\,h\,l\,dh$ (ஏற்ற எல்லைக்குள்)

எ. கா.

$2a$ பக்கங்களுள்ள ஒரு சமபக்க முக்கோணத்திற்கு அதன் ஒரு பக்கம் நீர்மட்டத்திலிருக்குமாறு தளத்திற்குச் செங்குத்தாக மூழ்கியிருக்கிறது. அத்தகட்டின் ஒரு புறத்திலேற்படும் நீரின் அழுத்தத்தைக் காண்க.

சமபக்க முக்கோணத்தின் உயரம் $= \sqrt{3} \cdot a$. $2l$ நீளமுள்ள நுண் பரப்பு x ஆழத்திலுள்ளதாகக் கொள்வோம்.



படம் 72

நுண் பரப்பு $\triangle A = 2l \cdot \triangle x$

நுண் அழுத்தம்
$\triangle F = (2l\, x \triangle x)\, \omega$

$$\therefore\ F = \int_0^{\sqrt{3}a} \omega \cdot 2l\, x \cdot dx., \quad \frac{l}{a} = \frac{\sqrt{3}\,a - x}{\sqrt{3}\,a}$$

$$= \int_0^{\sqrt{3}a} \cdot 2\,\omega x \cdot a \left(1 - \frac{x}{\sqrt{3a}}\right) dx$$

$$= 2\,\omega a \int_0^{\sqrt{3a}} x \left(1 - \frac{x}{\sqrt{3}\,a}\right) dx$$

$$= 2\,a\omega \left[\frac{x^2}{2} - \frac{1}{\sqrt{3a}} \cdot \frac{x^3}{3}\right]_0^{\sqrt{3a}}$$

$$= 2\,a\omega \left[\frac{3a^2}{2} - \frac{3\sqrt{3} \cdot a^3}{3\sqrt{3}\,a}\right]$$

$$= 2\,a\omega \left[\frac{a^2}{2}\right] = \omega \cdot a^3.$$

எ. கா. 2.



படம் 73

2 அடி ஆரையுள்ள ஒரு வட்ட வடிவமான மதகின் மையம் நீர்மட்டத்திலிருந்து 6 அடி ஆழத்திலுள்ளது. மதகின் மேல் நீரின் அழுத்தத்தைக் கணக்கிடுக.

$$OC = 6$$

வட்டத்தின் சமன்பாடு

$$x^2 + (y+6)^2 = 4$$

$$\triangle F = (2x \cdot dy \cdot \omega)y$$

$$\therefore \quad F = \int_{-8}^{-4} 2xy \cdot \omega \, dy$$

$$= \int_{-8}^{-4} 2\,\omega y \sqrt{4-(y+6)^2} \cdot dy$$

$x = 2\cos\theta$; $y + 6 = 2\sin\theta$ என்ருல்

$dy = 2\cos\theta \cdot d\theta$.

$$\therefore \quad F = \int_{-\frac{\pi}{2}}^{+\frac{\pi}{2}} 2\omega\,(2\sin\theta - 6)\, 2\cos\theta \cdot 2\cos\theta \cdot d\theta$$

$$= 8\,\omega \int_{-\frac{\pi}{2}}^{+\frac{\pi}{2}} 2\sin\theta \cdot \cos^2\theta \cdot d\theta - 8\omega \int_{+\frac{\pi}{2}}^{-\frac{\pi}{2}} 6\cos^2\theta \cdot d\theta$$

$$= 16\omega \left(\frac{-\cos^3\theta}{3}\right)_{-\frac{\pi}{2}}^{\frac{\pi}{2}} - 16\omega \times 6 \int_{0}^{\frac{\pi}{2}} \cos^2\theta \cdot d\theta$$

$$= -\ 16\omega \times 6 \cdot \frac{1}{2} \cdot \frac{\pi}{2}$$

$|F| = 24\,\pi\omega$ அலகுகள்.

எ. கா. 3.

$y = x^2$ என்ற பரவளைவு வடிவத் தகடு செங்குத்தாக நீரில் அதன் உச்சி கீழிருக்குமாறு ஓர் அடி ஆழத்திற்கு மூழ்கியிருந்தால் அதன் ஒரு பக்கத்தில் நீரின் அழுத்தத்தைக் கணக்கிடுக.



படம் 74

$$\triangle F = 2x\,(1 - y)\,\omega$$

$$F = \int_0^1 2\omega\, x\,(1 - y)\, dy$$

$$= \int_0^1 2\omega \cdot \sqrt{y}\,(1 - y)\, dy$$

$$= 2\omega \int_0^1 (y^{\frac{1}{2}} - y^{\frac{3}{2}}) \cdot dy.$$

$$= 2\omega\,(\tfrac{2}{3} - \tfrac{2}{5}) = \tfrac{8}{15}\,\omega.$$

பயிற்சிகள் 41

1. 3மீ × 4மீ. அளவுகளுள்ள ஒரு மதகு நீர் மட்டத்திற்குச் செங்குத்தாக வைக்கப்பட்டிருக்கிறது. 3மீ. பக்கம் நீர் மட்டத்தை யொட்டியிருந்தால், மதகின் ஒரு பக்கத்தில் நீரின் அழுத்தத்தைக் காண்க. [விடை 48ω]

2. 5மீ. அடி ஆரமுள்ள ஒரு நேர் உருளை வடிவத்தொட்டி கிடைத்தளத்தில் வைக்கப்பட்டு அதில் பாதி அளவுக்குக் கேசொலீன் (Gasoline) திரவம் நிறைந்திருக்கிறது. கேசொ

லேனின் எடை கனமீட்டருக்கு ω கி.கி. எனில் தொட்டியின் ஒரு வட்டவடிவப் பக்கத்தின் அழுத்தத்தைக் கணக்கிடுக.

$\left(\frac{250}{3}\ \omega\ \text{கி.கி.}\right)$

3. 2மீ. ஆரமுள்ள ஓர் அரைக்கோள வடிவமுள்ள பாத்திரத்தில் நீர் நிறைந்திருக்கிறது. பாத்திரத்தின் உட்பரப்பின் மேல் நீரின் அழுத்தத்தைக் காண்க. ($8\pi\ \omega$)

§ 54. அழுத்தமையம் (Centre of pressure)

ஒரு திரவத்தில் மூழ்கிய ஒரு பரப்பின்மேல் ஒவ்வொரு புள்ளியிலும் திரவத்தின் அழுத்தம் ωh என அறிவோம். h என்பது திரவ மட்டத்திலிருந்து புள்ளியின் ஆழம், ω என்பது ஒரு கன அலகு பருமனுள்ள திரவத்தின் எடை. அப்பரப்பின் மேலுள்ள அழுத்தம் முழுவதும் அப்பரப்பிலுள்ள ஒரு புள்ளியின்மேல் இயங்குவதாகக் கொண்டால், அப்புள்ளிக்குத் திரவ அழுத்தமையம் (centre of pressure) என்று பெயர்.

$\triangle A$ பரப்பின் மேல் அழுத்தம் $= \triangle A \cdot y \cdot \omega$.

$\therefore$ A பரப்பின் மேல் அழுத்தம்

$= \int \omega \cdot y \cdot dA$

$= = \omega \int y \cdot dA$

$= \omega \cdot A \cdot \bar{y} = A(\bar{y} \cdot \omega)$

= பரப்பு × பரப்பின் பு.க. மையத்தின் மேல் அழுத்தம்

திரவ அழுத்தமையம் திரவ மட்டத்திலிருந்து z ஆழத்திலிருப்பதாகக் கொண்டு மட்டத்தை யொட்டி அழுத்தங்களின் சுழல் திறனைக் கணக்கிட்டால்,



படம் 75

$$(A \cdot \bar{y} \cdot \omega)\, z = \int \omega \cdot y \cdot dA \cdot y$$

$$= \int \omega \cdot y^2 \cdot dA$$

$$z = \frac{\int y^2 \cdot dA}{A \cdot \bar{y}} = \frac{\int y^2 \cdot dA}{\int y \cdot dA}$$

குறிப்பு: வரையறுத்த தொகை காணுங்கால் பரப்பின் நுண் பகுதிகளைத் திரவ மட்டத்திற்கு இணையாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

எ. கா. 1.



படம் 76

ஒரு முக்கோணத் தகடு அதன் ஒரு பக்கம் இருக்குமாறு செங்குத்தாகத் திரவத்தில் மூழ்கியிருக்கிறது. திரவ அழுத்த மையத்தைக் கணக்கிடுக.

BC திரவ மட்டத்திலுள்ளது, $DE = x$, $NM = y$ எனில்

$$\frac{x}{a} = \frac{x-y}{h}$$

BC-க்கு இணையான நுண்பகுதி DE,-ன் பரப்பு, $\triangle A = x \cdot dy$

$$\therefore \quad z = \frac{\int y^2 \cdot dA}{\int y \cdot dA} = \frac{\int_0^h y^2 \cdot x\, dy}{\int_0^h y \cdot x \cdot dy}$$

$$= \frac{\int_0^h y^2\, a \frac{(h-y)}{h} \cdot dy}{\int_0^h y\, a \left(\frac{h-y}{h}\right) \cdot ay} = \frac{\left(\frac{h^3}{3} - \frac{h^3}{4}\right)}{\frac{h^2}{2} - \frac{h^2}{3}}$$

$$= h \times \frac{1}{12} \times \frac{6}{1} = \frac{h}{2}$$

தவிர, அழுத்த மையம் அடிப் பக்கத்திற்கு இணையாக வரைந்த கோடுகளின் நடுப்புள்ளிகளின் நியமப்பாதை, அதாவது A முனையிலிருந்து அடிப்பக்கம் BC-க்கு வரைந்த நடுக்கோட்டிலுள்ளது என்பது தெளிவு.

ஆனால் ஆழம், $Z = \frac{h}{2}$. $\therefore$ அழுத்த மையம் இந் நடுக்கோட்டின் மையத்திலுள்ளது.

குறிப்பு : முக்கோணத்தகடு திரவ மட்டத்திற்குச் செங்குத்தாயிராவிடினும் அழுத்தமையம் மாறாதென்றறியலாம்.

எ. கா. 2.

பக்கங்கள் a, b அளவுகளுள்ள ஒரு நீண்ட சதுரத்தகடு ஒரு திரவத்தில் செங்குத்தாக மூழ்கியிருக்கிறது. பக்கம் a-திரவ மட்டத்திற்கு இணையாகவும், தகட்டின் பு. க. மையம h $\left(< \frac{b}{2}\right)$ ஆழத்திலும் இருப்பதாகக் கொண்டு அழுத்தமையத்தைக் காண்க.

$$\triangle A = a \cdot dy$$

$$OP = h + \frac{b}{2}$$

$$OS = h - \frac{b}{2}$$



படம் 77

$$Z = \frac{\int_{h-\frac{b}{2}}^{h+\frac{b}{2}} y^2 \cdot dA}{\int_{h-\frac{b}{2}}^{h+\frac{b}{2}} y\, dA}$$

$$= \frac{\int y^2 \cdot a\, dy}{\int y \cdot a\, dy} = \frac{\int y^2 \cdot dy}{\int y \cdot dy} = \frac{\left(\frac{y^3}{3}\right)_{h-\frac{b}{2}}^{h+\frac{b}{2}}}{\left(\frac{y^2}{2}\right)_{h-\frac{b}{2}}^{h+\frac{b}{2}}}$$

$$= \frac{\frac{1}{3}\left[\left(h+\frac{b}{2}\right)^3 - \left(h-\frac{b}{2}\right)^3\right]}{\frac{1}{2}\left[\left(h+\frac{b}{2}\right)^3 - \left(h-\frac{b}{2}\right)^2\right]}$$

$$= \frac{\frac{1}{3}\left[2 \cdot 3 \cdot h^2 \cdot \frac{b}{2} + 2 \cdot \frac{b^3}{8}\right]}{\frac{1}{2}\left[2 \cdot 2h \cdot \frac{b}{2}\right]} = \frac{\frac{1}{3}\left(3h^2 b + \frac{b^2}{4}\right)}{bh}$$

$$= h + \frac{b^2}{12h}$$

எ. கா. 3.

r ஆரையுள்ள ஒரு வட்டததகடு ஒரு திரவத்தில் செங்குத்தாக $h\ (> r)$ ஆழத்தில் மூழ்கி இருக்கும்போது அழுத்த மையத்தைக் கணக்கிடுக.



படம் 78

வட்டத்தின் சமன்பாடு $x^2 + (y + h)^2 = r^2$

$$\triangle A = 2 \cdot x \cdot dy$$

$$Z = \frac{\int_{-h-r}^{-h+r} y^2 \cdot dA}{\int_{-h-r}^{-h+r} y \cdot dA}$$

$$= \frac{\int_{-h-r}^{-h+r} y^2 \cdot 2x \cdot dy}{\int_{-h-r}^{-h+r} y^2 \cdot 2x \cdot dy} = \frac{\int_{-h-r}^{-h+r} y / \cdot x \cdot dy}{\int_{0}^{h} y \cdot x \cdot dy}$$

$$x = r \cos\theta$$

$$y + h = r \sin\theta \qquad dy = r \cos\theta \cdot d\theta$$

$$Z = \frac{\int_{-h-r}^{-h+r} (r \sin\theta - h)^2 \cdot r\cos\theta \cdot r\cos\theta \cdot d\theta}{\int_{-h-r}^{-h+r} (r \sin\theta - h) \cdot r\cos\theta \cdot r\cos\theta \cdot d\theta}$$

$$= \frac{\int_{-\frac{\pi}{2}}^{\frac{\pi}{2}} (r^2 \cdot \sin^2\theta - 2\sin\theta \cdot r \cdot h + h^2) \cdot \cos^2\theta \, d\theta}{\int_{-\frac{\pi}{2}}^{+\frac{\pi}{2}} (r \sin\theta - h) \cdot \cos^2\theta \cdot d\theta}$$

$$= \frac{\int_{-\frac{\pi}{2}}^{\frac{\pi}{2}} (r^2 \sin^2\theta \cdot \cos^2\theta - 2hr \cdot \sin\theta \cos^2\theta + h^2 \cos^2\theta)\, d\theta}{\int_{\frac{\pi}{2}}^{+\frac{\pi}{2}} (r\sin\theta \cdot \cos^2\theta - h \cos^2\theta) \cdot d\theta}$$

$$|Z| = \frac{r^2 \times \frac{1}{4} \cdot \frac{1}{2} \cdot \frac{\pi}{2} + h^2 \cdot \frac{1}{2} \cdot \frac{\pi}{2}}{h \cdot \frac{1}{2} \cdot \frac{\pi}{2}}$$

$$= \frac{\frac{r^2}{8} + \frac{h^2}{2}}{\frac{h}{2}} = \frac{r^2 + 4h^2}{4h}$$

பயிற்சிகள் 42

கீழே கொடுக்கப்பட்ட கணக்குகளில் அழுத்தமைய ஆழங் காண்க.

1. உச்சி, திரவமட்டத்திலும், அடிப்பக்கம் திரவமட்டத்திற்கு இணையாகவுமிருக்குமாறு ஒரு திரவத்திலாழ்ந்த ஒரு முக்கோணம்.

2. திரவமட்டத்திலிருந்து K ஆழத்தில் உச்சியிருக்குமாறும், அடிப்பக்கம் திரவமட்டத்திற்கிணையாகவும் ஒரு திரவத்தில் மூழ்கியிருக்கும் முக்கோணம்.

3. 3 அடி × 4 அடி அளவுகளுள்ள ஒரு நீள்சதுரத்தின் குறுகிய பக்கங்கள் திரவமட்டத்திற்கு இணையாகவும் இவற்றின் மேற்பக்கம் திரவமட்டத் திலிருந்து 2 அடி ஆழத்திலிருக்குமாறும், திரவமட்டத்திற்குச் செங்குத்தாக மூழ்கியுள்ளது.

4. ஓர் அரைவட்டம், அதன் எல்லை விட்டம் திரவமட்டத்திலிருக்குமாறு திரவத்திலாழ்ந்துள்ளது.

5. ஒரு நீள்வட்டம் அதன் நெட்டச்சு செங்குத்தான நிலையிலும், ஓர் உச்சி திரவமட்டத்திலுமிருக்க மூழ்கியுள்ளது.

6. ஒரு சரிவகம் (Trapezium) அதன் இணையான பக்கங்களி லொன்று திரவமட்டத்திலுள்ளவாறு ஆழ்ந்துள்ளது.

7. செவ்வகலம் (latus rectum) திரவமட்டத்திலிருக்குமாறும், அதன்கீழுள்ள பரப்பு திரவத்திலாழ்ந்திருக்குமாறுமுள்ள ஒரு பரவளைவு.

8. அடிப்பக்கம் திரவமட்டத்திலிருக்குமாறு மூழ்கியுள்ள ஓர் உருள்வளை (cycloid).

§ 55. விசையும் வேலையும் (Force & Work)

ஒரு மாருத விசை F இயங்குவதால் அதன் இயங்குபுள்ளி விசையின் திசையில் s தூரம் செல்லுமாயின், செய்யப்பட்டவேலை $F \times s$ என்கிறோம். F ஆனது s-ன் ஒரு சார்பாயின் Δs தூரத் திற்கு இயங்கும்போது விசைசெய்யும் வேலை $\Delta w = F(s) \times \Delta s$ எனவாகும். s_1-தூரத்திலிருந்து s_2-வரை இயங்கும்போது செய்யும் வேலையின் கூடுதல் $\sum_{s_1}^{s_2} F(s) \Delta s$ என்று தொகைப்படுத்தி,

$$W = \int_{s_1}^{s_2} F(s)\, ds \text{ எனலாம்.}$$

குறிப்பு : தொகை காணுமுன் F-ஐ s-ன் சார்பாக்கவும்.

எ. கா. 1.

a நீளமுள்ள ஒரு மீள்சக்தியுடைய (elastic) கயிறு b நீளத்திலிருந்து c-யாக நீளும்போது செய்யப்படும் வேலையைக் கணக்கிடுக ($c > b > a$).

கயிற்றின் நீளம் x-ஆக உள்ளபோது அதன் இழுவிசை T எனவும் அதன் மீள்சக்திக் கெழு λ எனவுமிருந்தால் ஹூக்சு (Hookes law) விதிப்படி

$$T = \frac{\lambda\,(x - a)}{a}$$

b நீளத்திலிருந்து c-யாக நீளும்போது செய்யப்படும் வேலை

$$= \int_b^c T \cdot dx = \int_b^c \frac{\lambda\,(x - a)}{a} \cdot dx$$

$$= \frac{\lambda}{2a}\Big[(x - a)^2\Big]_b^c$$

$$= \frac{\lambda}{2a}\left[(c - a)^2 - (b - a)^2\right]$$

$$= \frac{\lambda}{2}\,(c - a + b - a)\,(c - a - b + a)$$

$$= \frac{\lambda}{2a}\,(c - b)\,(b + c - 2a)$$

$$= (c - b)\,\frac{\lambda}{2}\left[\frac{b - a}{a} + \frac{c - a}{a}\right]$$

= நீட்சி × (முதல், இறுதி இழு விசைகளின் சராசரி)

பயிற்சிகள் 43

1. ஒரு மீள்சக்தியுடைய கயிறு (Elastic string) தொடக்கத்தில் 6" நீளமும் 5 பவுண்ட் எடையுள்ள பளுவைத்தாங்கும் போது 20" நீளமும் உள்ளது. நீளுவதால் செய்யப்படும் வேலையை (work) மதிப்பிடுக.

2. ஒரு சுருள்கம்பி 1 அங்குலம் நீளம், 1 பவு, எடையின் ஈர்ப்புச் சக்தி வேண்டுமெனில், கம்பி இன்னும் 3 அங்குலம் நீளும் போது செய்யப்படும் வேலையைக் கணக்கிடுக.

3. இயல்பான நீளம் 10" உள்ள ஒரு மீள்சக்தியுடைய கயிறு (elastic string) 15" என நீள 5 பவு. எடையின் ஈர்ப்புச்சக்தி வேண்டியிருந்தால், 12" லிருந்து 15" ஆக நீளும்பொழுது எவ்வளவு வேலை செய்யப்படுகின்றது ?

4. தொடக்கப்பருமம் 200 கன அடியும் சதுர அங்குலத்திற்கு 15 பவு. எடை அழுத்தமுமுள்ள காற்றைச் சதுர அங்குலத்திற்கு

80 பவு. எடையிருக்குமாறு நெருக்கும்போது செய்யப்படும் வேலையின் மதிப்பை $PV = C$ (மாறிலி) என்ற விதியால் கணக்கிடுக.

எ. கா. 2.

p அழுத்தமும் v பருமமும் உள்ள ஒருவாயு ஓர் உருளைவடிவக் குழாயிலிலுள்ளது. மாருத வெப்பத்தில் அவ்வாயு x_0 நீளத்திலிருந்து x_1 நீளமாக விரிந்தால் நிகழ்ந்த வேலை $pv \log\left(\frac{x_1}{x_0}\right)$ எனக் காட்டுக.

வெப்பநிலை மாருதபோது,

p அழுத்தத்தில் வாயுவின் பருமம் v என்போம்-பருமம் $\triangle v$ அதிகரித்தபோது செய்யப்பட்டவேலை, $\triangle w = p \cdot \triangle v$

$\therefore$ பருமம் v_0 விலிழிந்து v_1 ஆனபோது செய்யப்பட்டவேலை

$$w = \sum_{v_0}^{v_1} p \cdot dv = \int_{v_0}^{v_1} \cdot p \cdot dv$$

ஆனால் பாயில் (Boyle) விதிப்படி

$$pv = p_0 v_0 \qquad \therefore \quad p = \frac{p_0 v_0}{v}$$

$$\therefore \quad w = \int_{v_0}^{v_1} \frac{p_0 v_0}{v} \cdot dv = p_0 v_0 (\log v)_{v_0}^{v_1}$$

$$= p_0 v_0 \log\left(\frac{v_1}{v_0}\right)$$

குழாயின் குறுக்கு வெட்டின் பரப்பு மாறிலி, A என்றும், பருமம் v_0, v_1 எனும்போது குழாயில் வாயுவின் நீளம் முறையே x_0, x_1 என்றும் கொண்டால்,

$$v_0 = A \cdot x_0, \; v_1 = A \cdot x_1$$

$$\therefore \quad w = p_0 v_0 \log\left(\frac{A x_1}{A x_0}\right)$$

$$= p_0 v_0 \log\left(\frac{x_1}{x_0}\right)$$

§ 56. தொடர் வட்டி விதி (Compound Interest)

ஆண்டுக்கு $r\%$ வீதம் மாதா மாதாம் அசலுடன் வட்டி சேர்ந்தால் ஆண்டு முடிவில் P என்ற அசல் $P\left(1+\frac{r}{12}\times\frac{1}{100}\right)^{12}$ என்று தொடர் வட்டித் தொகையாகும்.

கூடிய தொகை $A = P\left(1+\frac{r}{12}\times\frac{1}{100}\right)^{12}$

அது போலஆண்டில் n தவணைகளில் அசலுடன் வட்டி சேர்க்கப் படுமாஞல்,ஒரு ஆண்டிலாகும் தொடர் வட்டித் தொகை

$$A = P\left(1+\frac{r}{100\,n}\right)^{n}.$$

$\therefore$ t ஆண்டுகளில் ஆகும் தொகை

$$A = P\left(1+\frac{r}{100\,n}\right)^{nt}$$

$$= P\left\{\left(1+\frac{r}{100\,n}\right)^{\frac{100\,n}{r}}\right\}^{\frac{tr}{100}}.$$

தொடர்ச்சியாக ஒவ்வொரு கணமும் வட்டி அசலுடன் சேர்ந்தால்,

$$A = P \underset{n\to\infty}{\text{எல்லை}} \left\{\left(1+\frac{r}{100\,n}\right)^{\frac{100\,n}{r}}\right\}^{\frac{tr}{100}}$$

$$= P\left\{\underset{\frac{100\,n}{r}\to\infty}{\text{எல்லை}}\left(1+\frac{r}{100\,n}\right)^{\frac{100n}{r}}\right\}^{\frac{tr}{100}}$$

$$= P\cdot e^{\frac{tr}{10\,n}}$$

$$\therefore\ \frac{dA}{dt} = \frac{r}{100}\cdot P\cdot e^{\frac{tr}{100}} = \frac{r}{100}\cdot A.$$

அதாவது, $\frac{dA}{dt} = KA$, $K =$ ஒரு மாறிலி $\frac{r}{100}$

அல்லது, $\frac{dy}{dt} = Ky.$ என்பது தொடர் வட்டி விதியாகும்.

குறிப்பு : இத்தொடர் வட்டி விதியையொட்டி ஏற்படும் விஞவுகளில் முக்கியமானவை :—

1. நியூடனின் வெப்பம் குறையும் விதி

$\frac{d\theta}{dt} = -K\theta$. இங்கு θ என்பது பொருளின் வெப்பநிலைக் கும் அதன் சுற்றுப்புற வெப்பநிலைக்குமுள்ள வேறுபாடாகும்.

2. கடல் மட்ட உயரத்தையொட்டி ஓர் இடத்தின் காற்றழுத்த வேறுபாடு

$$\frac{dp}{dh} = -Kp.$$

(h உயரத்தில் அழுத்தம் p ஆனல், $p = f(h)$. இங்கு K ஒரு மாறிலி).

பயிற்சிகள் 44

1. ரூ. 500-க்கு 6% வட்டி வீதம் 10 ஆண்டுகளில் (a) மாத மொரு முறை வட்டி அசலுடன் கூட்டப் பட்டால் (b) ஒவ்வொரு கணமும் (instant) 'கூட்டப்பட்டால் தொடர் வட்டித் தொகை காண்க.

2. ஆண்டு தோறும் ஒரு தொகை r% வீதம் வட்டி கூடி இரட்டிக்கும் காலம் $\left(\frac{100}{r} + \frac{1}{2}\right) \log^2$ ஆண்டுகள் அண்ணள வாக வென்று நிறுவுக.

3. காற்று வெளி மண்டலத்தின் (atmosphere) அடர்த்தி கடல் மட்டத்திலிருந்து ஏதாவதொரு உயரத்தில். D என்றும், காற்றின் அழுத்தம் p என்றும், அடர்த்தி அழுத்தத்திற்கு நேர் விகிதத்திலுள்ளதொன்றும் கொண்டு, z உயரத்தில் அழுத்தம் $p = p_0 \cdot e^{-\left(\frac{g D_0 z}{p_0}\right)}$ என்று காட்டுக. P_0, D_0 முறையே கடல் மட்ட அழுத்தமும் அடர்த்தியுமென்க.

4. 2 செ. மீ. ஆரையுள்ள, உலோகத்தாலான ஒரு கோளத்தின் பருமம் வெப்பத்தால் விரிவடைகின்றது. உலோ கத்தின் நீள விரிவுக்கெழு (Co-efficient of linear expansion) 0·00002 எனக்கொண்டு வெப்பநிலை $0°C$-யிலிருந்து $20°C$-க்கு உயரும்போது கோளப் பரும விரிவைக் காண்க.

5. 20 ஆண்டுகள் வளரும் ஒரு மரம் ஓர் ஆண்டின் உயரத்தைப்போல் 1·02 மடங்கு அடுத்த ஆண்டில் வளரும். 3 ஆண்டுகளின் முடிவில் உயரம் 3 அடி என்ருல் 15 ஆண்டு களின் முடிவில் மரத்தின் உயரமென்ன ?

15. தகாத் தொகையீடுகள் ஒருங்குதல் (Convergence of Improper Integrals)

பாகம் II பகுதி IX-ல் தகாத் தொகையீடுகள் எப்போது முடிவுள்ள மதிப்புகளைப் பெறும் அல்லது மதிப்பற்று விடுமெனக் கண்டோம். இங்குச் சற்று விரிவாக அவற்றைக் காண்போம்.

§ 57. தொகையிடும் வெளி, முடிவிலியாதல் (Infinite region of Integration)

(*a*) $x > a$ என்ற எல்லா எண்களுக்கும் $f(x)$ மிகை மதிப்புள்ள, தொடர்ச்சியான சார்பு என்ற கொள்கையில் மேல் எல்லை (வரம்பு) முடிவிலியை நாடும்போது

$$\int_a^{\infty} f(x) \cdot dx\text{-ஐ}$$

$$\underset{\zeta \to \infty}{\text{எல்லை}} \int_a^{\zeta} f(x)\, dx \text{ எனக்குறிக்கலாம்.}$$

$F'(x) = f(x)$ எனில்

$$\underset{\zeta \to \infty}{\text{எல்லை}} = \int_a^{\zeta} f(x) \cdot dx = F(\zeta) - F(a) = \phi(\zeta)$$

என்போம்.

$\phi(\zeta)$, ζ-ன் மிகை மதிப்புள்ள, தொடர்ச்சியான ஒரு சார்பு. வடிவ கணித விளக்கப்படி இது $(a, \S)$ எல்லைகளுக்குள்ளடங்கிய ஒரு பரப்பைக் குறிக்கிறது. ஆதலால் $\zeta > a$ என மதிப்புகள் ஏற்கும்போது $\phi(\zeta)$ ஓர் ஏறும் சார்பாகும்.

எனவே $\lim_{\zeta \to \infty} \phi(\zeta) \leq k$ என முடிவுள்ள மதிப்பை நெருங்கினால்,

$\int_a^{\infty} f(x) \cdot dx$ என்ற தகாத் தொகை, ஒருங்கி K என்ற மதிப்புள்ள வரையறைத் தொகையாகும். அஃதின்றி, $\lim_{\zeta \to \infty} \phi\ \infty$ என்றால் தகாத் தொகை மதிப்பற்றுவிடும்.

(*b*) கீழ் எல்லை (வரம்பு) முடிவிலியை நாடும்போது

$\zeta' > 0$ எனில், $\int_{-\infty}^{a} f(x) \cdot dx$-ஐ

$\lim_{\zeta' \to \infty} \int_{-\zeta'}^{a} f(x)\, dx = \phi(\zeta')$ எனலாம்.

$\phi(\zeta) \leq k$ எனில் தகாத்தொகை $\int_{-\infty}^{a} f(x)\, dx$ ஒருங்கி k என்ற மதிப்பைப் பெறும்.

$\phi(\zeta) \to \infty$ எனில் மதிப்பில்லை.

(*c*) இரு எல்லைகளும் (வரம்புகளும்) முடிவிலியை நாடினால் தகாத்தொகை $\int_{-\infty}^{+\infty} f(x)\, dx$ ஐ

$$= \int_{-\infty}^{a} f(x) \cdot dx + \int_{a}^{+\infty} f(x)\, dx$$

$$= \lim_{\zeta' \to \infty} \int_{-\zeta'}^{a} f(x)\, dx + \lim_{\zeta \to \infty} \int_{a}^{\zeta} f(x)\, dx$$

எனலாம்.

இங்கு ζ, ζ' ஒன்றுக்கொன்று தொடர்பற்றவை எனக்கொண்டு வலது புறமுள்ள தொகையீடுகளின் முடிவுள்ள மதிப்புகள் முறையே l', l என்றால் தகாத்தொகையீடு ஒருங்கும்.

$$\int_{-\infty}^{+\infty} f(x) \cdot dx = l' + l$$ என்பது தொகையீட்டின் மதிப்பு.

முடிவிலி வரம்புகள் தனித்திராமல் தொடர்ந்திருந்தால்

$$\int_{-\infty}^{+\infty} f(x)\, dx = \underset{\zeta \to 0}{\text{எல்லை}} \int_{-\zeta}^{+\zeta} f(x) \cdot dx$$

$= \phi(\zeta) \leq k$ என்று முடிவுள்ள எல்லையை நெருங்கினால், தகாத்தொகை ஒருங்கி தொகையீட்டின் மதிப்பு k எனவாகும். இதுவே, முதன் மதிப்பு (Principal Value of the Integral) எனப்படும். இதனை $K \int_{-\infty}^{\infty} f(x) \cdot dx$ என எழுதுகிறோம்.

குறிப்பு : (1) வரம்புகள் முடிவிலியாயுள்ள ஒரு தகாத்தொகை ஒருங்குவதற்குத் (converge) தேவையான கட்டுப்பாடு, $\zeta > a$ என்ற எல்லா அளவுகளிலும் $\zeta \to \infty$ என ஆகும்போது $(a, \zeta,)$ வரம்புகளில் வரும் தொகையீடான $\phi(\S) \leq k$, என்ற ஒரு முடிவுள்ள மேல் எல்லை மதிப்புள்ளது என்பதாகும்.

2. $\phi(\zeta)$ ஒரு முடிவிலியானால், **தகாத்தொகை** மதிப்பற்றதாகும் (Diverges).

3. $\phi(\zeta)$ **ஓர் எல்லையை அடையாமலும், முடிவிலியாகாமலுமிருந்தால், தகாத்தொகை அலைகின்றது** (oscillates) **என்கிறோம்.**

எடுத்துக்காட்டுகள் :

1. $$\int_{1}^{\infty} \frac{1}{x^2}\, dx$$

$(1, \zeta)$ வரம்புகளில் $\frac{1}{x^2}$ மிகை மதிப்புள்ளதாகவும் தொடர்ச்சி யாகவும் உள்ளது.

$$\phi(\zeta) = \left(-\frac{1}{x}\right)_1^{\zeta} = -\frac{1}{\zeta} + 1$$

$$\underset{\zeta \to \infty}{\text{எல்லை}} \ \phi(\zeta) = 1$$

$\therefore$ தகாத்தொகை $\int_1^{\infty} \frac{1}{x^2}\, dx$ ஒருங்குகிறது.

அதன் மதிப்பு $= 1$

2. $\int_{-\infty}^{2} e^{x} \cdot dx.$

இங்கு $\phi(\zeta') = [e^x]_{-\zeta'}^{2}$

$$= e^2 - e^{-\zeta'} = e^2 - \frac{1}{e^{\zeta'}}$$

$\therefore$ $\underset{\zeta' \to \infty}{\text{எல்லை}} \ \phi(\zeta') = e^2$

$\therefore$ தகாத்தொகை ஒருங்கி e^2 என்ற மதிப்பைப் பெறுகிறது.

3. $\int_1^{\infty} \sin x \cdot dx$

இங்கு $\phi(\zeta) = \underset{\zeta \to \infty}{\text{எல்லை}} \int_1^{\zeta} \sin x \cdot dx = \underset{\zeta \to \infty}{\text{எல்லை}} (-\cos x)_1^{\zeta}$

$$= \underset{\zeta \to \infty}{\text{எல்லை}} (-\cos \zeta + \cos 1^c)$$

$\therefore$ $|\phi(\zeta)| = \underset{\zeta \to \infty}{\text{எல்லை}} |-\cos \zeta + \cos 1^c|$

$$\leq |\cos \zeta| + |\cos 1^c|$$

$\zeta \to \infty$ என $\cos \zeta$ ன் மதிப்பைச் சொல்ல வியலாது. $-1, +1$ எல்லைகளுக்கிடையில் எதுவாயினுமிருக்கலாம்.

$\therefore$ தகாத் தொகை மதிப்பற்றது எனலாம்; அல்லது $(-1 + \cos 1^c)$, $(1 + \cos 1^c)$ என்ற எல்லைகளுக்கிடையில் அலைகிறது எனலாம்.

4. $\int_1^\infty \frac{dx}{x}$.

இங்கு $\phi(\zeta) = (\log x)_1^\zeta = \log \zeta$

எல்லை $\phi(\zeta) = \infty$
$\zeta \to \infty$

$\therefore$ தகாத் தொகை மதிப்பற்றது.

5. $\int_{-\infty}^{+\infty} \frac{dx}{1+x^2} = I$ என்க.

$$\text{இங்கு } I = \underset{\zeta' \to \infty}{\text{எல்லை}} \int_{-\zeta'}^{0} \frac{dx}{1+x^2} + \underset{\zeta' \to \infty}{\text{எல்லை}} \int_0^\zeta \frac{dx}{1+x^2}$$

$$= \text{எல்லை} \left[\tan^{-1} x\right]_{-\zeta}^{0} + \text{எல்லை} \left[\tan^{-1} x\right]_0^\zeta$$

$$= 0 - \tan^{-1}(-\infty) + \tan^{-1}(\infty) - 0$$

$$= -\left(-\frac{\pi}{2}\right) + \frac{\pi}{2} = \pi$$

$$\therefore \int_{-\infty}^{+\infty} \frac{dx}{1+x^2} = \pi \quad \therefore \text{ இத்தொகை ஒருங்குகிறது.}$$

§ 58. தொகுபடும் சார்புகள் முடிவிலியாதல் (Infinite Integrand)

(i) $f(b) \to \infty$

$(a, b-h)$ இடைவெளியில் $f(x)$ தொடர்ச்சியுள்ளது என்று கொள்வோம்.

$x \to b$ எனும் போது $h \to 0, f'(x) \to \infty$ இப்போது

தகாத்தொகை $\int_a^b f(x)\,dx = \underset{h \to 0}{\text{எல்லை}} \int_a^{b-h} f(x)\,dx.$

$$\int_a^b f(x) \cdot dx = \underset{h \to 0}{\text{எல்லை}} [F(b-h) - F(a)]$$

$$= \underset{h \to 0}{\text{எல்லை}} \phi(h) \text{ என்போம்.}$$

$h \to 0$ எனும்போது $\phi(h)$ ஒரு முடிவுள்ள எல்லை, K-யை நாடினால், தகாத்தொகை b-யில் ஒருங்குகிறது என்கிறோம்.

$f(x)$ ஆனது (a, b) இடைவெளியில் மிகை மதிப்புள்ளதெனில், h குறையும்போது, $\phi(h)$ ஓர் ஏறும் சார்பாகும்.

$\therefore \int_a^b f(x) \cdot dx$ ஒருங்குவதற்குத் **தேவையான கட்டுப்பாடு, h-ன் எல்லா மிகைமதிப்புகளுக்கும் $\phi(h)$ சார்புக்கு ஒரு மேல் எல்லை k $(\phi(h) < k)$, என இருக்கவேண்டுமென்பதே.**

(ii) $f(a) \to \infty$

இங்கு, $(a+h, b)$ இடைவெளியில் $f(x)$ தொடர்ச்சியுள்ளது என்று கொள்வோம்.

$x \to a$ எனும்போது, $h \to 0$ $f(x) \to \infty$

தகாத்தொகை $\int_a^b f(x)\,dx = \underset{h \to 0}{\text{எல்லை}} \int_{a+h}^b f(x)\,dx$

$$= \underset{h \to 0}{\text{எல்லை}} [F(b) - F(a+h)]$$

$$= \underset{h \to 0}{\text{எல்லை}} \phi(h)$$

மேற்சொன்னவாறே, h-ன் எல்லா மிகை மதிப்புகளுக்கும் $\phi(h) < k$ என ஒரு மேல் எல்லை k இருக்குமாயின், தகாத்தொகை ஒருங்குவதாகும்.

(iii) $a < c < b$ எனும்போது, $x = c$ என்ற புள்ளியில் $f(x)$ தொடர்ச்சியற்றுப்போனால் அதாவது $f(c) \to \infty$ ஆனால்,

$$\int_a^b f(x) \cdot dx = \int_a^c f(x) \cdot dx + \int_c^b f(x) \cdot dx$$ எனப்பிரித்து,

(i), (ii)-ல் கண்ட கட்டுப்பாடுகளைக் கொண்டு தகாத்தொகை ஒருங்குவதைக் கண்டறியலாம்.

எ. கா. 1.

$$\int \frac{1}{\sqrt{1 - x^2}} dx$$

$[0, 1 - h]$ இடைவெளியில் $\frac{1}{\sqrt{1 - x^2}}$ மிகையாகவும்,

தொடர்ச்சியாகவும் உளது. $f(1) = \infty$

இங்கு $\phi(h) = [\sin^{-1} x]_0^{1-h}$

$= \sin^{-1}(1 - h) - \sin^{-1}(0)$

$\therefore$ எல்லை $_{h \to 0} \phi(h) = \sin^{-1} 1 = \frac{\pi}{2}$

$\therefore$ $\int_0^1 \frac{1}{\sqrt{1 - x^2}} \cdot dx$, $\frac{\pi}{2}$ என்ற மதிப்புக்கு ஒருங்குகிறது.

எ. கா. 2.

$y = \frac{1}{\sqrt{x}}$, y அச்சு, $x = 1$ என்ற குத்தாயம் இவற்றிற்கு இடைப்பட்ட பரப்பு முடிவுள்ளதா என்று பார்க்கவும்.

பரப்பு $= \int_0^1 y \cdot dx$

$= \int_0^1 \frac{1}{\sqrt{x}} \cdot dx$

$x = 0$ எனும் புள்ளியில் $\frac{1}{\sqrt{x}}$ முடிவிலியாகிறது.

இங்கு $\int_0^1 \frac{1}{\sqrt{x}} \cdot dx = \underset{h \to 0}{\text{எல்லை}} \int_h^1 \frac{1}{\sqrt{x}} \cdot dx$

$$\phi(h) = \left(2\sqrt{x}\right)_h^1 = 2 - 2\sqrt{h}$$

$\therefore \quad \underset{h \to 0}{\text{எல்லை}} \; \phi(h) = 2 =$ பரப்பு

$\therefore$ வேண்டிய பரப்பு முடிவுள்ளது.

எ. கா. 3.

$$\int_0^3 \frac{dx}{(x-2)^2}$$

$x = 2$ என, $f(x)$ தொடர்ச்சியற்று முடிவிலியாகிறது.

$\therefore \int_0^3 \frac{dx}{(x-2)^2} = \int_0^2 \frac{dx}{(x-2)^2} + \int_2^3 \frac{dx}{(x-2)^2}$ எனப்பிரிப்போம்.

$$\int_0^2 \frac{dx}{(x-2)^2} = \underset{h \to 0}{\text{எல்லை}} \int_0^{2-h} \frac{dx}{(x-2)^2}$$

$$\therefore \quad \Gamma (n) \Gamma (1-n) = \frac{\pi}{\sin n\pi} \quad \because \quad \Gamma (1) = 1$$

குறிப்பு : இங்கு $n = \frac{1}{2}$ என்றிட

$$[\Gamma (\tfrac{1}{2})]^2 = \frac{\pi}{\sin \frac{\pi}{2}} = \pi$$

$$\therefore \quad [\Gamma (\tfrac{1}{2})] = \pi \text{ (முன்பு கண்டது)}$$

10. $\Gamma\left(\frac{1}{n}\right) \cdot \Gamma\left(\frac{2}{n}\right) \cdot \Gamma\left(\frac{3}{n}\right) \cdots\cdots \Gamma\left(\frac{n-1}{n}\right)$

$$= \frac{(2\pi)^{\frac{n-1}{2}}}{n^{\frac{1}{2}}}$$ என நிறுவுக.

இடது பக்கப் பெருக்கத்தை P என்போம்.

$$P^2 = \Gamma \left(\frac{1}{n}\right) \cdot \Gamma \left(\frac{2}{n}\right) \Gamma \left(\frac{3}{n}\right) \cdots\cdots \Gamma\left(\frac{n-1}{n}\right)$$

$$\times \Gamma\left(\frac{n-1}{n}\right) \times \Gamma\left(\frac{n-2}{n}\right) \cdot \Gamma\left(\frac{n-3}{n}\right)$$

$$\cdots\cdots \Gamma\left(\frac{3}{n}\right) \cdot \Gamma\left(\frac{2}{n}\right) \cdot \Gamma\left(\frac{1}{n}\right)$$

$$= \left[\Gamma\left(\frac{1}{3}\right) \cdot \Gamma\left(1-\frac{1}{n}\right)\right]\left[\Gamma\left(\frac{2}{n}\right) \Gamma\left(1-\frac{2}{n}\right)\cdots\right]$$

$$\cdots\cdots \left[\Gamma\left(1-\frac{1}{n}\right) \Gamma\left(\frac{1}{n}\right)\right]$$

ஆனல் $\Gamma(n)\,\Gamma(1-n) = \frac{\pi}{\sin n\pi}$ எனக் கண்டோம்.

n-ஐ $\frac{1}{n}$ ஆக மாற்ற,

$\Gamma\left(\frac{1}{n}\right)\Gamma\left(1-\frac{1}{n}\right) = \frac{\pi}{\sin\frac{\pi}{n}}$ ஆகும்.

$$\therefore \quad P^2 = \frac{\pi}{\sin\frac{\pi}{n}} \cdot \frac{\pi}{\sin\frac{2\pi}{n}} \cdot \frac{\pi}{\sin\frac{3\pi}{n}} \cdots\cdots \frac{\pi}{\sin\left(1-\frac{1}{n}\right)\pi}$$

$$= \frac{\pi^{n-1}}{\sin\frac{\pi}{n} \cdot \sin\frac{2\pi}{n} \cdots\cdots \sin\left(1-\frac{1}{n}\right)\pi}$$

கோண கணிதப்படி,

$x^{2n} - 1 = 0$ என்ருல்

$x^{2n} = 1 = \cos 2p\pi \pm i \sin 2p\pi$

$$\therefore \quad x = \cos\frac{2p\pi}{2n} \pm i \sin\frac{2p\pi}{2n}$$

$$= \cos\frac{p\pi}{n} \pm i \sin\frac{p\pi}{n}$$

$$\therefore \quad \left(x - \cos p\frac{\pi}{n}\right)^2 = -\sin^2 p\frac{\pi}{n}$$

$$x^2 - 2x\cos p\frac{\pi}{n} + 1 = 0$$

$$\therefore \quad \frac{x^{2n}-1}{x^2-1} = \prod_{p=1}^{n-1} \left(x^2 - 2x \cdot \cos p\frac{\pi}{n} + 1 \right)$$

வகுக்க, $x^{2n-2} + x^{2n-4} + \ldots\ldots + x^2 + 1 =$

$$\prod_{p-1}^{n-1} \times \left(x^2 - 2x \cdot \cos p\frac{\pi}{n} + 1 \right)$$

இங்கு $x = 1$ என்றிட

$$n = \left(2\sin\frac{\pi}{2n} \right)^2 \cdot \left(2\sin\frac{2\pi}{2n} \right)^2 \cdot \ldots\ldots$$

$$\times \left[2\sin\frac{(n-1)\pi}{2n} \right]^2 \ldots\ldots I$$

$x = -1$ என்றிட

$$n = \left(2\cos\frac{\pi}{2n} \right)^2 \cdot \left(2\cos\frac{2\pi}{2} \right)^2 \ldots\ldots$$

$$\left(2\cos\frac{n-1}{2} \cdot \pi \right)^2 \ldots\ldots II$$

$\therefore$ $I \times II$ பெருக்கற்பலனுக்கு வர்க்கமூலம் காண

$$n = 2^{n-1} \cdot \sin\frac{\pi}{n} \cdot \sin\frac{2\pi}{2n} \ldots\ldots \sin\frac{n-1}{n} \cdot \pi$$

$$\therefore \quad P^2 = \frac{\pi^{n-1}}{\frac{n-1}{\frac{n}{2}}} = \frac{2^{n-1} \cdot \pi^{n-1}}{n} \text{ எனவாகும்.}$$

$$P = \frac{2^{\frac{n-1}{2}} \cdot \pi^{\frac{n-1}{2}}}{\sqrt{n}}$$

$$\therefore \quad \Gamma\left(\frac{1}{n}\right) \cdot \Gamma\left(\frac{2}{n}\right) \cdot \Gamma\left(\frac{3}{n}\right) \ldots\ldots \Gamma\left(\frac{n-1}{n}\right)$$

$$= \frac{(2\pi)^{\frac{n-1}{2}}}{\sqrt{n}}$$

பயிற்சிகள் 48

நிறுவுக :

1. $$\int_0^1 x^m (1-x^n)^p \cdot dx = \frac{\Gamma(p+1)\cdot\Gamma\left(\frac{m+1}{n}\right)}{n\,\Gamma\left(p+1+\frac{m+1}{n}\right)}$$

2. $$\int_0^1 \frac{x^{m-1}(1-x)^{n-1}}{(a+x)^{m+n}}\,dx = \frac{\Gamma(m)\,\Gamma(n)}{a^n(1+a)^m\cdot(m+n)}$$

3. $$\int_0^1 \frac{x^2\cdot dx}{(1-x^4)^{\frac{1}{2}}} \times \int_0^1 \frac{dx}{(1+x^4)^{\frac{1}{2}}} = \frac{\pi}{4\sqrt{2}}$$

4. $$\int_0^\infty \cos\left(bz^{\frac{1}{n}}\right)\cdot dz = \frac{\Gamma(n+1)\cos\frac{n\pi}{2}}{b^n}$$

5. $$\int_0^1 \frac{dx}{\sqrt{1-x^n}} = \frac{\sqrt{\pi}}{n}\cdot\frac{\Gamma\left(\frac{1}{n}\right)}{\Gamma\left(\frac{1}{2}+\frac{1}{n}\right)}$$

6. $$\int_0^\infty \frac{\sin bx}{x}\cdot dx = \frac{\pi}{2}$$

70. செய்முறை எடுத்துக்காட்டுகள்.

எ. கா. 1.

$$\int_0^{\frac{\pi}{2}} \frac{dx}{\sqrt{\sin x}} \times \int_0^{\frac{\pi}{2}} \sqrt{\sin x}\cdot dx = \pi$$ என நிறுவுக.

$$I_1 = \int_0^{\frac{\pi}{2}} \frac{dx}{\sqrt{\sin x}} = \int_0^{\frac{\pi}{2}} \sin^{-\frac{1}{2}} x \cdot dx$$

$$= \int_0^{\frac{\pi}{2}} \sin^{2 \cdot \frac{1}{4} - 1} x \cdot dx, \quad p = \tfrac{1}{4}$$

$$= \sqrt{\frac{\pi}{2}} \cdot \frac{\Gamma(\frac{1}{4})}{\Gamma(\frac{3}{4})}$$

$$I_2 = \int_0^{\frac{\pi}{2}} \sin^{2 \cdot \frac{3}{4} - 1} x \cdot dx \; ; \; p = \tfrac{3}{4}$$

$$= \frac{\sqrt{\pi}}{2} \cdot \frac{\Gamma(\frac{3}{4})}{\Gamma(\frac{5}{4})}$$

$$\therefore \quad I_1 \times I_2 = \frac{\sqrt{\pi}}{2} \cdot \frac{\Gamma(\frac{1}{4})}{\Gamma(\frac{3}{4})} \times \frac{\sqrt{\pi}}{2} \cdot \frac{\Gamma(\frac{3}{4})}{\Gamma(\frac{5}{4})}$$

$$= \frac{\pi}{4} \cdot \frac{\Gamma(\frac{1}{4})}{\Gamma(\frac{5}{4})} = \frac{\pi}{4} \times \frac{\Gamma(\frac{1}{4})}{\frac{1}{4}\Gamma(\frac{1}{4})}$$

$$= \pi$$

எ. கா. 2.

$$\int_0^1 \frac{dx}{\sqrt{1 - x^n}} = \frac{\sqrt{\pi}}{n} \cdot \frac{\Gamma\left(\frac{1}{n}\right)}{\Gamma\left(\frac{1}{2} + \frac{1}{n}\right)}$$ எனக் காட்டுக.

$x^n = u$ என்க. எல்லைகள் 0, 1 எனவாகும்.

$n \cdot x^{n-1} \cdot dx = du \qquad 1 \; x = u^{\frac{1}{n}}$

$$\therefore \int_0^1 \frac{dx}{\sqrt{1-x^n}} = \int_0^1 \frac{du}{nu^{\frac{n-1}{n}}(1-u)^{\frac{1}{2}}}$$

$$= \frac{1}{n}\int_0^1 u^{\frac{1}{n}-1} \cdot 1\,(1-u)^{\frac{1}{2}-1} \cdot du$$

$$= \frac{1}{n}\,\frac{\Gamma\left(\frac{1}{n}\right)\Gamma\left(\frac{1}{2}\right)}{\Gamma\left(\frac{1}{n}+\frac{1}{2}\right)} = \frac{\sqrt{\pi}}{n}\cdot\frac{\Gamma\left(\frac{1}{n}\right)}{\Gamma\left(\frac{1}{n}+\frac{1}{2}\right)}$$

எ. கா. 3.

$\beta(x, x) = 2^{1-2x}\,\beta(x, \frac{1}{2})$ என நிறுவுக.

$$\beta(x, x) = 2\int_0^{\frac{\pi}{2}} \sin^{2x-1}\theta \cdot \cos^{2x-1}\theta \cdot d\theta$$

$$= 2\int_0^{\frac{\pi}{2}} \frac{(2\sin\theta\cdot\cos\theta)^{2x-1}}{2^{(2x-1)}} \cdot d\theta$$

$$= \frac{2}{2^{2x-1}}\int_0^{\frac{\pi}{2}} (\sin 2\theta)^{2x-1}\, d\left(\frac{2\theta}{2}\right)$$

$$= \frac{1}{2^{2x-1}}\int_0^{\pi} \sin^{2x-1}\phi\, d\phi\ ;\quad \phi = 2\theta$$

$$= \frac{2}{2^{2x-1}} \int_0^{\frac{\pi}{2}} \sin^{2x-1}\phi \cdot d\phi$$

$$= \frac{2}{2^{2x-1}} \cdot \int_0^{\frac{\pi}{2}} \cdot \sin^{2x-1} \phi \cdot \cos^{2\cdot\frac{1}{2}-1} \cdot \phi \cdot d\phi$$

$$= \frac{2}{2^{2x-1}} \times \frac{1}{2} \cdot \beta \left(x, \frac{1}{2} \right)$$

$$= 2^{1-2x} \beta (x, \tfrac{1}{2})$$

எ. கா. 4.

$$\int_0 \frac{x^2 (1-x)^8}{(1+x)^9} dx = \frac{1}{768} \text{ என நிறுவுக.}$$

$x = \frac{1-y}{1+y}$ எனப்பிரதியிட

$$1 + x = 1 + \frac{1-y}{1+y} = \frac{2}{1+y}$$

$$1 - x = 1 - \frac{1-y}{1+y} = \frac{2y}{1+y}$$

$$dx = \frac{(1+y)(-1) - (1-y) \cdot 1}{(1+y)^2} \cdot dy$$

$$= \frac{-1 - 1y - 1 + y}{(1+y)^2} \cdot dy = \frac{-2\,dy}{(1+y)^2}$$

$$\therefore \int_0^1 \frac{(1-y)^2}{(1+y)^2} \cdot \frac{2^3 \cdot y^8}{(1+y)^8} \cdot \frac{(1+y)^9}{2^9} \cdot \frac{(-2)}{(1+y)^2} \cdot dy$$

$$= \frac{1}{2^5} \int^1 (1-y)^2 \cdot y^8 (1+y)^2 \cdot dy$$

$$= \frac{1}{25}\int_0^1 y^2 \cdot (1-y^2)^2 \cdot \frac{d(y^2)}{2}$$

$$= \frac{1}{64}\int_0^1 u\,(1-u)^2 \cdot dx;\ u = y^2$$

$$= \frac{1}{64}\int_0^1 u^{2-1}(1-u)^{3-1} \cdot dx = \frac{1}{64}\,\beta\,(2, 3)$$

$$= \frac{1}{64}\,\frac{\Gamma(2)\,\Gamma(3)}{\Gamma(5)} = \frac{1}{64} \cdot \frac{1!\,2!}{4!}$$

$$= \frac{1}{64} \cdot \frac{1 \cdot 2}{4 \cdot 3 \cdot 2} = \frac{1}{768}$$

எ. கா. 5.

$$\int_0^1 \frac{dx}{(1-x^n)^{\frac{1}{2}}} = \frac{1}{n} \cdot \frac{\pi}{\sin\frac{\pi}{n}}$$ எனக்காட்டுக.

$x^n = \sin^2\theta$ · எனில் $= (\sin\theta)^{\frac{2}{n}}$

$n \cdot x^{n-1} \cdot dx = 2\sin\theta \cdot \cos\theta \cdot d\theta.$

$$\therefore \int_0^1 \frac{dx}{(1-x^n)^{\frac{1}{n}}} = \int_0^{\frac{\pi}{2}} \frac{2\sin\theta\cos\theta \cdot d\theta}{n(\sin\theta)^{\frac{2n-2}{n}} \cdot \cos^{\frac{2}{n}}\theta}$$

$$= \frac{2}{n}\int_0^{\frac{\pi}{2}} \sin^{\left(\frac{2}{n}-1\right)}\theta \cdot \cos^{\left(1-\frac{2}{n}\right)}\theta \cdot d\theta$$

$$= \frac{2}{n}\int_0^{\frac{\pi}{2}} \sin^{\left(2\cdot\frac{1}{n}-1\right)}\theta \cdot \cos^{2\left(1-\frac{1}{n}\right)-1}\theta\cdot d\theta$$

$$= \frac{1}{n}\,\beta\left(\frac{1}{n},\ 1-\frac{1}{n}\right)$$

$$= \frac{1}{n}\ \frac{\Gamma\left(\frac{1}{n}\right)\cdot\Gamma\left(1-\frac{1}{n}\right)}{\Gamma(1)}$$

$$= \frac{1}{n}\cdot\frac{\pi}{\sin\frac{\pi}{n}}$$

எ. கா. 6.

மதிப்பு காண்க :

$$\int_0^\infty \frac{n^4(1+x^5)}{(1+x)^{15}}\ dx$$

$$\int_0^\infty \frac{x^4\,(1+x^5)}{(1+x)^{15}}\ dx = \int_0^\infty \frac{x^4\cdot dx}{(1+x)^{15}} + \int_0^\infty \frac{x^9\cdot dx}{(1+x)^{15}}$$

$$= I_1 + I_2$$

$$I_1 = \int_0^\infty \frac{x^{5-1}\ dx}{(1+x)^{5+10}} = \frac{\Gamma(10)\cdot\Gamma(5)}{\Gamma(15)} = \beta(5,10)$$

$$I_2 = \int_0^\infty \frac{x^{10-1}\ dx}{(1+x)^{10+5}} = \frac{\Gamma(10)\,\Gamma(5)}{\Gamma(15)} = \beta(5,10)$$

$$\therefore \int_0^\infty \frac{x^4\,(1+x^5)}{(1+x)^{15}}\ dx = 2\ \frac{\Gamma(10)\cdot\Gamma(5)}{\Gamma(15)}$$

$$= 2 \times \frac{9!\,4!}{14!} = 2 \times \frac{4 \times 3 \times 2 \cdot 1}{14 \cdot 13 \cdot 12 \cdot 11 \cdot 10}$$

$$= \tfrac{1}{5005}.$$

எ. கா. 7.

$$\int_0^1 \sqrt{\frac{1+x^2}{1-x^2}} \cdot x^2 \cdot dx$$

$$= \frac{1}{12 \cdot \sqrt{2\pi}} \left[\{\Gamma(\tfrac{1}{4})\}^2 + 12\,\{\Gamma(\tfrac{3}{4})\}^2 \right]$$

எனக்காட்டுக.

$x^2 = \cos\theta$ · எனக் கொள்க. எல்லைகள் $\frac{\pi}{2}$, 0

$$2x \cdot dx = -\sin\theta \cdot d\theta \quad \therefore \quad dx = -\frac{\sin\theta \cdot d\theta}{2\sqrt{\cos\theta}}$$

$$\therefore \int_0^1 \sqrt{\frac{1+x^2}{1-x^2}} \cdot x^2 \cdot dx = +\int_0^{\frac{\pi}{2}} \sqrt{\frac{1+\cos\theta}{1-\cos\theta}} \times \frac{\cos\theta \cdot \sin\theta \cdot d\theta}{2\sqrt{\cos\theta}}$$

$$= \int_0^{\frac{\pi}{2}} \frac{\cos\frac{\theta}{2}}{\sin\frac{\theta}{2}} \sqrt{\cos\theta}\;\frac{2}{2} \cdot \sin\frac{\theta}{2} \cdot \cos\frac{\theta}{2}\, \phi\, d\theta$$

$$= \int_0^{\frac{\pi}{2}} \cos^2\frac{\theta}{2}\,\sqrt{\cos\theta} \cdot d\theta$$

$$= \tfrac{1}{2}\int_0^{\frac{\pi}{2}} (1+\cos\theta)\sqrt{\cos\theta} \cdot d\theta$$

$$= \frac{1}{2}\int_0^{\frac{\pi}{2}} \sqrt{\cos\theta}\cdot d\theta + \frac{1}{2}\int_0^{\frac{\pi}{2}} \cos^{\frac{3}{2}}\theta\cdot d\theta$$

$$= \frac{1}{2}\int_0^{\frac{\pi}{2}} \cos^{\frac{3}{2}-1}\theta\cdot d\theta + \frac{1}{2}\int_0^{\frac{\pi}{2}} \cos^{\frac{5}{2}-1}\theta\cdot d\theta$$

$$= \frac{1}{2}\cdot\frac{\sqrt{\pi}}{2}\cdot\frac{\Gamma(\frac{3}{4})}{\Gamma(\frac{5}{4})} + \frac{1}{2}\,\frac{\sqrt{\pi}}{2}\cdot\frac{\Gamma(\frac{5}{4})}{\Gamma(\frac{7}{4})}$$

$$= \frac{\sqrt{\pi}}{4}\left[\frac{\Gamma(\frac{3}{4})}{\frac{1}{4}\Gamma(\frac{1}{4})} + \frac{\frac{1}{4}\Gamma(\frac{1}{4})}{\frac{3}{4}\Gamma(\frac{3}{4})}\right]$$

$$= \sqrt{\pi}\,\frac{[3\,\{\Gamma(\frac{3}{4})\}^2 + \frac{1}{4}\{\Gamma(\frac{1}{4})\}^2]}{3\Gamma(\frac{1}{4})\times\Gamma(\frac{3}{4})}$$

$$= \frac{\sqrt{\pi}}{12}\,\frac{[\{\Gamma(\frac{1}{4})\}^2 + 12\,\{\Gamma(\frac{3}{4})\}^2]}{\Gamma(\frac{1}{4})\,\Gamma(1-\frac{1}{4})}$$

$$= \frac{\sqrt{\pi}}{12}\cdot\frac{\sin\frac{\pi}{4}}{\pi}[\{\Gamma(\tfrac{1}{4})\}^2 + 12\,\{\Gamma(\tfrac{3}{4})\}^2]$$

$$= \frac{1}{12\sqrt{2\pi}}[\{\Gamma(\tfrac{1}{4})\}^2 + 12\,\{\Gamma(\tfrac{3}{4})\}^2]$$

எ. கா. 8

$$\int_0^1 \frac{x^2\,dx}{(1-x^4)^{\frac{1}{2}}} \times \int_0^1 \frac{dx}{(1+x^4)^{\frac{1}{2}}} = \frac{\pi}{4\sqrt{2}}$$ எனக் காட்டுக.

$$I_1 = \int_0^1 \frac{x^2\,dx}{(1-x^4)^{\frac{1}{2}}}$$

$x^4 = u$ எனில், $4x^3\cdot dx = du$, $\quad dx = \dfrac{du}{4\cdot u^{\frac{3}{4}}}$

$$\therefore\ I_1 = \int_0^1 \frac{u^{\frac{1}{2}}}{(1-u)^{\frac{1}{2}}} \cdot \frac{du}{4 \cdot u^{\frac{3}{4}}} = \frac{1}{4}\int_0^1 u^{-\frac{1}{4}}(1-u)^{-\frac{1}{2}}\, du$$

$$= \tfrac{1}{4}\int_0^1 u^{\frac{3}{4}-1}(1-u)^{\frac{1}{2}-1} \cdot du = \tfrac{1}{4}\,\beta\left(\tfrac{3}{4}, \tfrac{1}{2}\right)$$

$$\therefore\ I_1 = \tfrac{1}{4}\,\frac{\Gamma(\frac{3}{4})\,\Gamma(\frac{1}{2})}{\Gamma(\frac{5}{4})}$$

$$I_2 = \int_0^1 \frac{dx}{(1+x^4)^{\frac{1}{2}}} = \int_0^1 \frac{du}{4u^{\frac{3}{4}}(1+u)^{\frac{1}{2}}}$$

$$= \tfrac{1}{4}\int_0^1 \frac{u^{-\frac{3}{4}} \cdot du}{(1+u)^{\frac{1}{2}}}$$

இங்கு $m-1 = -\frac{3}{4} \quad \therefore \quad m = 1-\frac{3}{4} = \frac{1}{4}$
$m+n-1 = \frac{1}{2} \quad \therefore \quad n = \frac{1}{2}+\frac{3}{4} = \frac{5}{4}$

$$\therefore\ I_2 = \frac{1}{4}\,\beta\left(\tfrac{1}{4}, \tfrac{5}{4}\right) = \frac{1}{4}\,\frac{\Gamma(\frac{1}{4})\,\Gamma(\frac{5}{4})}{\Gamma(\frac{3}{2})}$$

$$\therefore\ I_1 \times I_2 = \frac{1}{4}\,\frac{\Gamma(\frac{3}{4})\,\Gamma(\frac{1}{2})}{\Gamma(\frac{5}{4})} \times \frac{1}{4}\,\frac{\Gamma(\frac{1}{4})\,\Gamma(\frac{5}{4})}{\Gamma(\frac{3}{2})}$$

$$= \frac{1}{16}\,\frac{\Gamma(\frac{3}{4}) \cdot \Gamma(\frac{1}{2}) \cdot \Gamma(\frac{1}{4})}{\Gamma(\frac{3}{2})}$$

ஆனால்,

$$\Gamma(\tfrac{1}{2}) = \sqrt{\pi} \quad \ldots\ \ldots \text{(i)}$$

$\Gamma(m)\,\Gamma(m+\frac{1}{2}) = \dfrac{\sqrt{\pi}}{2^{2m-1}}\,\Gamma(2m)$ என்பதில்

$m = 1$ என்றிட

$$\Gamma(1)\,\Gamma(\tfrac{3}{2}) = \frac{\sqrt{\pi}}{2}\,\Gamma(2)$$

$$i.e.\ \Gamma\left(\tfrac{3}{2}\right) = \frac{\sqrt{\pi}}{2} \quad \because \quad \Gamma(1) = \Gamma(2) = 1$$

$$\therefore I_1 \times I_2 = \frac{1}{16} \cdot \frac{\Gamma\left(\frac{3}{4}\right) \cdot \Gamma\left(\frac{1}{4}\right) \sqrt{\pi}}{\frac{\sqrt{\pi}}{2}} = \frac{1}{8}\Gamma\left(\tfrac{3}{4}\right) \cdot \Gamma\left(\tfrac{1}{4}\right)$$

$$= \frac{1}{8}\Gamma\left(\tfrac{1}{4}\right)\Gamma\left(1 - \tfrac{1}{4}\right)$$

$$= \frac{1}{8} \cdot \frac{\pi}{\sin\frac{\pi}{4}} = \frac{1}{8} \cdot \frac{\pi}{\frac{1}{\sqrt{2}}} = \frac{\pi\sqrt{2}}{8} = \frac{\pi}{4\sqrt{2}}.$$

மாற்று முறை.

$$I_1 = \int_0^1 \frac{x^2 \cdot dx}{(1 - x^4)^2}$$

இங்கு $x^2 = \sin\theta$ என்றிட எல்லைகள் $0, \frac{\pi}{2}$

$$2x \cdot dx = \cos\theta \cdot d\theta, \quad x = \sqrt{\sin\theta}.$$

$$I_1 = \int_0^{\frac{\pi}{2}} \frac{\sin\theta}{\cos\theta} \cdot \frac{\cos\theta \cdot d\theta}{2\sqrt{\sin\theta}}$$

$$= \frac{1}{2}\int_0^{\frac{\pi}{2}} \sin^{\frac{1}{2}}\theta\, d\theta = \frac{1}{2}\int_0^{\frac{\pi}{2}} \sin^{\frac{3}{2}-1}\theta \cdot d\theta, \quad p = \frac{3}{2}$$

ஆனல்,

$$\int_0^{\frac{\pi}{2}} \sin^{p-1}\theta \cdot d\theta = \frac{\sqrt{\pi}}{2} \cdot \frac{\Gamma\left(\frac{p}{2}\right)}{\Gamma\left(\frac{p+1}{2}\right)}$$

$$\therefore \quad I_1 = \frac{1}{2}\frac{\sqrt{\pi}}{2}\cdot\frac{\Gamma(\frac{3}{4})}{\Gamma(\frac{5}{4})}$$

$$I_2 = \int_0^1 \frac{dx}{(1+x^4)^{\frac{1}{4}}}$$

இங்கு $x^2 = \tan\theta$ என்க, எல்லைகள் $\left(0, \frac{\pi}{4}\right)$

$$2x\cdot dx = \sec^2\theta\cdot d\theta, \quad x = \sqrt{\tan\theta}.$$

$$I_2 = \int_0^{\frac{\pi}{4}} \frac{\sec^2\theta\cdot d\theta}{\sec\theta\cdot 2\sqrt{\tan\theta}} = \frac{1}{2}\int_0^{\frac{\pi}{4}} \frac{\sqrt{\cos\theta}\cdot d\theta}{\cos\theta\cdot\sqrt{\sin\theta}}.$$

$$= \frac{1}{\sqrt{2}}\cdot\int_0^{\frac{\pi}{4}} \frac{d\theta}{\sqrt{2\cdot\sin\theta\cos\theta}}$$

$$= \frac{1}{\sqrt{2}}\cdot\int_0^{\frac{\pi}{4}} (\sin 2\theta)^{-\frac{1}{2}}\cdot d\left(\frac{2\theta}{2}\right)$$

$$= \frac{1}{2\sqrt{2}}\int_0^{\frac{\pi}{2}} \sin^{-\frac{1}{2}}\phi\cdot d\phi; \quad \phi = 2\theta.$$

$$= \frac{1}{2\sqrt{2}}\int_0^{\frac{\pi}{2}} \sin^{(\frac{1}{2}-1)}\phi\cdot d\phi; \; p = \frac{1}{2}$$

$$= \frac{1}{2\sqrt{2}}\cdot\frac{\sqrt{\pi}}{2}\cdot\frac{\Gamma(\frac{1}{4})}{\Gamma(\frac{3}{4})} = \frac{\sqrt{\pi}}{4\sqrt{2}}\cdot\frac{\Gamma(\frac{1}{4})}{\Gamma(\frac{3}{4})}$$

$$\therefore \quad I_1 \times I_2 = \frac{\sqrt{\pi}}{4} \cdot \frac{\Gamma(\frac{3}{4})}{\Gamma(\frac{5}{4})} \times \frac{\sqrt{\pi}}{4\sqrt{2}} \cdot \frac{\Gamma(\frac{1}{4})}{\Gamma(\frac{3}{4})}$$

$$= \frac{\pi}{16\sqrt{2}} \cdot \frac{\Gamma(\frac{1}{4})}{\Gamma(\frac{5}{4})} = \frac{\pi}{16\sqrt{2}} \frac{\Gamma(\frac{1}{4})}{\frac{1}{4}\Gamma(\frac{1}{4})}$$

$$= \frac{\pi}{4\sqrt{2}}$$

பயிற்சிகள் 49

நிறுவுக.

1. $$\int_0^1 \frac{dx}{(1-x^6)^{\frac{1}{6}}} = \frac{\pi}{3}$$

2. $$\int_0^1 \sqrt{1-x^4} \cdot dx = \frac{1}{12}\sqrt{\frac{2}{\pi}}\left[\Gamma\left(\frac{1}{2}\right)\right]^2$$

3. $$\int_0^1 \frac{dx}{\sqrt{1-x^4}} = \frac{[\Gamma(\frac{1}{4})]^2}{4\sqrt{2\pi}}$$

4. $$\int_0^{\frac{\pi}{2}} \frac{(\sin^{2m-1}\theta \cdot \cos^{2n-1}\theta)d\theta}{(a\sin^2\theta + b\cos^2\theta)} = \frac{\Gamma(m)\,\Gamma(n)}{2a^m \cdot b^n \cdot \Gamma(m+n)}$$

மதிப்பிடுக.

5. $\Gamma(\frac{1}{7}) \cdot \Gamma(\frac{2}{7})\,\Gamma(\frac{3}{7})\,\Gamma(\frac{4}{7}) \cdot \Gamma(\frac{5}{7})\,\Gamma(\frac{6}{7})$

6. $$\int_0^\infty \frac{x^8(1-x^6)}{(1+x)^{24}}\,dx$$

7. $$\int_0^1 x^p(1-x^q)^n \cdot dx$$

நிறுவுக.

8. $$\int_0^1 \frac{dx}{\left(1+x^{\frac{1}{n}}\right)^{2n}} = \frac{\Gamma(n+1)\,\Gamma(n+1)}{\Gamma(2n+1)}$$

9. $$\int_0^1 \frac{dx}{\sqrt{1-x^n}} = \frac{\sqrt{\pi}}{n} \cdot \frac{\Gamma\left(\frac{1}{n}\right)}{\Gamma\left(\frac{1}{2}+\frac{1}{n}\right)}$$

$$= \frac{2^{\frac{2-n}{n}}\left[\Gamma\left(\frac{1}{n}\right)\right]^2}{n\,\Gamma\left(\frac{2}{n}\right)}$$

10. (i) $\beta(m, m)\,\beta(m+\frac{1}{2}, m+\frac{1}{2})$
$= \pi m^{-1} \cdot 2^{1-4m}$

(ii) $\beta(n, n) = 2^{1-2n}\,\beta(n, \frac{1}{2})$

(iii) $\Gamma(\frac{1}{4}) \cdot \Gamma(\frac{3}{4}) = \sqrt{2}\,\pi$

11. (a) $$\int_0^\infty \sqrt{y} \cdot e^{-y^2} \cdot dy \times \int_0^\infty \frac{e^{-y^2}}{\sqrt{y}} \cdot dy$$

$$= \frac{\pi}{2\sqrt{2}}$$

(b) $$\int_0^\infty x \cdot e^{-x^8} \cdot dx \times \int_0^\infty x^2 \cdot e^{-x^4}\, dx$$

$$= \frac{\pi}{16\sqrt{2}}$$

12. $$\left\{\int_0^{\frac{\pi}{2}} \sin^p x \cdot dx\right\}\left\{\int_0^{\frac{\pi}{2}} \sin^{p+1} x \cdot dx\right\}$$

$$= \frac{\pi}{2(p+1)}$$ எனக் காட்டுக.

17. பன் மாறித் தொகையீடுகள் (Multiple Integrals)

§ 71. பன்முறைத் தொகையீடு (Repeated Integration)

x-ஐச் சார்ந்து $f(x)$-ன் வரையறுக்கப்படாத தொகையீட்டை, ஒரு மாறிலியைச் சேர்த்து, $F(x) + C_1$ என்கிறோம்.

$$\int f(x) \cdot dx = F(x) + C_1 \qquad \ldots(1)$$

இங்கு $F(x)$, x-ன் சார்பாதலால், அதற்கும் தொகையீடு காணலாம். அப்போது பிறிதொரு மாறிலியும் சேரும்.

$$\int \left[F(x) + C_1 \right] dx = G(x) + C_1 x + C_2.$$

இவ்விருமுறைத் தொகையீட்டை

$$\int \left[\int f(x)\, dx \right] dx = \int \int f(x) \cdot dx \cdot dx$$

$$\int \int f(x) \cdot dx^2 \ \ldots (2)$$

என எழுதலாம். இதுபோலவே, மும்முறைத் தொகையீட்டை,

$$\int \{ \int [\int f(x)\, dx]\, dx \}\, dx = \int\int\int f(x) \cdot dx \cdot dx \cdot dx.$$

$$= \int\int\int f(x)\, dx^3 \text{ எனவும்} \qquad \ldots (3)$$

n-முறைத் தொகையீட்டை,

$$\int\int\int \ldots\ldots\ldots \int f(x)\, dx^n \text{ எனவும் எழுதலாம்.} \qquad \ldots (4)$$

(2), (3), (4) இவற்றைப் பன்முறைத் தொகையீடுகள் (Repeated integrals) என்கிறோம்.

வரையறைத் தொகையீடு என்பது ஒரு தொடரின் கூட்டுத் தொகையின் எல்லை என்ற பொருளில், பன்முறைத் தொகையீடு (Repeated Integral) பன்மாறித் தொகையீடு (Multiple Integral) என்றும் வழங்கப்படுகிறது. இருமுறை தொகையிடுவதை இரு மாறித் தொகையீடு (Double Integral) என்றும், மும்முறை தொகை யிடுவதை மும்மாறித் தொகையீடு (Triple Integral) என்றும் கூறுகிறோம்.

எ. கா. 1.

$\int\int \cos 3x \cdot dx \cdot dx$-ன் மதிப்பைக் காண்க.

$$\int\int \cos 3x \cdot dx \cdot dx = \int \left[\int \cos 3x \cdot dx \right] dx.$$

$$= \int \left(\frac{\sin 3x}{3} + C_1 \right) dx$$

$$= -\tfrac{1}{9} \cos 3x + C_1 x + C_2$$

எ. கா. 2.

$\int\int\int (x^2 + e^{-2x}) \cdot dx^3$-ன் மதிப்பென்ன ?

$$\int\int\int (x^2 + e^{-2x})\, dx^3 = \int\int \left[\frac{x^3}{3} - \frac{e^{-2x}}{2} + C_1 \right] dx^2$$

$$= \int \left[\frac{x^4}{12} + \frac{e^{-2x}}{4} + C_1 x + C_2 \right] dx$$

$$= \frac{x^5}{60} - \frac{e^{-2x}}{8} + C_1 \frac{x^2}{2} + C_2 x + C_3.$$

§ 72. வரையறுத்த பன்மாறித் தொகையீடுகள் (Definite Multiple Integrals)

தொகுபடும் சார்பு ஒரு மாறி கொண்டது.

$$\int_c^d \int_a^b f(x) \cdot dx^2.$$

இங்கு a, b, c, d மாறிலிகள்.

தொகையிடும் முறை: உள்ளிருந்து வெளியே முறையாகத் தொகையிடவேண்டும். (a, b) எல்லைகளில் $f(x)$-சார்பின் x-ஐ யொட்டிய வரையறுத்த தொகையீட்டை முதலில் கண்டு, பிறகு இம்மாறிலிக்கு x-ஐ யொட்டி (c, d) எல்லைகளில் வரையறுத்த தொகை காணவேண்டும்.

எ. கா.

மதிப்பிடுக.

$$\int_1^2 \int_0^{\frac{\pi}{2}} (x - \sin x)\, dx^2$$

$$\int_1^2 \int_0^{\frac{\pi}{2}} (x - \sin x) \cdot dx^2$$

$$= \int_1^2 \left(\frac{x^2}{2} + \cos x \right)_0^{\frac{\pi}{2}} \cdot dx$$

$$= \int_1^2 \left(\frac{\pi^2}{8} - 1 \right) dx$$

$$= \left(\frac{\pi^2}{8} - 1 \right) \int_1^2 dx = \left(\frac{\pi}{8} - 1 \right) \left(x \right)_2^1$$

$$= \frac{\pi^2}{8} - 1$$

குறிப்பு, இங்கு $\int_1^2 \int_0^{\frac{\pi}{2}} (x - \sin x)\, dx^2$, ஐ

$\int_1^2 \left[\int_0^{\frac{\pi}{2}} (t - \sin t) \cdot dt \right] dw$ என்று கொண்டு முறையாகத்

தொகையிடினும் ஒரே மதிப்பு $\frac{\pi^2}{8} - 1$ வருவதைக் காணலாம். எனவே மாறிகளை மாற்றுவதால் தொகையின் மதிப்பு மாருது.

$$\therefore \int_1^2 \int_0^{\frac{\pi}{2}} (x - \sin x)\, dx^2$$

$$= \int_1^2 \int_0^{\frac{\pi}{2}} (x - \sin x)\, dx \cdot dy$$

$$= \int_1^2 \int_0^{\frac{\pi}{2}} (y - \sin y)\, dy \cdot dx$$

§ 73. ஒன்றுக்கொன்று சார்பில்லாத (Independent) மாறிகள் (x, y) கொண்ட வரையறுத்த இருமாறித் தொகையீடு (Double Integral)

$$\int_a^b \int_{u_1}^{u_2} f(x, y)\, dy \cdot dx, \text{ அல்லது}$$

$$\int_a^b dx \int_{u_1}^{u_2} f(x, y) \cdot dy$$

இங்கு a, b மாறிலிகள்; u_1, u_2 மாறிலிகள் அல்லது x-ன் சார்புகள்.

தொகையிடும் முறை: முதலில் x-ஐ ஒரு மாறிலியாகக் கருதி $\int_{u_1}^{u_2} f(x, y)\, dy$ என்ற வரையறைத் தொகையை u_1, u_2 எல்லைக்குள் காணவேண்டும். இத்தொகை ஒரு x-ன் சார்பாக இருக்கும். இச்சார்பு $F(x)$ எனில், அடுத்து, $\int_a^b F(x)\, dx$ என்ற வரையறைத் தொகையை மதிப்பிட வேண்டும்.

அதுபோலவே, c, d மாறிலிகளாகவும், v_1, v_2 y-ன் சார்புகளாகவும் உள்ளதானுல்,

$$\int_c^d \int_{v_1}^{v_2} f(x, y)\, dx \cdot dy$$ அல்லது

$$\int_c^d dy \int_{v_1}^{v_2} f(x, y)\, dx$$ என எழுதி, y-ஐ ஒரு

மாறிலியாகக் கருதி x-ஐயொட்டி உள்தொகையீட்டை v_1, v_2 எல்லைக்குள் காணவேண்டும். வந்த மதிப்பு y-ன் சார்பாக இருக்கும். இதை c, d எல்லைக்குள் y-ஐயொட்டித் தொகையிட வேண்டும்.

அதாவது, $$\int_{v_1}^{v_2} f(x, y)\, dx = G(y)$$ என்றால்

$$\int_c^d \int_{v_1}^{v_2} f(x, y)\, dx \cdot dy = \int_c^d G(y)\, dy.$$

குறிப்பு : (1) எல்லைகளெல்லாம் மாறிலிகளானல் வெளியி லிருந்து உள்ளே முறையாகத் தொகையிட்டாலும் மதிப்பு மாருது.

எ. கா. 1.

$$\int_0^b \int_0^a x^2 \cdot y \cdot dx \cdot dy$$

$$I = \int_0^b \frac{a^3 \cdot y}{3} \cdot dy = \left[\frac{a^3}{3} \cdot \frac{y^2}{2}\right]_0^b$$

$$= \frac{a^3 \cdot b^2}{6}$$

அல்லது $$I = \int_0^a x^2 \cdot \frac{b^2}{2} \cdot dx = \frac{a^3 b^2}{6}$$

குறிப்பு: (2) உள் தொகையீட்டின் எல்லைகள் மாறிகளானால் தொகையீட்டு முறையை வெளியிலிருந்து உள்ளாக மாற்றக் கூடாது.

எ. கா. 1.

$$\int_0^1 \int_0^y (x + y^2)\, dx \cdot xy$$

$$= \int_0^1 [\int_0^y (x + y^2)dx]\, dy$$

$$= \int_0^1 \left(\frac{x^2}{2} + y^2 \cdot x\right)_{x=0}^{x=y} dy$$

$$= \int_0^1 \left(\frac{y^2}{2} + y^3\right)dx = \left[\frac{y^3}{6} + \frac{y^4}{4}\right]_0^1$$

$$= \frac{1}{6} + \frac{1}{4} = \frac{5}{12}.$$

எ. கா. 2

$$\int_0^2 \int_0^{x^2} xy \cdot dy \cdot dx$$

$$= \int_0^2 [\int_0^{x^2} xy \cdot dy \cdot]dx$$

$$= \int_0^2 \left(\frac{x \cdot y^2}{2}\right)_{y=0}^{y=x^2} \cdot dx = \int_0^2 \left(\frac{x \cdot x^4}{2}\right)dx$$

$$= \frac{1}{2}\int_0^2 x^5 \cdot dx = \frac{2^6}{12} = \frac{16}{3}$$

எ. கா. 3.

$$\int_0^{\frac{\pi}{6}} \int_0^{a\sin\theta} \frac{r \cdot dr}{\sqrt{a^2 - r^2}} \cdot d\theta$$

$$= \int_0^{\frac{\pi}{6}} \left[\int_0^{a\sin\theta} \frac{r\ dr}{\sqrt{a^2 - r^2}} \right] d\theta = \int_0^{\frac{\pi}{6}} \left[-\sqrt{a^2 - r^2} \right]_0^{a\sin\theta} d\theta$$

$$= -\int_0^{\frac{\pi}{6}} (a\ \cos\theta - a)\ d\theta$$

$$= -\quad a\ (\sin\ \theta)_0^{\frac{\pi}{6}} + a\ (\theta)_0^{\frac{\pi}{6}}$$

$$= a\left[\frac{\pi}{6} - \frac{1}{2}\right] = \frac{a}{6}\ (\pi - 3)$$

எ. கா. 4.

$$\int_0^{\frac{\pi}{2}} \int_0^{\frac{\pi}{2}} (a\cos 2\theta + b\sin 2\theta)\ d\theta \cdot d\phi$$

$$= \int_0^{\frac{\pi}{2}} \left[\int_0^{\frac{\pi}{2}} a\cos 2\theta + b\ \sin 2\theta \Big|\ d\theta \right] d\phi$$

$$= \int_0^{\frac{\pi}{2}} \left[\frac{a}{2}\ \sin 2\theta - \frac{b}{2}\cos 2\theta \right]_0^{\frac{\pi}{2}} d\phi$$

$$= \int_0^{\frac{\pi}{2}} \left[\frac{a}{2}(0-0) - \frac{b}{2}(-1-1)\right] d\phi$$

$$= \int_0^{\frac{\pi}{2}} b \cdot d\phi = b \cdot (\phi)_0^{\frac{\pi}{2}} = b\,\frac{\pi}{2}.$$

எ. கா. 5.

$$\int_0^{\frac{\pi}{3}} \int_0^{\tan x} \left(1 + \frac{1}{1+y^2}\right) dy \cdot dx$$

$$I = \int_0^{\frac{\pi}{3}} \left[\int_0^{\tan x} \left(1 + \frac{1}{1+y^2}\right) dy \right] dx$$

$$I = \int_0^{\frac{\pi}{3}} (y + \tan^{-1}y)\Big|_{y=0}^{y=\tan x} dx$$

$$= \int_0^{\frac{\pi}{3}} (\tan x + x)\, dx = \left[\log \sec x + \frac{x^2}{2}\right]_0^{\frac{\pi}{3}}$$

$$= \log 2 + \frac{\pi^2}{18}$$

எ. கா. 6

$$\int_0^{\frac{\pi}{6}} \int_{\cos 2\theta}^{1} \frac{dr\, d\theta}{\sqrt{2+2r}}$$

$$I = \int_{0}^{\frac{\pi}{6}} \left[\int_{\cos 2\theta}^{1} \frac{dr}{\sqrt{2}\sqrt{1+r}} \right] d\theta$$

$$= \int_{0}^{\frac{\pi}{6}} \left[\frac{1}{\sqrt{2}} \times 2 \left(+ \sqrt{1+r} \right)_{r=\cos 2\theta}^{r=1} \right] d\theta$$

$$= \sqrt{2} \int_{0}^{\frac{\pi}{6}} \left(\sqrt{2} - \sqrt{1+\cos 2\theta} \right) d\theta$$

$$= \sqrt{2} \int_{0}^{\frac{\pi}{6}} \left(\sqrt{2} - \sqrt{2} \cos\theta \right) d\theta$$

$$= 2\left(\frac{\pi}{6} - \frac{1}{2} \right) = \frac{\pi}{3} - 1$$

பயிற்சிகள் 50

மதிப்பு காண்க :

1. $\int_{0}^{3} \int_{1}^{2} xy\,(x + y) \cdot dx \cdot dy$

2. $\int_{0}^{a} \int_{0}^{b} (x^2 + y^2)\, dx \,.\, dy$

3. $\int_{0}^{\frac{\pi}{2}} \int_{0}^{a\cos\theta} r^4 \cdot dr \cdot d\theta$

4. $\int_0^{\frac{\pi}{2}} \int_0^{\frac{\pi}{2}} \sin(x+y)\ dx \cdot dy$

5. $\int_0^a \int_0^b \frac{xy \cdot dx \cdot dy}{\sqrt{1-x^2-y^2}}$

6. $\int_1^2 \int_0^x \frac{dx \cdot dy}{(x^2+y^2)}$ 7. $\int_2^a \int_2^b \frac{dx \cdot dy}{xy}$

8. $\int_0^a \int_0^{\sqrt{a^2-x^2}} (x+y)\ dx \cdot dy$

9. $\int_0^a \int_0^{\sqrt{a^2-x^2}} \cdot \frac{dx \cdot dy}{\sqrt{a^2-x^2}}$

10. $\int_{-\frac{\pi}{2}}^{+\frac{\pi}{2}} \int_0^{2\cos\theta} \cdot r^2 \cdot dr \cdot d\theta$

11. $\int_0^1 \int_y^{2y} e \cdot {}^{x-y}\ dx\ dy$

12. $\int_0^2 \int_1^{e^x} \frac{x}{y} \cdot dy \cdot dx$

13. $\int_0^{\frac{\pi}{2}} \int_0^{a \sin 2\theta} r^3 \cdot \sin\theta \cdot \cos\theta \cdot dr \cdot d\theta$

14. $\displaystyle\int_0^{\frac{\pi}{2}}\int_0^{\infty} \frac{r\,dr\,d\theta}{(r^2+a^2)^2}$

§ 74. இரு மாறித் தொகையீடு வடிவ கணித விளக்கம்

(i) $$I_1 = \int_a^b \int_{f_1(x)}^{f_2(x)} f(x, y)\, dy \cdot dx$$



படம் 79

இங்கு

தொகுபடும் சார்பு $f(x, y)$. தொகையீட்டின் வெளி (Region) $y = f_1(x)$, $y = f_2(x)$ என்ற வளைவரைகள் $x = a$, $x = b$ என்ற குத்தாயங்கள் இவற்றிற்கிடைப்பட்ட பரப்பு.

படத்தில் $y = f_1(x)$ வளைவரை APB

$y = f_2(x)$ வளைவரை DQC

பரப்பு $ABCD$ யை y-அச்சுக்கு இணையாக வரைந்த dx அகலமும் PQ நீளமுமுள்ள, நுண் நீள் சதுரங்களாக்குக.

$OM = x$ ஐ நிலையாக வைத்து PQ ஓரமாக P யிலிருந்து Q வரையிலும் தொகையிட

$$\sum f(x, y)\, dy = \int_{f_1(x)}^{f_2(x)} f(x, y)\, dy$$

கிடைத்த தொகையீட்டை dx-ஆல் பெருக்க

$$\left[\int_{f_1(x)}^{f_2(x)} f(x, y) \cdot dy \right] dx \text{ ஆகும்.}$$

நீள் சதுரத்தை AD யிலிருந்து BC வரையிலும் நகர்த்த $ABCD$ என்ற வெளியில் கிடைக்கும் தொகைகளின் கூடுதல்

$$= \sum_{x=a}^{x=b} \left[\int_{f_1(x)}^{f_2(x)} f(x, y)\, dy \right] dx$$

$$I_1 = \int_a^b \int_{f_1(x)}^{f_2(x)} f(x, y)\, dy \cdot dx$$

$$I_2 = \int_c^d \int_{f_1(y)}^{f_2(y)} f(x, y)\, dx \cdot dy$$



படம் 8)

இங்கு,

தொகையீட்டின் வெளி : $x = f_1(y)$

$x = f_2(y)$

என்ற வளைவரைகள் ; $y = c$ $y = d$ என்ற x-அச்சுக்கு இணையான கோடுகள், இவற்றிற்கிடைப்பட்ட வெளி

படத்தில் :

$$x = f_1(y) \text{—வளைவரை } APB$$

$$x = f_2(y) \text{—வளைவரை } CQD$$

பரப்பு $ACDB$யை x-அச்சுக்கு இணையாக வரைந்த dy-அகலமுள்ள நுண் நீள் சதுரங்களாக்குக.

$ON = y$, y-ஐ நிலையாக வைத்து, PQ ஓரமாக P-யிலிருந்து Q-வரையிலும் தொகையிட,

$$\Sigma f(x, y)\, dx = \int_{f_1(y)}^{f_2(y)} f(x, y)\, dx.$$

வந்த தொகையீட்டை dy-ஆல் பெருக்க

$$\left[\int_{f_1(y)}^{f_2(y)} f(x, y) \cdot dx\right] dy \text{ ஆகும்.}$$

PQ-யை AC-யிலிருந்து BD-வரையிலும் உயர்த்திச் செல்ல $ACBD$ வெளியில் கிடைக்கும் தொகைகளின் கூடுதல்

$$= \sum_{y=c}^{y=d} \left[\int_{f_1(y)}^{f_2(y)} f(x, y)\, dx\right] dy$$

$$I_2 = \int_c^d \int_{f_1(y)}^{f_2(y)} f(x, y) \cdot dx\, dy.$$

குறிப்பு : I_1, I_2 இவற்றில் முறையே $y = c$, $y = d$, $x = a$, $x = b$ என மாறிலிகளாக எல்லா எல்லைகளும் இருந்தால்,

$$I_1 = \int_a^b \int_c^d f(x, y)\, dy \cdot dx \quad \ldots\ldots \text{ (i)}$$

$$I_2 = \int_c^d \int_a^b f(x, y)\, dx \cdot dy. \quad \ldots\ldots \text{(ii)}$$ எனவாகும்.

அப்போது, தொகையீடு காணும் வெளி கீழே படத்தில் கண்ட படி *ABCD* என்ற நீள் சதுரமாகும். தொகையீடு I_1 காண, முதலில் நெடுக்கைப் பகுதி (Vertical strip) *PQ*-யின் ஓரமாகத் தொகை கண்டு *dx*-ஆல் பெருக்கி வந்த மதிப்பை *AD*-யிலிருந்து



படம் 81.

BC-வரையிலும் நகர்த்தித் தொகையீடு செய்ய வேண்டும். அது போலவே I_2 காண, கிடைக்கைத்துண்டு (Horizontal strip) *RS* ஓரமாகத் தொகை கண்டு, *dy*-ஆல் பெருக்கி வந்த மதிப்பை *AB* யிலிருந்து *DC* வரையிலும் உயர்த்தித் தொகையீடு செய்ய வேண்டும்.

இங்கு $I_1 = I_2$ என்பது தெளிவு.

எனவே,

எல்லைகளெல்லாம் மாறிலிகளானல் இரு மாறித் தொகையீட்டில் இரு முறைகளில் கிடைக்கும் மதிப்புகளும் ஒன்றேயாதலால் எம் முறையேனும் தொகையிடலாம்.

எ. கா.

$\int \int xy\, dx \cdot dy$ என்ற இரு மாறித் தொகையீட்டை நீள் வட்டம் $\frac{x^2}{a^2} + \frac{y^2}{b^2} = 1$-ன் மிகை நாற் கவசப் பகுதியில் மதிப்பிடுக.

$\int xy \cdot dx$ *PQ*-யின் ஓரமாகக் காணும் தொகை.

∴ எல்லைகள்

$$x = 0, \; x = a\sqrt{1 - \frac{y^2}{b^2}}$$

பிறகு, PQ-வை OX-லிருந்து B-வரை உயர்த்தவேண்டும்.
$y = 0, \; x = b.$

எல்லைகள்



படம் 82.

$$I = \int_0^b \int_0^{a\sqrt{1 - \frac{y^2}{b^2}}} xy \cdot dx \cdot dy$$

$$I = \int_0^b \left[\int_0^{a\sqrt{1 - \frac{y^2}{b^2}}} xy \cdot dx \right] dy.$$

$$= \int_0^b y \left[\frac{x^2}{2} \right]_0^{a\sqrt{1 - \frac{y^2}{b^2}}} \cdot dy \qquad = a^2 \int_0^b \frac{y}{2} \left(1 - \frac{y^2}{b^2} \right) \cdot dy$$

$$= \frac{a^2}{2b^2} \int_0^b (b^2 y - y^3) \, dy$$

$$= \frac{a^2}{2b^2} \left[b^2 \frac{y^2}{2} - \frac{y^4}{4} \right]_0^b = \frac{a^2}{2b^2} \times \frac{b^4}{4} = \frac{a^2 b^2}{8}$$

பயிற்சிகள் 51

1. $\int\int dx\, dy$-ஐக் கீழ்க்கொடுத்தபடி மதிப்பிடுக.

(i) $\frac{x}{a} + \frac{y}{b} \le 1$ (a, b மிகை எண்கள்) என்ற வெளியில்

(ii) $x^2 + y^2 \le a^2$ என்ற வெளியில்

2. $\int\int xy\, dx \cdot dy$ என்பதை

(i) $\frac{x}{a} + \frac{y}{b} = 1$, அச்சுகளின் மிகை நாற்கூறுப் பகுதி (positive quadrant) வெளியில்,

(ii) $x^2 + a^2 = a^2$ வட்டத்தின் மிகை நாற்கூறுப் பகுதியில்

(iii) அச்சுகள், $x = a$, $x = b$ குத்தாயங்கள் இவற்றிற்கிடைப்பட்ட வெளியில் மதிப்பிடுக.

3. $\int\int (x^2 + y^2)\, dx \cdot dy$ என்பதை

(i) $\frac{x^2}{a^2} + \frac{y^2}{b^2} = 1$ என்ற நீள்வட்டத்தின் பரப்பின் மேல்

(ii) $x + y = 1$ அச்சுகளின் மிகை நாற்கூறுப் பகுதியில் (positive quadrant) அடைபடும் பரப்பின் மேல், மதிப்பிடுக.

§ 75. இருமாறித் தொகையீட்டின் பயன்கள் (Applications)

1. பரப்பளவு காணல் :

(a) தெக்காட்டின் அச்சுத் தொலைவுகளில் (Cartesian Co-ordinates).



படம் 83

$y = F(x)$, $y = f(x)$ என்ற வளைவரைகளுக்கும், $x = a$ $x = b$ என்ற குத்தாயங்களுக்கும் இடைப்பட்ட பரப்பளவைக் காண வேண்டுமாயின், படத்தில் கண்டதுபோல்,

பரப்பை $\triangle x$ அகலமுள்ள நுண்ணிய நெடுக்கை (Vertical)த் துண்டுகளாகப் பிரித்திடுக. அதனுள் P, Q புள்ளிகள் முறையே (x, y), $(x+\triangle x, y+\triangle y)$ ஆயத் தொலைவுகளைக் குறிக்கட்டும்.

நுண்ணிய நீள்சதுரம் PQ-யின் பரப்பு $= \triangle x \cdot \triangle y$.

$$\therefore \text{ நீள் சதுரம் } RS\text{-ன் பரப்பு} = \underset{\triangle y \to 0}{\text{எல்லை}} \sum (\triangle x \cdot \triangle y)$$

நீள்சதுரம் RS-ல் அடங்கியுள்ள நுண்ணிய நீள் சதுரங்களின் அகலம் $\triangle x$. அவற்றின் உயரங்களின் எல்லைகள் $y=f(x)$-லிருந்து $y=F(x)$ வரையிலுமுள்ளது. வரையறுத்த தொகையீடானது ஓர் ஒருங்கும் கூட்டுத் தொடரின் கூடுதலின் எல்லை, என்ற அடிப்படை விதிப்படி

$$RS\text{-ன் பரப்பு} = \triangle x \underset{\triangle y \to 0}{\text{எல்லை}} \sum_{f(x)}^{F(x)} \triangle y$$

$$= \triangle x \int_{f(x)}^{F(x)} dy$$

இப்போது, $x=a$, $x=b$ எல்லைக்குள் அடங்கிய, RS போன்ற எல்லா நெடுக்கைத் துண்டுகளையும் ஒன்றுகச் சேர்த்துத் தொகை கண்டால் வேண்டிய பரப்பளவு கிடைக்கும்.

$$\text{பரப்பளவு} = \underset{\triangle x \to 0}{\text{எல்லை}} \sum_{x=a}^{x=b} \triangle n \cdot \int_{f(x)}^{F(x)} dy$$

$$= \int_a^b dx \int_{f(x)}^{F(x)} dy$$

$$= \int_a^b \left[\int_{f(x)}^{F(x)} dy \right] dx.$$

$$= \int_a^b \int_{f(x)}^{F(x)} dy \cdot dx$$

கிளை :

$x = \phi(y), x = \psi(y)$ என்ற வளைவரைகளுக்கும், $y = c$, $y = d$ என்ற கோடுகளுக்கும் இடைப்பட்ட பரப்பு

$$\int_c^d \int_{\phi(y)}^{\psi(y)} dx \cdot dy$$ என்று காணலாம்.

எ. கா. 1.

இருமாறித் தொகையீட்டில் $y = \dfrac{16}{x^2 + 4}$, $y = \dfrac{x^2}{4}$ என்ற வளைவரைகளுக்கும் $x = 0$, $x = 2$ என்ற கோடுகளுக்குமிடைப் பட்ட பரப்பளவைக் கணக்கிடுக.

$$\text{பரப்பளவு} = \int \int dy \cdot dx$$

$$= \int_0^2 \int_{\frac{x^2}{4}}^{\frac{16}{x^2+4}} dy \cdot dx,$$ பரவளைவு. $y = \dfrac{x^2}{4}$

ஆதிவழியே செல்கிறது.

$$\text{பரப்பளவு} = \int_0^2 \left[\frac{16}{x^2 + 4} - \frac{x^2}{4} \right] dx$$

$$= 16 \times \frac{1}{2} \left[\tan^{-1} \frac{x}{2} \right]_0^2 - \frac{1}{4 \cdot 3} \left(x^3 \right)_0^2$$

$$= 8 \cdot \frac{\pi}{4} - \frac{8}{4 \cdot 3} = 2\pi - \frac{2}{3}$$

$$= \frac{3}{2} (3\pi - 1)$$

எ. கா. 2.

$xy = 4,\ 2x = 5 + 4y - y^2,\ y = 4$ இவற்றிற்கு இடைப் பட்ட பரப்பைக் காண்க.

இங்கு வளைவரைகள் சந்திக்கும் புள்ளியைக் காண $xy = 4$, $2x = 5 + 4y - y^2$ என்றவற்றிலிருந்து

$$2xy = y(5 + 4y - y^2) = 8$$

$$5y + 4y^2 - y^3 = 8$$

$$f(y) = y^3 - 4y^2 - 5y = 8 = 0$$

$$f(1)\, 0 \quad \therefore \quad y = 1,\ x = 4$$

$\therefore$ எல்லைகள் $x = \frac{4}{y}, x = \frac{5 + 4y - y^2}{2};\quad y = 1,\ y = 4$

$$\therefore \text{ பரப்பளவு } = \int_1^4 \int_{\frac{4}{y}}^{\frac{5+4y+y^2}{2}} dx \cdot dy$$

$$= \int_1^4 \left(\frac{5}{2} + 2y - \frac{y^2}{2} - \frac{4}{y}\right) dy$$

$$= \frac{5}{2}(4 - 1) + \frac{2}{2}(16 - 1) - \frac{1}{6}(64 - 1) - 4(\log 4).$$

$$= 12 - 8 \log 2.$$

பயிற்சி 52

இருமாறித் தொகையீட்டு முறையில் கொடுத்துள்ள வரம்பு களுக்குட்பட்ட பரப்பளவுகளைக் காண்க.

1. பரவளைவுகள் $3x^2 = 2y,\ y^2 = 18x$.
2. பரவளைவு $y = 3 - x^2$, $y = x + 1$ என்ற கோடு.

3. பரவளைவு $y^2 = 9 - 9x$, $x^2 + y^2 = 9$ என்ற வட்டத்தின் இடதுபாதி.

4. பரவளைவு $y^2 = 2x$, $x^2 + y^2 - 4x = 0$ என்ற வட்டத்தின் வலதுபாதி.

5. $y = \frac{4}{x^2 + 3}$, $x^2 + y^2 - 2y = 0$ வட்டத்தின் மேல்பாதி.

6. $xy = 4$, $x = 9 - y^2$ என்ற வளைவரைகள் $y = 1$, $y = 2$ என்ற கோடுகள்

7. $x = 1$ என்ற கோட்டிற்கும் $y = \frac{4}{\sqrt{4 - x^2}}$, $x^2 + y^2 = 4$ என்ற வளைவரைகளின் அச்சுகளின் முதல் நாற்கூறுப் பகுதியில் (First quadrant) உள்ள பாகங்கள்.

8. $x^2 + y^2 = a^2$, $x^{\frac{2}{3}} + y^{\frac{2}{3}} = a^{\frac{2}{3}}$ என்ற வளைவரைகளின் அச்சுகளின் முதல் நாற்கூறுப் பகுதியிலுள்ள பாகம்.

9. $x^2 + y^2 - 2ax = 0$, $y^2 = \frac{x^3}{2ax - x}$ என்பனவற்றின் அச்சுகளின் முதல் நாற்கூறுப் பகுதியின் பாகங்கள்.

§ 76. ஒரு சமதளப்பரப்பின் புவிக் கவர்ச்சி மையமும் நிலை கெம்புத்திறனும் (C. G. and M. I. of a plane Area)

1. ஒருமெல்லிய தகட்டின் நிறை (Mass) காணல் :

தகட்டின் அடர்த்தி (x, y) என்ற ஒரு புள்ளியில் x, y களின் சார்பு $f(x, y)$ எனக் கொள்வோம்.

புள்ளி (x, y) யில் நுண்பரப்பு $= dx \cdot dy$

$$\therefore \quad \text{நுண் நிறை} = \rho \cdot dx \cdot dy$$

$$\therefore \quad \text{பரப்பின் நிறைத் தொகை} = \int_a^b \int_{g(x)}^{f(x)} \rho \cdot dy \cdot dx$$

$$= \int_a^b \int_{g(x)}^{f(x)} f(x, y)\, dy \cdot dx$$

2. சமதளப்பரப்பின் பு. க. மையம் (C. G. of plane lamiana)

(x, y) என்ற புள்ளியில் பரப்பின் நிறை $= \rho \cdot dx \cdot dy$

தகட்டின் பு. க. மையம் $(\bar{x}, \bar{y})$ எனில்

$$\bar{x} = \frac{\int_a^b \int_{g(x)}^{f(x)} \rho \cdot x \cdot dy \cdot dx}{\int_a^b \int_{g(x)}^{f(x)} \rho \cdot dy \cdot dx}$$

$$\bar{y} = \frac{\int \int \rho \cdot y \, dy \, dx}{\int \int \rho \, dy \cdot dx}$$

என்ற வாய்பாடுகளை ஒருமாறி வரையறைத் தொகையீடுகளில் பு.க. மையங்காணுங்கால் விளக்கினோம்.

3. நி. நெ. தி. ($M. I.$)

OX-ஐ யொட்டி நி. நெ. தி $I_x = \int_a^b \int_{g(x)}^{f(x)} \rho \, y^2 \cdot dy \cdot dx$

OY-ஐ யொட்டி நி. நெ. தி $I_y = \int_a^b \int_{g(x)}^{f(x)} \rho \, x^2 \cdot dy \cdot dx$

OZ-ஐ யொட்டி நி. நெ. தி $I_z = \int_a^b \int_{g(x)}^{f(x)} (x^2 + y^2) \, dy \, dx$

$$= I_x + I_y$$

இவ்வாய்பாடுகளும் ஒருமாறி வரையறைத் தொகையீட்டில் அறிந்தவையாகும்.

எ. கா. 1.

1. வட்டத் தகட்டின் அடர்த்தி ஒரு புள்ளியில் குறிப்பிட்ட ஒரு விட்டத்திலிருந்து அப்புள்ளியின் தூரத்தின் வர்க்கத்திற்கு நேர் விகிதமென்றால் வட்டத்தகட்டின் நிறையைக் காணவும்.



படம் 84

குறிப்பிட்ட விட்டத்தை X-அச்சாகக் கொண்டால் வட்டம் $x^2 + y^2 = a^2$.

$$\therefore \quad y = \sqrt{a^2 - x^2}$$

$\rho = ky^2$, k-ஒரு மாறிலி.

$$\triangle A = dx \cdot dy$$

$$\therefore \quad \triangle m = \rho \cdot dx \cdot dy = ky^2\, dx \cdot dy$$

$$\therefore \quad M = 4 \int_0^a \int_0^{\sqrt{a^2 - x^2}} k \cdot y^2\, dy \cdot dx.$$

$$= 4k \int_0^a \left(\frac{y^3}{3}\right)_0^{\sqrt{a^2 - x^2}} dx$$

$$= \frac{4k}{3} \int_0^a (a^2 - x^2)^{\frac{3}{2}} \cdot dx$$

$x = a \sin\theta$ எனப்பிரதியிட,

$dx = a \cos\theta \cdot d\theta$.

$$M = \tfrac{4}{3}\, k \int_0^{\frac{\pi}{2}} a^3 \cdot \cos^3\theta \cdot a \cos\theta \cdot d\theta$$

$$= \frac{4}{3}\, k\, a^4 \int_0^{\frac{\pi}{2}} \cos^4\theta \cdot d\theta = \frac{4}{3}\, k\, a^4\, \frac{3 \cdot 1}{4 \cdot 2} \cdot \frac{\pi}{2}$$

$$= \frac{\pi\, k\, a^4}{4}$$

எ. கா. 2.

பரவளைவு $y = 2x^2 - 8x + 5$, கோடு $y = 2x - 3$ இவற்றிற்கிடைப்பட்ட பரப்பின் பு. க. மையம் காண்க.

சமன்பாடுகளைத் தீர்க்க,

$$2x^2 - 8x + 5 = 2x - 3$$

$$2x^2 - 10x + 8 = 0$$

$$x^2 - 5x + 4 = 0$$

$$(x-1)(x-4) = 0 \qquad \therefore \quad x = 1, \quad x = 4$$

$$y = -1, \quad y = 5.$$

$\therefore$ பரவளைவும், கோடும் $(1, -1)$, $(4, 5)$ புள்ளிகளில் வெட்டுகின்றன.



படம் 85

தொகையீடு செய்யும் எல்லைகள்

$$x = 1, \; x = 4$$

$$y = 2x^2 - 8x + 5$$

$$y = 2x - 3$$

$(\bar{x}, \bar{y})$ பரப்பின் பு. க. மையமெனில்

$$\bar{x} = \frac{\int\int x \cdot dy \cdot dx}{\int\int dy \cdot dx}$$

$$\bar{y} = \frac{\int\int y \cdot dy \cdot dx}{\int\int dy\, dx}$$

$$\text{பரப்பு } A = \int_1^4 \int_{2x^2-8x+5}^{2x-3} dy \cdot dx$$

$$= \int_1^4 \left[(2x - 3) - (2x^2 - 8x + 5 \right] dx$$

$$= \left[-2\frac{x^3}{3} + 10\frac{x^2}{2} - 8x \right]_1^4 = 9$$

$$9 \cdot \bar{x} = \int_1^4 \int_{2x^2-8x+5}^{2x-3} x\, dy \cdot dx$$

$$= \int_1^4 x \left[(2x - 3) - (2x^2 - 8x + 5 \right] dx.$$

$$= \int_1^4 x\,(-2x^2 + 10x - 8)\,dx$$

$$= \int_1^4 (-2x^3 + 10x^2 - 8x)\,dx. = \frac{45}{2}$$

$$\therefore\quad \bar{x} = \frac{45}{2 \times 9} = \frac{5}{2}$$

$$9\,\bar{y} = \int_1^4 \int_{2x^2-8x+5}^{2x-3} y\cdot dy\cdot dx$$

$$= \int_1^4 \tfrac{1}{2}\,[(2x-2)^2 - (2x^2 - 8x + 5)^2]\,dx$$

$$= \frac{9}{5} \qquad \therefore\quad \bar{y} = \frac{1}{5}.$$

∴ பு.க. மையம் $(\frac{5}{2}, \frac{1}{5})$

எ. கா. 3.

$\left(\frac{x}{a}\right)^{\frac{2}{3}} + \left(\frac{y}{b}\right)^{\frac{2}{3}} = 1$ என்ற வடிவத்திலுள்ள ஒரு தகட்டின் அடர்த்தி $\rho = K\cdot xy$ எனவுளது. அதன் நாற்கூறுப் பகுதியின் பு. க. மையம் காண்க.

பரப்பு

$$A = \int\int \rho\cdot dy\cdot dx$$

$$= \int_0^a \left[\int_0^y K\,xy\cdot dy\right] dx$$



படம் 86

$$= \int_0^a K x \cdot \frac{y^2}{2} \cdot dx$$

$x = a \cos^3\theta, \quad y = b \sin^3\theta$ எனில்

$$A = -\frac{k}{2}\int_{\frac{\pi}{2}}^{0} a \cos^3\theta \cdot b^2 \sin^6\theta \cdot 3 \cdot a \cos^2\theta \cdot \sin\theta \, d\theta.$$

$$= \frac{3Ka^2b^2}{2}\int_0^{\frac{\pi}{2}} \sin^7\theta \cdot \cos^5\theta \cdot d\theta = \frac{3Ka^2b^2}{2}, I_{7,5}$$

$$A \cdot \bar{x} = \int \int \rho \cdot x \cdot dy \cdot dx$$

$$= \int_0^a \int_0^y \cdot k x^2 y \cdot dy \cdot dx$$

$$= \int_0^a k x^2 \cdot \frac{y^2}{2} \cdot dx$$

$$= -\frac{k}{2}\int_{\frac{\pi}{2}}^{0} a^2 \cdot \cos^6\theta \cdot b^2 \sin^6\theta \cdot 3 a \cos^2\theta \cdot \sin\theta \cdot d\theta.$$

$$= \frac{+3k a^3 \cdot b^2}{2}\int_0^{\frac{\pi}{2}} \sin^7\theta \cdot \cos^8\theta \cdot d\theta$$

$$= \frac{3ka^3b^2}{2} \cdot I_{7,8}.$$

$$\bar{x} = \frac{3\frac{k}{2}a^3 b^2 . \Gamma 7, 8}{3\frac{k}{2} a^2 b^2 . \Gamma 7 . 5} = \frac{\Gamma 7, 8}{\Gamma 7, 5} \cdot a$$

$$= \frac{128}{429} a.$$

அதுபோலவே $\bar{y} = \frac{128}{429} b$

$\therefore$ பு. க. மையம் $= \left(\frac{128}{429} a, \frac{128}{429} b \right)$

எ. கா. 4.

$\int\int x^2 \, dx \cdot dy$ தொகையீட்டை $\frac{x^2}{a} + \frac{y^2}{b} = 1$ என்ற நீள் வட்டத்தின் பரப்பில் மதிப்பிடுக. அதனின்று $\int\int r^2 \, dx \cdot dy$-ன் தொகையீட்டின் மதிப்பை $r^2 = x^2 + y^2$ என்ற பரப்பின்மேல் கணக்கிடுக.

இத்தொகையீடுகள் எதைக் குறிக்கின்றன ?

(a) முதல் தொகையீட்டை நீள்வட்டத்தின் மிகை நாற் கூறுப் பகுதியின் மேல் கண்டு நான்கு மடங்காக்குவோம்.

இத்தொகையீடு, வாய்பாட்டின்படி, y அச்சையொட்டி நீள் வட்டத்தின் நி. நெ. திறனாகும்.

$$\therefore \; Iy = \int\int x^2 \, dx \cdot dy$$

$$= 4\int_0^b \left[\int_0^{x = a\sqrt{1 - \frac{y^2}{b^2}}} x^2 \cdot dx \right] dy$$

$$= 4 \int_0^b \frac{a^3}{3} \left(1 - \frac{y^2}{b^2}\right)^{\frac{3}{2}} dy$$

$$= 4\,\frac{a^3}{3}\int_0^{\frac{\pi}{2}} \cos^3\theta \cdot b\cos\theta \cdot d\theta, \quad y = b\sin\theta \text{ எனில்;}$$

$$= 4\,\frac{a^3 b}{3}\int_0^{\frac{\pi}{2}} \cos\theta^4 \cdot d\theta = \frac{4a^3 b}{3}\cdot\frac{3\cdot 1}{4\cdot 2}\cdot\frac{\pi}{2}$$

$$= \frac{\pi\, a^3\, b}{4}$$

இதுபோலவே நி. நெ. தி y-அச்சையொட்டி $Ix = \frac{\pi\, b^3\, a}{4}$

(b) $r^2 = x^2 + y^2$

$$\therefore \int\int r^2\, dx\cdot dy = \int\int (x^2 + y^2)\, dx\cdot dy$$

$$= \int\int x^2\, dx\cdot dy + \int\int y^2\cdot dx\cdot dy$$

$$= Iy + Ix$$

$$= \frac{\pi}{4}\, a^3\, b + \frac{\pi}{4}\, b^3 a$$

$$= \frac{\pi\, ab}{4}\,(a^2 + b^2)$$

$$= Iz$$

இது, நீள்வட்டத்தின் தளத்திற்குச் செங்குத்தாக அதன் பு.கூ. மையத்தின் வழியாகச் செல்லும் அச்சையொட்டி நி. நெ. திறனாகும்.

பயிற்சிகள் 53

இருமாறித் தொகையீட்டில் கீழே கொடுத்துள்ள எல்லைகளி லடங்கிய பரப்புகளின் நிறை மையம் காண்க.

1. $y = 4x - x^2$, $y = x^2$ என்ற பரவளைவுகள் ;
2. பரவளைவு $y^2 = 8x$, வளைவரை $2y = x^3$;

3. பரவளைவு $y = 3 - x^2$, கோடு $y = x + 1$;

4. கோடுகள் $3y = x$, $2y = 3x$, $x = 6$;

5. பரவளைவு $y^2 = 8 - 2x$, வட்டம் $y^2 = 4x - x^2$ முதல் எண்பகுதியில்.

6. முதல் அரைக்கால் வட்டப் பகுதியில் $y = \sin x$, $2x - \pi y = 0$;

7. $y = \cos x$, y அச்சு, $y = 2$. $x = \frac{\pi}{2}$ என்ற கோடுகள்;

8. வளைவரை $y = e^x$, y அச்சு, கோடுகள் $2y = x$, $x = 2$;

கீழ்க்கண்டவற்றில் நிலைநெம்புத் திறனைக் காண்க.

9. பயிற்சி (1)லுள்ள பரப்பிற்கு y-அச்சையொட்டி

10. பயிற்சி (2)லுள்ள பரப்பிற்கு x-அச்சையொட்டி

11. பயிற்சி (3)லுள்ள பரப்பிற்கு y-அச்சையொட்டி

12. பயிற்சி (4)லுள்ள பரப்பிற்கு x-அச்சையொட்டி

13. பயிற்சி (2)லுள்ள பரப்பிற்கு ஆதிப் புள்ளியையொட்டி துருவ ஆயங்களில் நிலை நெம்புத் திறன் காண்க.

§ 77. கோண தூரக் கூறுகளான பரப்பு (Polar Co-ordinahes)



படம் 87 (a)



படம் 87 (b)

படம் (a)-யில் பரப்பு $BCDE$, $r = f(\theta)$, $r = g(\theta)$ என்ற துருவ ஆயச் சமன்பாடுகள் கொண்ட வளைவரைகளுக்கும் $\theta = \alpha$, $\theta = \beta$ என்ற நேர் கோடுகளுக்குமிடைப்பட்டது.

ஒன்றுக்கொன்று நுண்கோணம் $\triangle\theta$ இருக்குமாறு கணக்கற்ற ஆரைக் கோடுகள் வரைந்து α-β வைச் சம அளவுகளுள்ள பகுதிகளாக்குக. இதுபோலவே ஆதியைப் பொது மையமாகக் கொண்டு ஒன்றுக்கொன்று $\triangle r$ இடைத்தூரம் இருக்குமாறு கணக்கற்ற ஆரைகள் வரைந்து, பரப்பு $BCDE$-யை $PQRS$ போன்ற நுண் பரப்புகளாகப் பிரித்திடுக.

P, R என்ற புள்ளிகள் (r, θ), $(r+\triangle r, \theta+\triangle\theta)$ என்க, பரப்பு $BCDE$-யை A என்றும், நுண் பரப்பு $PQRS$-ஐ $\triangle A$ என்றும் குறிப்போம்.

இப்போது, $\triangle A = \frac{1}{2}(r+\triangle r)^2 \cdot \triangle\theta - \frac{1}{2} r^2 \cdot \triangle\theta$

$$\underset{\triangle\theta\to 0}{\text{எல்லை}} \triangle A = \underset{\triangle\theta\to 0}{\text{எல்லை}} \left[r\triangle r \cdot \triangle\theta + \tfrac{1}{2}(\triangle r)^2 \cdot \triangle\theta \right]$$

$= (r\triangle r)\cdot\triangle'$, முதற்படி நுண் அண்ணளவாக

OPQ, வளை வரைகளை T, U-வில் வெட்டுகின்றது. OT, OU ஆரைகளாக வரைந்த வட்டங்கள் OSR-ஐ W, V யில் வெட்டுகின்றன.

பரப்பு $TUVW$-ல் உள்ள எல்லா நுண் பகுதிகளுக்கும் $\triangle\theta$ பொது. $\therefore$ பரப்பு $TUVW$

$$= \left[\underset{\triangle r\to\theta}{\text{எல்லை}} \Sigma (r\cdot\triangle r) \right] \triangle\theta$$

$$= \left[\int_{g(\theta)}^{f(\theta)} r\,dr \right] \triangle\theta$$

அடுத்து,

$BCDE$ என்ற பரப்பு $TUVW$ போன்ற $\triangle\theta$ இடைக் கோணமுள்ள பல நுண் பகுதிகள் கொண்டது

$$\therefore \text{ பரப்பு } BCDE = \underset{\triangle\to\theta}{\text{எல்லை}} \sum_{\theta=\alpha}^{\theta=\beta} \left[\int_{g(\theta)}^{f(\theta)} r\cdot dr \right] \triangle\theta$$

$\therefore$ வரையறைத் தொகை ஓர் ஒருங்கும் முடிவிலித் தொடரின் கூடுதலின் எல்லை என்ற அடிப்படை விதிப்படி,

$$\text{பரப்பு } BCDE = \int_{\alpha}^{\beta} \int_{g(\theta)}^{f(\theta)} \cdot r \cdot dr \cdot d\theta$$

படம் (*b*)-ல் $BCDE$ என்ற பரப்பு $\theta = \psi(r)$, $\theta = \phi(r)$ என்ற ஆரைக் கோடுகளுக்கும் $r = a$, $r = b$ ஆரைகளாகவும், ஆதியைப் பொது மையமாகவும் கொண்டு வரைந்த வட்டங்களுக்கும் இடைப்பட்டதாகும்.

இங்கு,

$$\text{நுண்பரப்பு } PQRS = (r \cdot \Delta\theta) \cdot \Delta r$$

$$\text{பரப்பு } TUVW = \left[\text{எல்லை}_{\Delta\theta \to 0}\ r \cdot \Delta\theta\right] \Delta r$$

$$= \left[\int_{\psi(r)}^{\phi(r)} r d\theta\right] dr$$

$$\text{பரப்பு } BCDE = \text{எல்லை}_{\Delta r \to 0} \sum_{r=a}^{r=b} \left[\int_{\psi(r)}^{\phi(r)} r\, d\theta\right] \Delta r$$

$$= \int_{a}^{b} \int_{\psi(r)}^{\phi(r)} r \cdot d\theta \cdot dr$$

எ. கா. 1.

நெஞ்சுவளை $r = a(1 + \cos\theta)$-ன் பரப்பை இருமாறித் தொகையீட்டில் காண்க.

$$\text{பரப்பு} = 2 \int_{0}^{\pi} \int_{r=0}^{a(1+\cos\theta)} r\, dr \cdot d\theta$$



படம் 88

$$= 2 \int_0^{\pi} \left(\frac{r^2}{2} \right)_0^{a(1+\cos\theta)} d\theta$$

$$= \int_0^{\pi} a^2 (1 + \cos\theta)^2 \, d\theta$$

$$= a^2 \int_0^{\pi} 4 \cos^4 \frac{\theta}{2} \cdot d\theta = 8a^2 \int_0^{\frac{\pi}{2}} \cos^4\phi \, d\phi \quad \phi = \frac{\theta}{2}$$

$$= 8a^2 \left(\frac{3 \cdot 1}{4 \cdot 2} \right) \frac{\pi}{2} = \frac{3}{2} \pi a^2$$

எ. கா. 2.

$r = a\cos\theta$ என்ற வட்டத்தினுள்ளேயும் $r = a(1 - \cos\theta)$ என்ற நெஞ்சுவளைக்கு வெளியேயுமுள்ள பரப்பைக் கணக்கிடுக.



படம் 89

வட்டமும் நெஞ்சு வளையமும் வெட்டும் புள்ளிகளைக் காண,

$$r = a\cos\theta$$

$$r = a(1 - \cos\theta)$$

இவற்றிலிருந்து

$$a\cos\theta = a(1 - \cos\theta)$$

$$2\cos\theta = 1$$

$$\theta = \frac{\pi}{3}$$

தொடக்கக்கோடு OX-ன் மேற்பகுதியிலுள்ள பரப்பைக்கண்டு (சமச் சீரான பண்புப்படி) அதில் இருமடங்கு காண வேண்டும்.

θ-ன் எல்லைகள் $0, \frac{\pi}{3}$

r-ன் எல்லைகள் $a(1-\cos\theta)$, $a\cos\theta$

$$A = 2 \int_0^{\frac{\pi}{3}} \left[\int_{a(1-\cos\theta)}^{a\cos\theta} r \cdot dr \right] \cdot d\theta$$

$$= 2a^2 \int_0^{\frac{\pi}{3}} \tfrac{1}{2} (\cos^2\theta - 1 + 2\cos\theta - \cos^2\theta)\, d\theta$$

$$= a^2 \int_0^{\frac{\pi}{3}} (2\cos\theta - 1) \cdot d\theta$$

$$= 2a^2 (\sin\theta)_0^{\frac{\pi}{3}} - a^2 (\theta)_0^{\frac{\pi}{3}}$$

$$= 2a^2 \cdot \frac{\sqrt{3}}{2} - a^2 \cdot \frac{\pi}{3} = \frac{a^2}{3} (3\sqrt{3} - \pi)$$

எ. கா. 3.

$r^2 = 2a^2 \cos 2\theta$ என்ற வளைவரை, (lemniscate), $r = 2a \sin\theta$ என்ற வட்டம், $\theta = \frac{\pi}{4}$ என்ற நேர்கோடு இவற்றிற்கிடைப்பட்ட பரப்பைக்காண்க.



படம் 90

வளைவரையும், வட்டமும் சந்திக்கும் புள்ளி B-யைக்காண,

$$r^2 = 2a^2 \cdot \cos 2\theta \qquad \text{(i)}$$

$$r = 2a \cdot \sin\theta \qquad \text{(ii)}$$

$$\theta = \frac{\pi}{4} \qquad \text{(iii)}$$

(i), (ii) லிருந்து

$$2a^2 \cos 2\theta = 4a^2 \sin^2\theta$$

$$\cos 2\theta = 2 \sin^2\theta \quad \tan^2\theta = \frac{1}{3}; \ \theta = \frac{\pi}{6}$$

$$\cos^2\theta = 3 \sin^2\theta$$

$\therefore$ புள்ளி $B\left(a, \frac{\pi}{6}\right)$ ஆகும்.
